# குர்ஆனின் குரல்

محرم ١٤٤٤

ஆகஸ்ட் – 2022

₹25/-



**புனித மக்காவில் உம்ரா செய்யக்கூடிய ஹாஜிகள் இஹ்ராம் அணியக்கூடிய**

**மஸ்ஜிதே ஆயிஷா (ரளி) பள்ளிவாசல்**

அன்பிலும் ...
பண்பிலும் ...

999 LUNGIES

*Not Just a Number,*
***IT'S TRUST!***

ஒரே க்ளிக்கில் வாங்க
www.999lungies.com

அணுகவும்
89399 97475

# அல்மதரஸதுர் ரப்பானிய்யா

## சென்னை.

### 5 ஆண்டு மவ்லவீ ஆலிம் பாடத் திட்டம்

அல்லாஹுதஆலாவின் பேரருளால் கடந்த ஐம்பது வருடங்களாக மதரஸா ரப்பானிய்யாவில் ஹிஃப்ழு மற்றும் ஆலிம் பிரிவு மிக சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்! இங்குள்ள கல்வித் திறமை மற்றும் தர்பியத்தின் சிறப்பை கண்டு பெரியார்கள் பாராட்டி நற்சான்று வழங்கியுள்ளனர்.

தற்போதைய அவசர தேவையை முன்வைத்து படித்த ஆர்வமுள்ள இளைஞர்களுக்காக இன்ஷா அல்லாஹ் ஐந்து ஆண்டு "மவ்லவீ ஆலிம்" பாடத் திட்டம் வரும் கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட இருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்!

**எண்ணத்தில் தூய்மை, கல்வியில் ஆழம், வாழ்க்கையில் சுன்னத், மார்க்கப் பணியில் ஆர்வம், இறைப் பொருத்தம் ஆகியவையே நோக்கங்களாகும்.**

**தகுதிகள் :** பனிரெண்டாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்றிருப்பது அல்லது திறமையுள்ள குர்ஆன் ஹாஃபிழாக இருப்பது.

**இரண்டு வருடங்களில் ஹாஃபிழ் :**

50 ஆண்டுகால ரப்பானிய்யாவின் அனுபவங்களின் அடிப்படையில் படிப்பும், திறமையும், ஆர்வமும் உள்ளவர்களுக்காக இரண்டு வருடங்களில் ஹாஃபிழ் ஆகும் சிறப்புத் திட்டமும் செயல்பட்டு வருகிறது.

**இறைநேசர்களால் உருவாக்கப்பட்ட ஏழு ஆண்டு "மவ்லவீ ஆலிம்" பாடத் திட்டம் இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து நடைபெறும்.**

**இன்ஷா அல்லாஹ் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்ற ஐந்து ஆண்டு பாடத்திட்டத்துக்கான பதிவு தொடர்ந்து நடைபெறும்.**

கடித தொடர்புக்கு :

## அல்மதரஸதுர் ரப்பானிய்யா

59/115, P.B.ரோடு, புரசைவாக்கம், சென்னை - 600007.

செல் : 8124929527, 8939394414




Customer Care: 9962 99 4444 | Missed Call: 9543006000

மாவட்ட வாரியான உதவிக்கு : • சென்னை : 7823997001, 7823997004, • பாண்டிச்சேரி - விழுப்புரம் : 7823997003, • வேலூர் - திருப்பத்தூர் : 7823997013 • மதுரை திண்டுக்கல் - காரைக்குடி : 7823997002 • சேலம் - ஓசூர் : 7823997005 • கோவை : 7823997007 • ஈரோடு - திருப்பூர் : 7823997006 • திருச்சி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை : 7823997015 • திருநெல்வேலி - நாகர்கோவில் : 7823997010

# சொல்லிலும் ஒழுக்கம் பேணுவீர்

وَإِذْ يَرْفَعُ إِبْرَاهِيمُ الْقَوَاعِدَ مِنَ الْبَيْتِ وَإِسْمَاعِيلُ ۖ رَبَّنَا
تَقَبَّلْ مِنَّا ۖ إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ ﴿١٢٧﴾

“இன்னும், (தூதர்கள்) இப்ராஹீமும் இஸ்மாயீலும் அவ்வீட்டின் அடித்தளங்களை உயர்த்தியபொழுது, “எங்களின் இறைவனே! (இக் கட்டடத்திருப்பணியை) எங்களிடமிருந்து நீ அங்கீகரித்துக் கொள் வாயாக! நிச்சயமாக நீயே (யாவற்றையும்) செவியேற்பவனாகவும், முற்றும் அறிந்தவனாகவும் இருக்கிறாய்” (என்று கூறினார்கள்)”

– அல்குர்ஆன் (2 :127)

---

நபி இப்ராஹீம் (அலை) அவர்களும், அவர்களின் மகனார் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களும் சேர்ந்து திருகஃபாவை கட்டியதையும், வேலை முடிந்த பிறகு - நபி இப்ராஹீம் (அலை) துஆ செய்த விதத்தையும் மேற்கூறப்பட்ட ஆயத்தில் அல்லாஹ் கூறுகிறான். அதில் சொல்லில் ஒழுக்கம் கற்பிக்கிறான். அதாவது கஃபா ஆலயத்தை நபி இப்ராஹீம் (அலை) நிலை நிறுத்தினார். அவருடன் அவரது மகன் இஸ்மாயீலும் (அலை) இருந்தார் என் கிறான். இப்ராஹீமும், இஸ்மாயீலும் சேர்ந்து கஃபா ஆலயத்தை கட்டினார்கள் எனக் கூறவில்லை! காரணம் வயதில் மூத்தவர் களும், இளையவர்களும் சேர்ந்து ஓர் நற்காரியத்தை நிறைவேற்றி னாலும், மூத்தவர்களே இக்காரியத்தை செயல்படுத்தினார்கள். வாலிபர்களும் ஒத்தாசையாக உடன் இருந்தார்கள் எனக் கூறவேண்டும் அதுவே ஒழுக்கம் என கற்பிக்கிறான் அல்லாஹ். எல்லாமே எங்களின் தந்தை தான். நாங்கள் உடன் செயல்பட்டோம் என்றே மகன்கள் கூற வேண்டும். எல்லாம் எங்கள் தலைவர் தான். நாங்கள் உடன் செயல்படுகிறோம். எல்லாமே என் வீட்டுக்காரரிடம் கேட்டே சொல்ல முடியும் - நானாக எம்முடிவும் எடுக்க மாட்டேன் என மனைவி கூறவேண்டும். இதுவே சொல்லின் ஒழுக்கமாகும்.

இன்னொரு ஒழுக்கமும் மேற்கூறப்பட்ட வசனத்தில் அல்லாஹ் கற்பிக்கிறான். அதாவது,

நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் கஃபாவின் கட்டிடப்பணி முடிந்த வுடன் யா அல்லாஹ்! உன் உத்தரவுக்கிணங்க கட்டி முடித்தேன். ஆனால் நீ நினைத்தவாறு செய்து முடித்தேனா என்று தெரிய வில்லை ரப்பே! இப்பணியை எங்களின் தரப்பிலிருந்து ஏற்பா யாக! நிச்சயம் நீ நன்கு அறிந்தவனாகவும் செவியுறுபவனாகவும்

இருக்கின்றாய் என பிரார்த்தனை செய்தார்கள். இப் பிரார்த்தனையும் அதன் ஒழுக்கமும் அல்லாஹ்வுக்கு பிரியமானதால் குர்ஆனின் வசனமாக்கிவிட்டான்.

ஹள்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் - ஒவ்வொரு நாளும் இஷாவிற்குப் பின் ஹள்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரளி)யிடமும், ஹள்ரத் உமர் (ரளி)யிடமும் ஊர் நடப்புகளை கேட்டு தெரிந்து கொள்வார்கள்.

இந்த நிகழ்ச்சியை ஹள்ரத் உமர் (ரளி) அவாகள் கூறும் பொழுது ஒவ்வொரு நாளும் இஷாவிற்குப் பின் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாட்டு நடப்பு - ஊர் நிகழ்வுகளை ஹள்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரளி)யிடம் கேட்டுக் கொண்டிருப்பார்கள். நானும் உடன் இருப்பேன் என்றார்கள். சொல்லில் எத்துனை ஒழுக்கம், நெறிமுறை பேணப்பட்டிருக்கிறது! இது போன்ற உயர் பண்புகளால்தான் ஹள்ரத் உமர் (ரளி)யின் அந்தஸ்தை அல்லாஹ் உயர்த்தினான்.

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட்.பரகத் அலீ பாஜில் பாகவி**

---


# வாசக நேயர்களின் மேலான கவனத்திற்கு...

இன்ஷா அல்லாஹ் எமது அலுவலகம் கீழ்கண்ட முகவரியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## குர்ஆனின் குரல்

4/25, எழில் நகர், மேலமடை,

**மதுரை – 625020.**

**செல் : 9442056547, 9486729192**

- குர்ஆனின் குரல் குழுமம்

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 65 ★ எதிரொலி – 8
முஹர்ரம் – 1444 ஆகஸ்ட் – 2022

## 1443 - 1444

ஹிஜ்ரி 1443ஆம் ஆண்டு நிறைவு பெற்று ஹிஜ்ரி 1444 இஸ்லாமிய புத்தாண்டு பிறக்கிறது. மிக்க மகிழ்வோடு இஸ்லாமிய புத்தாண்டை வரவேற்போம்!

நம்மவர் பெரும்பாலோருக்கு 'இஸ்லாமிய புத்தாண்டு' என்று பிறக்கின்றது என்றுகூட தெரிவதில்லை. அதைப்பற்றி தெரிந்து கொள்ள முயற்சிப்பதுமில்லை. ஆனால், ஆங்கில புத்தாண்டு, தமிழ் புத்தாண்டு என்றால் அந்த புத்தாண்டுகள் துவங்குவதற்கு பல நாட் களுக்கு முன்பே புத்தாண்டை எதிர்கொள்ள தயாராகி விடுகிறார்கள்.

இஸ்லாமிய புத்தாண்டின் பின்னணியில் ஹிஜ்ரத், முஹர்ரம், ஆஷூரா உள்ளது என்பதை நம்மவர்கள் உணரவில்லை.

இறைவனுக்காக தாம் பிறந்த மண்ணை துறந்து நபி (ஸல்) அவர்களும், அவர்களின் தோழர்களும் ஹிஜ்ரத் செய்தது, அருள் மறையாம் அல்குர்ஆன் இஸ்லாமிய புத்தாண்டின் முதல் மாதமான முஹர்ரத்தை புனிதமான மாதம் என குறிப்பிட்டது, முஹர்ரம் பத்தாம் நாளான ஆஷூரா நாளில் கொடுங்கோலன் ஃபிர்அவ்ன் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டு, அதன் மூலம் ஹள்ரத் மூஸா (அலை) அவர் களுக்கு இறைவன் ஈடேற்றம் அளித்தது அனைத்தையும் நம் சமுதாயத்தவர் எப்போதுதான் தெரிந்து கொள்ள போகிறார்களோ?

இஸ்லாமிய புத்தாண்டின் சிறப்பை நம் சமுதாயம் முழுவதும் அறிந்து கொள்ள தமிழகத்திலுள்ள அனைத்து ஜமாஅத்துகளும் ஆர்ப்பாட்டமில்லாமல், ஆடம்பரமில்லாமல் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தவாறு இஸ்லாமிய புத்தாண்டு விழாவை சிறப்புடன் நடத்த வேண்டும்.

இஸ்லாமிய புத்தாண்டு விழாவில் ஹிஜ்ரத், முஹர்ரம், ஆஷூரா பற்றிய வரலாற்று செய்திகள் பதிவு செய்வதின் மூலம் நம்மவர்கள் இஸ்லாமிய புத்தாண்டின் சிறப்பினை முழுமையாக அறிந்து கொள்ள முடியும். அனைவருக்கும் இனிய இஸ்லாமிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

# கணவரின் உரிமையை நிலைநாட்டிய இஸ்லாம்!

لا يَحِلُّ لامرأة أنْ تصومَ وزوجُها شاهدٌ إلا بإذنه، ولا تَأذَنَ في بيته إلا بإذنه

“எந்த ஒரு பெண்ணும் அவளின் கணவர் ஊரில் இருக்கும்போது அவரின் அனுமதியில்லாமல் நோன்பு வைப்பதும், அவரின் அனுமதியில்லாமல் மற்றவர்களை வீட்டினுள் அனுமதிப்பதும் அவளுக்கு ஆகுமானது அல்ல” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி)


தற்காலத்திலுள்ள பெண்களுக்கு எதிரான சூழ்ச்சிகளுக்கு நடுவில் பெண்களின் புகழை பரப்பக்கூடிய இஸ்லாமிய உபதேசங்களை மக்களுக்கு எடுத்து கூறிக் கொண்டிருக்கும்

குர்ஆனின் குரலே வாழ்க!

**செய்யது சகோதரர்கள்**

**நாகூர்**

☛ வயதானவர்கள் வஸிய்யத் செய்தால் மகனோ அல்லது மகளோ அதை மீறி நடக்கலாமா?

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

✍ வஸிய்யத் என்பது ஒரு மனிதனின் கடைசி நிலையில், ஓரளவு மரணம் தெளிவாகிவிட்ட நிலையில் சொல்லப்படுவது தான் வஸிய்யத் என்பதாகும். அந்த வஸிய்யத் என்பது ஷரீ அத்திற்கு மாற்றமாக இல்லையென்றால் அதை நிறைவுபடுத்துவது சம்பந்தப்பட்டவர்களின் மீது கடமையாகும்.

இதன்றி, சாதாரணமாக வயதாகி விட்டவர்கள் தன்பிள்ளைகளுக்கு அல்லது தனக்கு கீழுள்ளவர் களுக்கு சொல்வதும், அதை அவர் கள் எடுத்து நடத்துவதும் கால, நேர சூழ்நிலைகளை அனுசரித்து மாறுபடும். அதாவது, சிலசமயங் களில் கட்டாயமானதாகவும் ஆகும். சில சமயங்களில் கட்டாய மில்லாததாகவும் ஆகும். அதற்கு பெயர் உபதேசம் அல்லது கட்டளை என்று சொல்லப்படும். வஸிய்யத் என்று சொல்லப்படாது.

☛ எங்கள் ஊரில் ரமளான் காலத்தில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிக்கு சில சகோதர சமுதாயத்தவர்களையும் அழைத்து, இஃப்தார் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இவ்வாறு செய்வது மார்க்க ரீதியாக தவறில்லையா?

**கிருஷ்ணகிரியிலிருந்து**
**சௌக்கத்**

✍ தற்கால சூழ்நிலைகளை கவனித்தும், ஷரீ அத் மார்க்கரீதியாக மற்ற மதங்களைச் சார்ந்த நம் சகோதரர்களையும் அரவணைக்க வேண்டுமென்ற மார்க்கத்தின் வழிகாட்டுதலை கவனித்தும், சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர் களை உற்சாகப்படுத்துவதற்கும், சந்தோஷப்படுத்துவதற்காகவும் தற்காலத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற மனிதனை சீரழிக்கின்ற குழப்பங்களிலிருந்து மனித சமுதாயத்தை பாதுகாத்து, மனிதர் களுக்கு நடுவில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் மேற்கண்டவாறுள்ள நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது தவறாகாது. எனினும், அதுபோன்ற நிகழ்வுகளில் ஷரீ அத்தின் வரைமுறைகளை மீறாமல் இருப்பதும், இஃப்தார்

# பதில்கள்

மவ்லவீ முஃப்தீ **மு.முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

மற்றும் மக்ரிபு தொழுகை யின் நேரங்கள் காலங்கடந்து விடாமல் பார்த்துக் கொள்வதும், அவர்களை சந்தோஷப்படுத்தும் நோக்கத்தில் அசல் நோன்பாளிகளை கவனிக் காமல் விட்டுவிடுவதும், இந்த நோன்பாளிகளுக்கு அவர்களால் இடையூறு ஏற்படும் வகையில் இவர்களை கொச்சைப்படுத்து வதும், நம் முஃமினான நோன்பாளி களின் உள்ளங்களை நோவினைப் படுத்தும் விதமாக நடந்து கொள் வதும் பல்வேறு இடங்களில் நடைபெறும் இஃப்தார் நிகழ்ச்சி களாகும். எனவே, இதுவெல்லாம் இல்லாமல் யாருக்கும் சிரமமின்றி மார்க்கத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு, சகோதர சமுதாய மக்களை அழைத்து அவர்களை அரவணைப் பது ஆகுமான செயலாகும்.

நோன்பு வைப்பதால் நினைத்த பலன்கள் உடனே கிடைக்குமா? அல்லது பல நாட்கள் ஆகுமா?

**வேடசந்தூரிலிருந்து**
**அ.ஷேக் முஹம்மது**

ஏதாவது ஒரு காரியம் நடக்க வேண்டும் என்பதற்காக நிய்யத் செய்து, நோன்பு வைப்பதால் அந்த காரியம் உடனே நிறைவேறி விடும் என்பது கட்டாயமல்ல. சில சமயங் களில், அல்லாஹ்வின் நாட்டப்படி அந்த காரியம் உடனடியாகவும் நிறைவேறிவிடலாம். சில சமயங் களில் தாமதமும் ஆகலாம்.

அந்த மனிதனுக்கு அல்லாஹ் வின் மீதுள்ள நம்பிக்கையை பொறுத்து, அந்த காரியம் நிறை வேறுவதில் முன் - பின் ஆகலாம். அல்லது மனிதனின் நம்பிக்கை பலமாக இருந்தாலும் சில நேரங் களில் சில நலவை அனுசரித்து அல்லாஹ் அந்த காரியத்தை தாமதப்படுத்தவும் செய்யலாம்.

பள்ளி வளாகத்தில் நோன்பு திறப்பதற்காக அரசியல்வாதிகளை அழைப்பதும், அவர்களை கண் ணியப்படுத்துவதும் ஆகுமானது தானா? அதற்கு ஏற்பாடு செய்யக் கூடிய இமாமை பின்பற்றி தொழலாமா?

**ஓசூரிலிருந்து**
**எம்.ரியாஸ்**

அந்தோ பரிதாபம் அந்த இமாம்! அவர் என்ன தவறு செய்தார்? ஏன் அவரைப் போய் வம்புக்கு இழுக் கிறீர்கள்? ஏற்பாடு செய்ததெல் லாம் நிர்வாகம்! நிர்வாகம் சொல் வது ஷரீஅத்திற்கு முரணாக இல்லாத வரை அந்த இமாம் அதை செயல்படுத்துவார். அந்த வகையில், சமுதாயத்தின் நலனை அனுசரித்து, சகோதர சமுதாயத்த வர்களையும், அருகில் இருக்கின்ற அரசியல் பிரமுகர்களையும், அதிகாரிகளையும் சுய இலாபங்கள் எதையும் எதிர்பார்க்காமல் சமுதாய நலனை மட்டுமே நோக்கமாக கொண்டு, இஸ்லாமிய நிர்வாகங் கள் அவ்வாறான, இஃப்தார் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம். அதேசமயம் அதில் மார்க்கத்தை வரம்பு மீறுவதும், உணவுகளை வீண் செய்வதும், ஆடம்பரமான வரவேற்புகளும், முஸ்லிமான

நோன்பாளிகளை கவனிக்காமல் விட்டுவிடுவதும் தவிர்க்கப்படுவது மிக மிக கட்டாயமானதாகும். அப்படியின்றி, அந்த நிகழ்வுகளில் ஷரீஅத்தின் விதிகள் மீறப்பட்டால் நிச்சயம் அதற்கான செலவுகள் அனைத்தும் ஹராமாகும். ஏற்பாடு செய்தவர்கள் அல்லாஹ்வின் தண்டனைக்கு ஆளாகுவார்கள். உஷார்!

☛ பெண்கள் எத்தனை ரக்அத்துகள் ஜும்ஆ தொழுக வேண்டும்?

**சேலத்திலிருந்து**
**அன்வர்ஜீ**

✍ பெண்கள் மீது ஜும்ஆ தொழுகை கடமை கிடையாது. அவர்கள் அதற்கு பகரமாக ளுஹர் தொழுகையை தொழுது கொள்ள வேண்டும்.

☛ என் தங்கை வீட்டில் பல வருடங்களாக இரண்டு தென்னை மரங்கள் இருந்து வந்தன. பாகப் பிரிவினையின்போது ஒரு மரத்தை வெட்ட வேண்டிய சூழ்நிலையால் வெட்டி விட்டார்கள். இப்பொழுது ஒரு மரம் மட்டுமே காய் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், இப்படி காய் கொடுக்கும் ஒரு மரத்தை மட்டும் வீட்டிற்கு முன்னால் நிற்க வைப்பது ஆகுமானதல்ல என்றும், அதையும் உடனடியாக வெட்டி அகற்றி விட வேண்டும் என்றும் நண்பர் ஒருவர் கூறுகிறார். இது விஷயத்தில் நம் மார்க்கம் என்ன கூறுகிறது?

✍ இப்படியொரு சட்டத்தை அல்லது அறிவுரைகளை மார்க்கம் நமக்கு சொல்லவில்லை. அல்லாஹ்வின் நாட்டம் இருக்கும் வரை இந்த மரத்தை பராமரிப்பதும், அதற்கு தண்ணீர் ஊற்றுவதும் அந்த வீட்டினர் மீது அவசியமாகும். எனவே, வெளிப்படையான அவசியம் ஏற்படாதவரை அந்த மரத்தை வெட்ட வேண்டாம்.

☛ அல்லாஹ்வின் அளப்பரிய அன்பைப் பெற தான - தர்மம் செய்தால் மட்டும் போதுமா?

**திண்டுக்கல்லிலிருந்து**
**ஏ.எஸ்.முஹம்மது**

✍ மார்க்கம் கூறியிருக்கும் நல்ல விஷயங்களை செய்வதை விட, மார்க்கம் தடுத்திருக்கும் தீய காரியங்களிலிருந்து விலகி நிற்பதே அல்லாஹ்வை நெருங்குவதற்குள்ள முதல் நிபந்தனையாகும். இரண்டாவது : அல்லாஹ்வின் கட்டளைகளை அடிபிறழாமல் செயல்படுத்துவது. மூன்றாவது : நஃபிலான வணக்க - வழிபாடுகள் மற்றும் தான - தர்மங்களை அதிகப்படுத்துவது அல்லாஹ்வின் பக்கம் மனிதனை மிக மிக நெருக்கமாக்கி வைக்கும். எனவே, வெறும் தான தர்மங்கள் மட்டுமே போதாது.

☛ ஒரு ஊரில் மிகப் பெரிய மண்டபத்தில் திருமணம் நடந்தது. திருமணத்தின் முதல் நாளன்று குர்ஆன் ஓதுதல், திக்ருடைய மஜ்லிஸ்கள், பயான்கள் அனைத்தும் மிகச் சிறப்பாக

நடந்தது. ஆனால், திருமணத் தன்று திருமண நிகழ்வுக்காகவும், விருந்துக்காகவும் அதிகளவு கூட்டம் சேர்ந்து விட்டது. அத னால் வந்தவர்களில் ஒரு பகுதி யினருக்கு உணவு பற்றாக்குறை யாகிவிட்டது. காரணம் கேட்ட போது, ஒரு குடும்பத்தில் இரண்டு மூன்று பேர்களுக்கு அழைப்பு கொடுத்தால் அந்த குடும்பத் திலுள்ள பிள்ளைகள், பேரன் பேத்திகள் என்று அனைவருமே திருமணத்திற்கு வந்து சேர்ந்து விட்டனர். இதுபோன்று எந்த நிகழ்வு ஆனாலும் நம் சமுதாய மக்கள் மிகப் பெரிய அளவில் கூட்டம்திரள்வதுசரியானவிஷயம் தானா? இதில் தவறு யாரினால் ஏற்படுகிறது?

**பெரம்பலூரிலிருந்து**
**காஜா**

✍ இரண்டு தரப்பினரின் மீதும் தவறு இருக்கிறது. பத்திரிகை கொடுப்பவர்கள் நிதானமாக யோசித்து கணக்கு போட வேண் டும். அத்துடன் திருமணத்தை எளிமையாக நடத்துவதற்கு முயற்சி செய்திருக்க வேண்டும். ஏனெனில், ஹதீஸில் எளிமையாக நடத்தப்படும் திருமணங்களில் தான் பரக்கத் இருப்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்கள் அருளியதோடு, அவர்களும் அவர்களின் துணை நின்ற ஸஹாபாக்களும், பெரியார் களும், வலிமார்களும் தங்கள் குடும்ப திருமணங்களை எவ் வளவு எளிமையாக நடத்திக்காட்டி னார்கள் என்பதை வரலாறுகள் நமக்கு பதிவு செய்து தந்திருக் கின்றன. எனவே, திருமண ஏற் பாட்டாளர்கள் அதிக அளவு கூட்டம் வந்ததற்கு பின்னால் யோசிப்பதை விட திருமணத்திற்கான அழைப்பு கொடுப்பதற்கு முன்பே யோசித்திருக்க வேண்டும்.

இவ்வாறே, திருமணத்திற்கு வருபவர்கள் அவசியமான அளவு மட்டுமே தங்களின் வருகையை பதிவு செய்து கொண்டால் நலமா கும். ஒருவருக்கு சொல்லப்பட்ட அழைப்பின் பின்னணியில் பத்து பேர்கள் செல்வது தேவைதானா? என்பதையும் யோசித்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய மார்க்கம் மிக மிக இலகு வானது. இலகுவானதையே செய் யும்படி மக்களுக்கு அறிவுறுத்து கிறது. பிறகு ஏன் இவ்வளவு சிரமங் களும், செலவுகளும் செய்து நம்மை நாமே கஷ்டப்படுத்திக்கொள் வதோடு, பிறர் நம்மை பார்த்து "திருமணத்திற்கு அழைப்பு கொடுத்தான். ஆனால், உணவு தீர்ந்து விட்ட பிறகு நம்மை கண்டு கொள்ளாமல் விட்டு விட்டானே" என்று ஏளனமாக பேசுவதற்கு நாம் ஏன் ஆளாக வேண்டும்? நம்முடைய முன்னோர்கள் மட்டுமல்லாமல் இன்றும் கூட மார்க்கம் அறிந்த பல உலமா பெருமக்கள், சூஃபிகள் தங்களின் குடும்பத் திருமணங் களை மிக மிக எளிமையாகவே நடத்திக் கொண்டிருப்பதை பார்க் கும் போது நாம் அதிலிருந்து ஏன்

## பெண் புகழ் பாடிய இஸ்லாம்!

"உலகம் (முழுவதும்) மனிதன் அனுபவிக்கும் பொருள்களாகும். அந்த பொருள்களிலேயே மிகச் சிறந்தது, ஸாலிஹான பெண் ஆவாள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு அம்ரு (ரளி) அவர்கள் (ஆதாரம் : முஸ்லிம்)

---


Successful indeed are the Believers

A.R.M

CEMENT KING

www.armsons.in

சிக்கனமான விலையில் சிமெண்ட், கம்பி வாங்கிட

தமிழகத்தின் Ist 24 மணி நேர சிமெண்ட் கடை

A.R.M Sons

The Cement & Steel Market

வடக்கு ராஜ வீதி
புதுக்கோட்டை.
7373798900
7373798930
04322-221649

ஏர்போர்ட் ரோடு
திருச்சி.
7373798944
7373798942
armsonstrichy@gmail.com

ECR.
கோட்டைப்பட்டிணம்.
7373798911, 7373798912
04371-260260 armsonskpm@gmail.com

நகர் முழுவதும் 10 மூட்டைக்கும், மாவட்டம் முழுவதும் 50 மூட்டைக்கும் சிமெண்ட் இலவச டோர் டெலிவரி

பாடம் எடுத்துக் கொள்வதில்லை? அல்லாஹ்தான் நம் சமுதாய மக்களுக்கு எல்லா நிலைகளிலும் நேரான வழிகளை காட்டி தந்தருள்வானாக.

☛ இமாமுடன் சேர்ந்து தொழும் போது சூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டுமா? அல்லது அமைதியாக நின்று அதை கேட்டு விட்டு ஆமீன் கூற வேண்டுமா?

**கரூரிலிருந்து**
**எம்.ரஹ்மான்**

✍ ஹனஃபீ மத்ஹபின்படி இமாமுடன்சேர்ந்து தொழுபவர், அமைதியாகவே நிற்க வேண்டும். இமாம் சப்தமிட்டு ஓதக்கூடிய நேரங்களாக இருந்தால், அந்த கிராஅத்துகளை அமைதியாக நின்று, காது தாழ்த்தி கேட்க வேண்டும். அவர் சூரா ஃபாத்திஹாவை ஓதி முடித்தவுடன் சப்தமில்லாமல் அமைதியாக ஆமீன் சொல்ல வேண்டும். அல்லது இமாம் அமைதியாக ஓதக்கூடிய நேரங்களாக இருந்தால் இவரும் அமைதியாக நிற்க வேண்டும் எதையும் ஓதக்கூடாது.

☛ மய்யித்தை அடக்கம் செய்த பின் இனிப்பான லட்டு, ஜிலேபி போன்றதிலிருந்து ஒன்றை அந்த கபுரின் மீது வைக்கிறார்கள். இது சரிதானா?

**பூனாவிலிருந்து**
**என்.மஜீத்பாய்**

✍ மார்க்கம் நமக்கு அப்படியெல்லாம் செய்வதற்கு அனுமதியளிக்கவில்லை.

☛ வஸிலா தேடுவது என்றால் என்ன? அவுலியாக்களின் அடக்கஸ்தலங்களுக்கு சென்று “எங்களின் நோய்களை தீர்த்து வையுங்கள் அல்லது எங்களுக்கு உதவி செய்யுங்கள்” என்று கேட்பது கூடுமா? கூடாதா?

**சேலத்திலிருந்து**
**அஹமத்**

✍ அவுலியாக்களின் அடக்கஸ்தலங்களுக்கு சென்று ஜியாரத் செய்வது மட்டுமே கூடும் என்று மார்க்கம் நமக்கு சொல்கிறது. அவர்களிடம் போய் நம் தேவைகளை முறையிடுவதும், அதை நிறைவேற்றி கொடுக்கும்படியாக அவர்களிடம் கேட்பதும், வேண்டுவதும் நிச்சயம் ஹராமாகும்.

வஸிலா என்பது அவுலியாக்களின் பொருட்டால் அல்லது ஸஹாபாக்களின் பொருட்டால் அல்லது நபிமார்களின் பொருட்டால் அல்லது பாவமறியாத குழந்தைகளின் பொருட்டால் என்று அல்லாஹ்விடம் கேட்பதுதான் வஸிலாவாகும். எனவே, அல்லாஹ்விடம் கேட்காமல் நேரடியாக அவர்களிடமே கேட்பது என்பது மார்க்கத்திற்கு முரணான, ஹராமான செயலாகும். அதற்கு பெயர் வஸிலாவும் அல்ல.

☛ நமது வீடுகளில் எந்தெந்த பிராணிகளை வளர்க்கலாம்? எவற்றை வளர்க்கக் கூடாது?

**கோபியிலிருந்து**
**முஹம்மது ஹனீ:பா**

✍ கோழி, ஆடு, பூனை போன்ற மிருதுவான பிராணிகளை

வளர்க்கலாம். இட வசதியும், அடக்கியாளக்கூடிய சக்தியும், உடல் வலிமையும் இருந்தால் மாடு, ஒட்டகம், குதிரை போன்ற நடுத்தரமான பிராணிகளையும் வளர்க்கலாம். இதனன்றி, விஷத் தன்மையுள்ள எலி, பாம்பு, தேள் போன்ற பிராணிகளையும், கீறி கிழிக்கக்கூடிய காட்டு விலங்கு களையும் வளர்ப்பது நிச்சயம் நமக்கு ஆகுமானதல்ல.

☛ தமிழ் பேசும் முஸ்லிம்களுக் கும் - உர்தூ பேசும் முஸ்லிம்களுக் கும் உள்ள வேறுபாடு என்ன? இந்த இரு வகையினரும் தங்களுக்கு மத்தியில் திருமண உறவுகளை செய்து கொள்வது இல்லையே! பெரும்பாலும், ஒருவரையொருவர் வேற்றுமையாகவே நினைக்கிறார் களே! தங்களின் கருத்து என்ன?

**வத்தலகுண்டுவிலிருந்து முஹம்மது**

✍ ஒவ்வொரு ஊராருக்கும் ஒரு குணம் இருப்பதைப் போன்று, ஒவ்வொரு நாட்டினருக்கும் ஒரு குணம் இருப்பதைப் போன்று, ஒவ்வொரு மொழி பேசுபவர் களுக்கும் குணங்கள் வித்தியாசப் படுவது இயல்பானது. மக்காவிலும், மதீனாவிலும் வாழும் மனிதர்கள் எல்லோரும் அரபியாக மட்டுமே இருந்தாலும், மக்காவாசிகளின் குணமும், மதீனாவாசிகளின் குணமும் நிச்சயம் மாறுபடும் என்பதை ஹஜ், உம்ராவிற்கு சென்ற புனிதமான ஹாஜிகள், குறிப்பாக ரமளான் காலங்களில் உம்ரா பயணங்கள் மேற்கொண்ட ஹாஜிகள் நிச்சயமாக உணர்ந்தி ருப்பார்கள். இவ்வாறே, தமிழ் - மலையாளம் பேசுபவர்களின் குணங்கள் மாறுபடும். அதுபோன்று தான் உர்தூ - தமிழ் பேசுபவர் களின் குணங்களும் மாறுபடும். குணம் மாறுபடுவதால் பெண் கொடுப்பவர்களும் - பெண் எடுப்பவர்களும் யோசிப்பார்கள். எங்காவது ஒரு இடத்தில் அவர் களும் ஒத்துப்போய் விடலாம். எனவேதான், திருமண உறவுகள் இவர்களுக்கு மத்தியில் ஏற்படு வது அரிதாகிவிட்டது. எனவே, இது ஒன்றும் தவறான விஷயமல்ல.

அதே சமயம், அனைவரும் முஸ்லிம் என்ற அடிப்படையில் ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வதும், முஹப்பத் தாக பழகிக் கொள்வதும் மார்க்கம் வலியுறுத்தும் கட்டாயமான விஷயங்களில் ஒன்றாகும். அத னால், இவர்கள் - அவர்களைப் பார்த்து அல்லது அவர்கள் - இவர்களைப் பார்த்து இழிவாக பேசுவதும், திட்டுவதும், அவசிய மின்றி அவர்களை ஒதுக்குவதும் மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத செயல்களாகும்.

☛ ஒவ்வொரு நேரத் தொழுகை யிலும், ஃபர்ளான தொழுகையை மட்டும் தொழுதால் போதுமா? முன் - பின் சுன்னத்துகள், நஃபிலான தொழுகைகளை தொழுவது அவசியமாகுமா?

மேலும், எப்பொழுதாவது சூழ்நிலைகளின் காரணமாக தொழுகைகள் விடுபட்டுவிட்டால் அந்த தொழுகைகளை மீண்டும் களாவாக தொழ வேண்டியது அவசியமா?

**மேட்டுப்பாளையத்திலிருந்து**
**முஹம்மது அமானுல்லாஹ்**

✍ ஃபர்ளான தொழுகை என்பது மனிதனின் கடமையை நிறைவு படுத்துவதற்கு போதுமானது. ஆனால், அதை எந்த குறையுமில்லாமல் முழுமையாக ஆரம்பத்திலிருந்து கடைசி வரை அல்லாஹ்விற்காக மட்டுமே தொழுதிருக்க வேண்டும். உலக சிந்தனைகள் எதுவும் அந்த தொழுகையின் இடையில் வந்திருக்கக்கூடாது. அவனது நிற்குதலும், குனிதலும், ஸஜ்தா செய்தலும், அத்தஹிய்யாத்துடைய இருப்பில் இருப்பதும் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் சிந்தனையோடு ஒட்டியதாக இருந்திருக்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்திருந்தால் அவன் சொர்க்கம் சென்றடைவதற்கு அந்த தொழுகை போதுமானதாகி விடும். ஆனால், யோசித்துப் பார்க்கப்போனால், இவ்வாறு முழுமையான தொழுகைகள் நம் போன்ற சாதாரண மனிதர்களிலிருந்து ஏற்படுவது என்பது எட்டாக் கனியாகவே இருக்கும். எனவே தான், அதில் ஏற்படக்கூடிய குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், நம்முடைய அந்தஸ்துகளை உயர்த்துவதற்காகவும், அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கமாக்கி வைப்பதற்காகவும் இது போன்ற நஃபிலான வணக்கவழிபாடுகளை நம் மார்க்கம் நமக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக வழங்கியிருக்கிறது. எனவே, நஃபிலான வணக்க வழிபாடுகளும் நம்மவர்களுக்கு அவசியமாகும்.

☛ இஹ்ராம் உடையில் கஃபத்துல்லாஹ்வை தவாப் செய்யும்போது ஒளு முறிந்து விட்டால் உடனடியாக ஒளு செய்து கொள்ள வேண்டுமா?

**ஈரோட்டிலிருந்து**
**ஏ.எம்.ஹனீஃபா**

✍ ஆம். அவசியம் உடனடியாக ஒளுச் செய்து கொண்டு தவாபை தொடர வேண்டும்.

☛ ஒரு இமாம், பயான் செய்யும் நேரத்தில், "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் ஃபஜ்ரு தொழுகை தொழுதவுடன் ஒரு ஸஹாபி வேகமாக போய் விடுவது வழக்கம். ஒரு நாள் அந்த ஸஹாபியை நபியவர் கள் விசாரித்தபொழுது, கணவன் - மனைவி இருவருக்கும் ஒரு ஆடை தான் உள்ளது. இமாம் ஜுமாஅத் முடிந்து வீட்டுக்கு போய் என் ஆடையை மனைவிக்கு கொடுப்பேன். நேரம் முடிவதற்குள் மனைவி தொழ வேண்டுமென்பதற்காகவே நான் அவ்வாறு வேக வேகமாக சென்று விடுகிறேன் என்று அந்த ஸஹாபி கூறினார்கள்.

**இப்போது மிக வேகமான விற்பனையில்....**

# பிரார்த்தனை செய்வது எப்படி?




ஆசிரியர் : அல்லாமா

**அ.மு.அப்துல் ஜப்பார் பாகவீ** ஹஸ்ரத் (ரஹ்)

**நூல் விலை : ரூ.25/- மட்டுமே!**

தபால் செலவு தனி!

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**குர்ஆனின் குரல்**

தபால் பெட்டி எண் : 99, 4/25, எழில் நகர்,

மேலமடை, **மதுரை - 625 020.**

வாட்ஸப் மற்றும் அலைபேசி தொடர்புக்கு :

**9442056547, 9486729192**



# மணமகள் தேவை

சிவகங்கை மாவட்டம் ராஜகம்பீரத்தைச் சார்ந்த தமிழ் முஸ்லிம் இராவுத்தர், உயரம் 158 செ.மீ.; வயது 28; 12th படித்து முடித்து, அதே ஊரில் திருமண மஹாலில் **Maintainance** வேலையில் பணிபுரியும், சாலிஹான **மணமகனுக்கு**, மார்க்கப் பற்றுள்ள சாலிஹான **மணமகள் தேவை.**

தொடர்புக்கு: **7373311809, 8526238551, 8248910387**

தொழுகைக்கு இவ்வளவு கஷ்டம் என்றால் மற்ற தேவைகளுக்கு எப்படி? விளக்கம் தரவும்.

**பெரியவடகரையிலிருந்து**
**ஏ.ஹாஜா முஹம்மது**

✍ இஸ்லாத்தில் தொழுகைக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப் பட்டிருக்கிறது என்பதை நம் காலத்து முஸ்லிம்கள் உணர வேண்டும் என்பதற்காகவும், இது போன்ற வரலாறுகளை கேட்டு, தொழுகையில் நாமும் பேணுதலாக நடக்க வேண்டும் என்பதற்காகவும் இதுபோன்ற வரலாறுகள் சொல்லப் படுகின்றன; எழுதப்படுகின்றன.

ஒரு மனிதன் நடுக்கடலில் தத் தளித்துக் கொண்டிருக்கும்போது கூட தொழுகை நேரம் வந்து விட்டதை அறிந்தால் உடனடி யாக தொழுகையை நிறைவு படுத்த வேண்டும். கடுமையான நோய்வாய்ப்பட்டவன் கூட தன்னால் முடியும் விதத்தில் தொழுகையை அமர்ந்தோ அல்லது படுத்தோ நிறைவுபடுத்த வேண் டும். தொழுகைக்காக நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர் களும், அவர்களை பின்பற்றி வாழ்ந்த ஸஹாபாக்களும், அவர் களைப் பின்பற்றி வாழ்ந்து காட்டிய இமாம்களும், வலிமார் களும் தொழுகை விஷயத்தில் மிக மிக பேணுதலாகவே வாழ்ந்தி ருக்கிறார்கள். எனவே, தொழுகைக் காக இந்த சிரமத்தைக்கூட எடுக்க வில்லையென்றால் நம்மவர்கள் அல்லாஹ்வின் உதவியை எவ் வாறு எதிர்பார்க்க முடியும்? அது வும் இப்பொழுதுள்ள மோசமான சூழ்நிலைகளில் அல்லாஹ்வின் உதவியை தவிர வேறு எதுவும் நம்மவர்களை காப்பாற்ற முடியாது என்ற சூழ்நிலையில் தொழுகைக் காக சாதாரண முயற்சிகளைக் கூட இன்று நம் சமுதாய மக்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்ற வேதனையின் வெளிப்பாடாகவே, இதுபோன்ற ஸஹாபாக்களின் நிகழ்வுகளை இமாம்கள் அடிக்கடி தங்களின் பயான்களில் குறிப் பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம் மக்களோ இமாம் தன் வேலையை செய்து கொண்டி ருப்பார். நாம் நம் வேலையை பார்த்துக் கொண்டிருப்போம் என்ற போங்கில்தான் சென்று கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் பாதுகாப்பானாக.

அந்த ஸஹாபிகள் இந்த தொழுகைக்காக அவ்வளவு கடுமையான முயற்சிகளையும், தியாகங்களையும் செய்திருக்கா விட்டால், நாம் இன்று தொழுகை யாளிகளாக இருந்திருக்க முடியாது. நவூதுபில்லாஹ்!

☛ இஸ்லாத்தில் ஒரு அந்நிய ஆணும், பெண்ணும் இணைந்து தொழிலில் முதலீடு செய்து, கடை வைத்து தொழில் வளர்ச்சி பெறலாமா? வேண்டாமா?

**சேலத்திலிருந்து**
**அப்துல் கனி**

✍ வேண்டாம்.

# பொறாமையும் பொறுமையும்!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

**“முஃமின்களே! பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் அல்லாஹ்விடம் நீங்கள் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளருடன் இருக்கிறான்”**

- அல்குர்ஆன் (2 : 153)

**“முஃமின்களே! பொறுமையை கடைப்பிடியுங்கள். இன்னல்களை சகித்துக் கொள்ளுங்கள்.”**

- அல்குர்ஆன் (3 : 200)

**“மறுமையில், பொறுமை ஈமானின் அடையாளச் சின்னமாக கொடிபறக்கும்.”**

- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்.
(ரியாலுஸ் ஸாலிஹீன்)

பொறுமை, அல்லாஹ் வழங்கிய அருட்கொடை என்ற நபி மணியாரின் பொன்மொழியின் பிரதிபலிப்பை, வலிமார்களிடம் காணலாம். பொறுமையின்றி இருந்திருந்தால் வியக்கத்தக்கது. சேவைகள் ஆற்றி பல இலட்சம் பேர்களை தீனில் சேர்த்து, சாதனை புரிந்து இறை நேசச் செல்வர்களாக உயர்ந்திருக்க முடியாது.

“பொறுமைக்கு கூலி சுவனம்தான்” என்பது நபி மொழி.

இதைவிட வேறென்ன பாக்கியம் வேண்டும்?

கல்வியையும், செல்வத்தையும் பிறருக்கு தந்து மகிழ்வோரைப் பார்த்து நமக்கு அப்பாக்கியம் கிடைக்கலையே என்று பொறாமைப்படலாம்.

ஹுதைபிய்யாவின் உடன்படிக்கை எதிரிகளின் நியாயமற்ற கோரிக்கையை நபிகளார் அவர்கள் பொறுமையாக ஏற்றுக் கொண்டதால், சில மாதங்களுக்கு பிறகு மிகப் பெரிய வெற்றியாக மலர்ந்து, மாமணியின் மகத்துவமிக்க நுண்ணறிவும், பொறுமையும் சிறகடித்துப் பறந்தது.

“நெருப்பு விறகை தின்பது போல், பொறாமை நன்மைகளை தின்றுவிடும்”

(அபூதாவூது 2670)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற நல்அமல்கள் செய்து, நன்மைகளை குவித்து வைத்து விட்டு, பொறாமை என்ற நெருப்புக் கங்கால் அவையனைத்தையும் பொசுக்கிவிட்டு, கப்ரில் கதி கலங்கி நிற்பது அறிவுடைமை ஆகாது.

ஈமானும் பொறாமையும் ஒருவரிடத்தில், ஒரே சமயத்தில் இணைந்திருக்காது" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (தர்கீப் 347)

உண்மை முஸ்லிமிடத்தில் பொறாமை இருக்காது. ஈமான் உறுதியாயிருந்தால், பொறாமைத் தீ பக்கத்தில் வராது.

**"எல்லா நற்செயல்களிலும் இருவர் சமமாக இருந்து, இருவரும் சுவனவாசிகளாக ஆகி, ஒருவர் மற்றவரைவிட சிறப்புச் சலுகை வழங்கப்படுவாரென்றால் அந்த ஒருவரிடத்திலிருக்கும் நற்குணமே காரணம்" என நபி [ஸல்] அவர்கள் கூறியுள்ளார்கள்.** (மிஷ்காத்)

கோபமும், பொறாமையும், தீனையே அழித்துவிடும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (திர்மிதீ 7412)

"பொறாமைக்காரனின் தீங்கை விட்டு பாதுகாப்புத் தேடுகிறேன்" என்று பிரார்த்தனை செய்ய நமக்கு குர்ஆன் கற்றுத் தருகிறதென்றால், பொறாமை எத்தகைய கொடிய விஷமாயிருக்கும்?

"மனிதர்களுக்கு அல்லாஹ் தன் கருணையால் வழங்கியவற்றின் மீது இவர்கள் பொறாமைப்படுகிறார்களா?"

- அல்குர்ஆன் (4 : 54)

செல்வங்கள், ஆரோக்கியம் பெற்றவர்கள் பாக்கியம் பெற்றவர்களாவர். இப்பாக்கியங்களை நாமும் கேட்டுப் பெறலாமே தவிர, பொறாமைப்படுவதால் அழிவும், இழிவும்தான் ஏற்படும்.

நபிமணியின் பொறுமை தான் மிகப் பெரிய சன்மார்க்கத்தை தோற்றுவித்து உலகில் மனங்கவரும் மலர் வாசனையாக வலம் வந்து கொண்டிருக்கிறது.

ஆலமரத்துக்குக் கீழே புல் கூட முளைக்காதாம். பொறாமைக்காரனால் பச்சை மரம் கூட எரிந்து சாம்பலாகி விடும். கண் திருஷ்டி உண்மை என்பது நபி மொழி. இந்த கண் திருஷ்டி பொறாமையால் விளைவது தானே!

**கப்ரின் வேதனைக்குக் காரணம் என்ன ?**

கப்ரின் வேதனைக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1. அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏவியவைகளை விடுவது.
2. அல்லாஹ்வும் அவனது தூதரும் தடுத்தவைகளைச் செய்வது.

பொறாமையின் விளைவே, ஹஸ்ரத் யூசுஃப் நபியின் வரலாறு உருவாகி, குர்ஆனில் ஒரு அத்தியாயமாக இடம் பிடித்துள்ளது.

அபூஜஹ்ல் ஈமான் கொள்ளாமலிருந்ததற்கு காரணமே, நபி மீது கொண்ட பொறாமைதான். இதனால் நரகவாசியாகி, நாதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பழிக்குப் பழி என்பதே பொறாமை ஈன்றெடுத்த குட்டி!

முஸ்லிம்கள் மீது வீண் பழியும், பொய்யான அவதூறும் பொறாமையிலிருந்து பிறந்த பிசாசுகளாகும்.

உலக நாடுகள் ஒருவருக் கொருவர் சண்டையும், போர் தளவாடங்கள் சேகரிப்பும், போட்டியும் பொறாமையும் தானே காரணம்!

படித்தவர்களிடமும் பாமரர் களிடமும் குறிப்பாக அரசியல் வாதிகளிடமும் பொறாமை இருப்பதால் பள்ளிவாசல்கள் முதல் பிற சமுதாய நிறுவனங் கள் மற்றும் அரசியல் துறைகள் வரை போட்டிகள், குழப்பங் கள், சண்டைச் சச்சரவுகள், பித்னாக்கள் எல்லாமே எண்ணிவிட முடியாது.

பொறாமைத் தீயிலிருந்து எல்லோரையும் அல்லாஹ் காப்பாற்றுவானாக.

தமிழ்/ English நாளிதழ்களில் மற்றும்– குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய...

Call- Whatsapp 86952 16016 CityAds

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?

எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள் தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

CityAds BOOKS www.cityadsbooks.com

# வரலாற்றில் ஓர் ஏடு

"ஒருவர் [அழியும்] இவ்வுலகை விரும்பினால் விரும்புவோருக்கு அதிலே நாம் விரும்பியதைக் கொடுப்போம். பின்பு அவருக்கு நரகத்தை ஏற்படுத்துவோம். அதிலே அவர் இழிவாக்கப்பட்டவராகவும் [இறையன்பை விட்டும்] தூரமாக்கப்பட்டவராகவும் அவர் நுழைவார்"

- அல்குர்ஆன் (17 : 18)

"நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும்வரை அவர்களின் குடும்பத்தினர் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் தொலிக் கோதுமையின் ரொட்டியைக்கூட வயிறு நிரம்ப சாப்பிட்டதில்லை" என்று ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி - 5416)

வரலாற்றில் ஒரு நாள் -

ஹள்ரத் உத்பா இப்னு அஸ்வான் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

"நாங்கள் ஏழுபேர் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். மர இலைகளைத் தவிர வேறு உணவு எங்களுக்கு இல்லை. இதனால் எங்கள் தாடைகள் புண்ணாகி விட்டன. அப்போது ஒரு போர்வையை கண்டெடுத்தேன். அதை இரண்டாகக் கிழித்தேன். அதில் ஒரு துண்டை வேட்டியாக அணிந்து கொண்டேன். மற்றொரு துண்டை (என்னுடன் இருந்த மற்றொரு நபித்தோழர்) ஸஃது இப்னு மாலிக் (ரளி) அவர்களுக்கு கொடுத்தேன். அதை அவர் வேட்டியாக அணிந்து கொண்டார்.

"ஆனால் இன்று எங்களில் எந்த ஒரு தோழரும் நகரங்களில் ஏதாவதொரு நகரத்திற்கு தலைவராக (ஆளுநராக) இல்லாமல் இல்லை" என்று சொன்னார்கள்.

"பிறகு அந்நாளில் [உலகில் கொடுக்கப்பட்ட] அருட்கொடைகள் பற்றி நிச்சயமாக நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்"

- அல்குர்ஆன் (109 : 8)

ஆதாரம் : ரியாளுஸ் ஸாலிஹீன்
ஹதீஸ் எண் - 498, முஸ்லிம் - 2967

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# அழகிய கோரிக்கை

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

قَالُوا يَا أَبَانَا اسْتَغْفِرْ لَنَا ذُنُوبَنَا إِنَّا كُنَّا خَاطِئِينَ

**“அவர்கள், “எங்கள் தந்தையே! எங்களுக்காகப் பாவ மன்னிப்புக் கோருங்கள். நிச்சயமாக நாங்கள் தவறிழைப்பவர்களாக இருந்தோம்” என்று கூறினார்கள்.** - அல்குர்ஆன் (12 : 97)

பெற்றோர், பெரியோர், ஆசிரியர், மார்க்க அறிஞர் ஆகியோர்களிடம் எங்களுக்காக பிரார்த்தியுங்கள் என்று பணிவுடன் உளப்பூர்வமாக வேண்டிக் கொள்வது பணிவின் வெளிப்பாடாகவும், அழகிய குணமாகவும் இருக்கிறது. நாமும் பிறருக்காக பிரார்த்திப்பதின் மூலம் பிறர் நலன் நாட வேண்டும். பிறர் பிரார்த்தனையின் மூலம் ஈடேற்றம் பெற வாய்ப்பிருக்கிறது என இஸ்லாம் இயம்புகிறது.

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “ஒருவர், கண்ணெதிரே இல்லாத தம் சகோதரருக்காகப் பிரார்த்தித்தால், அதற்கென நியமிக்கப்பட்டுள்ள வானவர், “ஆமீன் (இறைவா! ஏற்றுக் கொள்வாயாக) அதைப் போன்றே உனக்கும் கிடைக்கட்டும்!” என்று கூறுகிறார்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் - 5280)

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “ஒருவர் தம்முடன் இல்லாத மற்றொருவருக்காகப் பிரார்த்திக்கும் பிரார்த்தனையைப் போன்று, (இறைவனிடம்) வெகுவிரைவில் ஏற்கப்படும் பிரார்த்தனை வேறொன்றும் இல்லை”

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ - 1903)

கண்ணெதிரே இல்லாத ஒருவருக்காகவோ, பலருக்காகவோ நாம் பிரார்த்திக்கும்போது, அதில் உள்ளார்ந்த ஓர் ஈடுபாடும் பொது நலமும் இருக்கும். இதை அல்லாஹ் விரும்புகிறான். அதனால்தான் மற்றவர்களுக்காக நாம் கூறும் பிரார்த்தனையின் பலன், பிரார்த்திக்கும் நமக்கும் கிடைக்கிறது.

நமக்காக பிறர் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று எண்ணுவதுபோல் நாமும் பிறருக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும்.

நாம் பிறருக்காக பிரார்த்தனை செய்வது மிகச் சிறந்த நற்செயலாகும். அதை செய்யுமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் போதித்துள்ளார்கள். மற்றவர்களுக்காக நாம் செய்யும் இவ்விதமான பிரார்த்தனைகள் அல்லாஹ்வால் மிக எளிதில் ஏற்றுக்கொள்ளப்படுபவையாகும். அதன் மூலம் பிறருக்கு கெடுதல் செய்யும் எண்ணங்கள், சுயநலம் ஆகியவற்றை விட்டும் நமது ஆன்மாக்கள் பரிசுத்தமாகிறது. மேலும், நமக்கு மத்தியில் ஒருவர் மற்றவர் மீது அக்கறை காட்டுதல், இரக்கப்படுதல் ஆகிய உயரிய பண்புகள் உண்டாகிறது.

அருகிலில்லாத ஒருவருக்காக மற்றொருவர் பிரார்த்தனை செய்கிறாரென்றால், அதில் கள்ளம் கபடம் இருக்காது; முகஸ்துதி இருக்காது; தூய எண்ணத்தோடு தமக்கு மட்டுமே தெரிகின்ற வகையில் அந்த பிரார்த்தனை இருக்கும். எனவே, விரைவாக அது ஏற்பட வாய்ப்பு அதிகம்.

## இஸ்லாமாக...

(ஒருமுறை) ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, "நாயகமே! என் தாயும், தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். இதோ இவர்கள் என் தாய் ஆவார்கள். நீங்கள் (அல்லாஹ்வின்) அருள் வளம் பெற்றவர்கள். ஆகவே, அவர்களை அல்லாஹ்வை நோக்கி அழையுங்கள். அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனைப் புரியுங்கள். அல்லாஹ் உங்கள் மூலம் அவர்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றக் கூடும்" என்று கூறினார். உடனே அண்ணலார், அவர்களுக்காக பிரார்த்தனைப் புரிந்து, அல்லாஹ்வை நோக்கி அழைத்தார்கள். அவர்கள் அதை ஏற்று இஸ்லாமாகிவிட்டார்கள்.

(நூல் : அல்பிதாயா வந்நிஹாயா)

இறைநம்பிக்கையாளர்களாகிய நாம் இறைமறுப்பாளர்களிடம் இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள, இறைவனிடம் பிரார்த்திக்கவும் வேண்டும். அதிலும் குறிப்பாக இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுபவர்கள் அதிகம் பிரார்த்திக்க வேண்டும். பேச்சு சாதுரியத்தால் மட்டும் மனித உள்ளத்தை மாற்ற இயலாது என்பது குறிப்பிடத்தக்கது.

## புனிதப் பயணம்

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "(எனது தந்தை) உமர் (ரளி) அவர்கள் உம்ரா செல்வது தொடர்பாக கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுமதி கோரினார்கள். அப்போது அண்ணலார் "என்னுடைய அன்புத் தம்பியே! உமது பிரார்த்தனையில் எங்களையும் சேர்த்துக் கொள்வீராக!

எங்களை மறந்து விடாதே!" என்று கூறினார்கள்.

(நூல் : அபூதாவூத் - 1498, திர்மிதீ - 3475, இப்னுமாஜா - 2894, முஸ்னத் அஹ்மத்)

ஹள்ரத் ஸஃப்வான் பின் அப்தில்லாஹ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "நான் ஷாம் (சிரியா) நாட்டிற்கு சென்ற போது (என் மாமனார்) அபூ தர்தா (ரளி) அவர்களது இல்லத் திற்குச் சென்றேன். அங்கு அவரைக் காண முடியவில்லை. (என் மாமியார்) உம்மு தர்தா (ரஹ்) அவர்களைக் கண்டேன். அவர் என்னிடம் "இந்த ஆண்டில் நீங்கள் ஹஜ்ஜுக்கு செல்ல நாடியுள்ளீர்களா?" என்று கேட்டார். நான் "ஆம்" என்றேன். அதற்கு அவர் கூறி னார் : அவ்வாறாயின் எங்கள் நலனுக்காகவும் பிரார்த்தியுங் கள். ஏனெனில், ஒரு முஸ்லிம் கண்ணெதிரே இல்லாத தம் சகோதரருக்கு செய்யும் பிரார்த்தனை அங்கீகரிக்கப் படுகிறது" என்ற நபி மொழியை எடுத்துரைத்தார்.

(நூல் : முஸ்லிம் - 5281)

## 76வது சுதந்திர தின வாழ்த்துக்கள்!

"வானிலிருந்து ஒரு தேவதை இறங்கி வந்து டெல்லி குதுப்மினார் மீது அமர்ந்து, இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கிறேன். ஆனால், அதற்கான விலையாக இந்து – முஸ்லிம் ஒற்றுமை சீரழிக்கப்பட வேண்டும் என்று சொன் னால், சுதந்திரத்தை கைவிட சம்மதிப்பேனே தவிர, இந்து – முஸ்லிம் ஒற்றுமையை அல்ல. சுதந்திரம் கிடைக்காவிட்டால் நஷ்டம் இந்தியா விற்கு, ஆனால், இந்து – முஸ்லிம் ஒற்றுமை அழிந்தால், அது மனித இனத்திற்கே கேடு"

என்று 1923ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி மாநாட்டில் அக்கட்சியின் தலைவராக வீரமுழக்கமிட்டவர்

**மவ்லானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள்.**

## நோயாளி

நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள் கூறினார்கள் : "ஒரு முஸ்லி மான அடியார் மரண நேரம் நெருங் காத ஒரு நோயாளியை நலம் விசாரிக்கச் சென்று, "மகத்தான அரியணையின் (அர்ஷின்) அதிபதியாகிய மகத்தான அல்லாஹ்விடம் உமக்கு ஆரோக்கியமளிக்க வேண்டுகிறேன்" என்ற பிரார்த்தனையை ஏழு முறை ஓதினால் அவருக்கு நிவாரணம் வழங்கப்படாமல் இருப்பதில்லை.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள்

(நூல் : திர்மிதீ - 2009)

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறியதாவது: "(ஒரு முறை) நான் உடல்நலக்குறைவாக இருந்தேன். அந்நிலையில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்னை கடந்து சென்றார்கள். அப்பொழுது அண்ணலார் "இறைவா! இவருக்கு ஆரோக்கிய வாழ்வைக் கொடு!" என்று (எனக்காக) பிரார்த்தித்தார்கள். அதன் பிறகு நான் அந்த நோயால் அவதியுறவில்லை" (நூல் : திர்மிதீ - 3477)

ஹள்ரத் சஅத் பின் அபீவக்காஸ் (ரளி) அவர்கள் கூறினார்கள் : "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் நோயுற்றிருந்தபோது என்னை உடல் நலம் விசாரிக்க வந்து, "இறைவா! சஅதுக்கு நோயிலிருந்து குணமளிப்பாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

(நூல் : புகாரீ - 5675)

ஹள்ரத் ஜுஅய்த் இப்னு அப்திர் ரஹ்மான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "சாயிப் இப்னு யஸீத் (ரளி) அவர்களை தொண்ணூற்று நான்கு வயதுடையவர்களாக, அந்த வயதிலும் திடகாத்திரமானவர்களாக கூன் விழாமல் முதுகு நிமிர்ந்தவர்களாக கண்டேன். அதுப்பற்றி அன்னாரிடம் வினவப்பட்டது.

அன்னார், "எனக்கு செவிப் புலன் மற்றும் பார்வைப் புலனின் நலம் (ஆகிய இந்த ஆரோக்கியம்) அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனையால்தான் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிந்திருக்கிறேன்" என்றார்கள்.

ஹள்ரத் ஜக்கரிய்யா பின் அதிய்யீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "ஹள்ரத் சல்த் பின் பிஸ்தாமி அத் தய்மிய்யீ (ரஹ்) அவர்கள் கண்ணில் நீர் இறங்கியதால் பார்வையற்றவராக ஆகி விட்டார்கள். ஒருநாள் வெள்ளிக் கிழமையன்று (ஜும்ஆக்கு பிறகு) மக்கள் எல்லோரும் அமர்ந்து சல்த் பின் பிஸ்தாமி (ரஹ்) அவர்களுக்கு கண்பார்வை கிடைக்க வேண்டும்" என்று பிரார்த்தனைச் செய்தனர்.

சூரியன் மறைவதற்கு கொஞ்சம் முன்பாக சல்த் பின் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் தும்மினார்கள். அவர்கள் தும்மியவுடன் அவர்களுக்கு பார்வை கிடைத்துப் பார்க்க ஆரம்பித்தார்கள். அல்லாஹ் அன்னாருடைய பார்வையைத் திரும்ப கொடுத்து விட்டான். (நூல் : இப்னுஅசாகீர்)

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்னிடம், "நீர் நோயாளியை நலம் விசாரிக்கச் சென்றால், அவரிடம் உமக்காகப் பிரார்த்திக்குமாறு கூறுவீராக! ஏனென்றால், அவருடைய பிரார்த்தனை வானவர்களின் பிரார்த்தனையைப் போன்றதாகும்" என்று கூறினார்கள்.

(நூல் : இப்னுமாஜா - 1431)

### வாழ்வு வளம்பெற...

ஹள்ரத் அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள் கூறியதாவது :


Since 1977-2017
40
Years
Customer Service
ஆடைகளால் ஆனந்தம்
மஹாராஜா
சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்
தஞ்சாவூர்

"என் தாயார் உம்மு ஸுலைம் (ரளி) அவர்கள் அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் "நாயகமே! (இதோ) உங்கள் சேவகர் அனஸ் அவருக்காகப் பிரார்த்தியுங்கள்" என்றார். அண்ணலார் "இறைவா! அனஸின் செல்வத்தையும், குழந்தைகளையும் அதிகமாக்குவாயாக! அவருக்கு நீ வழங்கியுள்ள (ஆயுள் முதலான)வற்றில் வளம் சேர்ப்பாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

(நூல் : புகாரீ - 6344, முஸ்லிம் - 4887)

ஹள்ரத் அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு பத்தாண்டுகள் பணிவிடை செய்துள்ளார்கள். நபியவர்கள் இறந்தபோது அன்னாருக்கு வயது 20. அண்ணலார் பிரார்த்தித்தபடியே அனஸ் (ரளி) அவர்களின் செல்வம் பெருகிற்று. பஸ்ரா (ஈராக்) நகரில் அன்னாருக்கு ஒரு தோட்டம் இருந்தது. அது ஆண்டுக்கு இரு முறை மகசூல் அளித்து வந்தது. இதைப் போன்றே அன்னாருக்கு குழந்தைகளும் பேரக் குழந்தைகளுமாக சுமார் 120 பேர் இருந்தனர். அவர்களுடைய ஆயுளில் அல்லாஹ் அருள்வளம் செய்தான். அன்னார் 100 வயது வரை வாழ்ந்தார்கள். ஹிஜ்ரி 91ஆம் ஆண்டு ஈராக்கில் இருந்த தனது மாளிகையில் இறந்தார்கள். ஈராக்கிலுள்ள பஸ்ரா நகரத்தில் இறந்த கடைசி நபித்தோழர் அன்னார்தான்.

(நூல் : உசுதுல் ஙாபா, உம்தத்துல் காரீ, இர்ஷாதுஸ் ஸாரீ)

மதீனாவில் ஒரு பெண்மணி (திருமணம் முடித்து) முதலிரவுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்னர் இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களான அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களிடம் அழைத்துச் செல்லப்படுவார்கள். அவர்கள் புதுமணப் பெண்களுக்காக பிரார்த்தனை புரிவார்கள். (நூல் : முஸன்னஃப் இப்னு அபீஷைபா)

புதுமணத் தம்பதிகள் இறை நெருக்கம் பெற்ற நல்லவர்களிடமும், பெரியவர்களிடமும் பிரார்த்தனையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## நல்லடியார்களிடம்

ஹள்ரத் உசைர் பின் ஜாபிர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஜனாதிபதி உமர் (ரளி) அவர்கள் யமன்வாசிகளில் கரன் குலத்தைச் சேர்ந்த உவைஸ் (ரஹ்) அவர்களை சந்தித்து, "அண்ணல் நபி (ஸல்) அவர்கள், (உமரே!) யமன்வாசிகளில் கரன் குலத்தைச் சேர்ந்த உவைஸ் பின் ஆமிர் என்பவர் உம்மிடம் வருவார். அவருக்கு தாயார் ஒருவர் இருப்பார். அவருக்கு உவைஸ் ஊழியம் புரிபவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டால், அல்லாஹ் அதை நிறைவேற்றி வைப்பான். ஆகவே, அவர் உமக்காகப் பாவ மன்னிப்புக் கோரி பிரார்த்திக்க வாய்ப்புக் கிட்டினால் அவரைப் பிரார்த்திக்கச் சொல்லுங்கள்"

என்று கூறினார்கள். ஆகவே, எனக்காகப் பாவமன்னிப்பு வேண்டி பிரார்த்தியுங்கள் என்று வேண்டினார்கள். அவ்வாறே உவைஸ் (ரஹ்) அவர்களும் உமருக்காகப் பாவ மன்னிப்பு வேண்டி பிரார்த்தித்தார்கள்.

(நூல் : முஸ்லிம் - 4971)

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் குழந்தைகளைக் கண்டால் தமக்காக பாவமன்னிப்பு கோரும்படி வேண்டுவார்கள். ஏனென்றால், நீங்களெல்லாம் பாவங்கள் அறியாத பரிசுத்த உள்ளம் கொண்டவர்கள் என்று அவர்களிடம் கூறுவார்கள். ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்களும் குழந்தைகளைக் கண்டால் இவ்வாறே கூறுவார்கள்.

ஹள்ரத் அப்துல்லாஹ் ரூமி (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்களிடம் "உங்களது சகோதரர்களுக்காக அல்லாஹ்விடம் நீங்கள் பிரார்த்திக்க வேண்டும் என்பதற்காக பஸராவிலிருந்து உங்களிடம் வருகை தந்துள்ளார்கள்" என்று கூறப்பட்டது. அப்போது அனஸ் (ரளி) அவர்கள், "இறைவா! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் பாவ மன்னிப்பை ஏற்பாயாக! எங்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் நன்மையை தருவாயாக! நரக வேதனையிலிருந்து எங்களை காப்பாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

(நூல்: அல்அதபுல் முஃப்ரத் - 633)

## உபகாரிகளுக்கு...

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : (ஒரு முறை) முஹாஜிர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, "நாயகமே! அன்சாரிகள் (எங்களுக்கு உபகாரம் செய்து) நன்மைகளை ஒட்டுமொத்தமாக ஈட்டிக் கொள்கின்றனர்" என்று கூறினார்கள். அண்ணலார் "அப்படியல்ல. அவர்களுக்காக அல்லாஹ்விடம் நீங்கள் பிரார்த்தித்துக் கொண்டும் அவர்களை புகழ்ந்து கொண்டும் இருக்கிறவரை. (உங்களுக்கும் அதே போன்ற நன்மைகள் கிடைக்கும்)" என்று கூறினார்கள்.

(நூல் : அபூதாவூத் - 4812, திர்மிதீ - 2411, அல்அதபுல் முஃப்ரத் - 217)

அன்சாரிகள், எவரும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு மிகப் பெருமளவில் தியாகங்களை முஹாஜிர்களுக்கு செய்திருந்தார்கள். இந்நிலையில் அன்சாரிகளுக்கு கிடைக்கவிருக்கும் நன்மைகள் அளவுக்கு தங்களுக்கு கிடைக்காது என்று முஹாஜிர்கள் நினைத்தார்கள்.

இதை அருமை நாயகம் (ஸல்) அவர்கள் மறுத்தார்கள். "முஹாஜிர்களே! நீங்கள் அவர்களின் சேவைகளை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அவற்றுக்காக அவர்களை பாராட்டியும், அவர்களுக்காக எந்நேரமும் இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டு இருந்தீர்களெனில் உங்களுக்கும் நன்மை கிடைக்

காமல் போகாது. இல்லையெனில் உங்களுடைய அந்த உணர்வு சரியே" என அண்ணலார் தெளிவுபடுத்தினார்கள்.

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது : "பள்ளிவாசலில் ஒரு மனிதர் குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பதைச் செவியுற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "அவருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!" இன்ன இன்ன அத்தியாயங்களில் நான் மறந்து விட்டிருந்த இன்ன இன்ன வசனங்களை அவர் எனக்கு நினைவுப்படுத்தி விட்டார்" என்று கூறினார்கள்.

(நூல் : புகாரீ - 6335)

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் புஸ்ர் (ரளி) அவர்கள் கூறியதாவது: "ஒருமுறை என் தந்தை (புஸ்ர் பின் அபீபுஸ்ர் (ரளி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விருந்து கொடுத்தார்கள். விருந்து முடிந்த பிறகு என் தந்தை அண்ணலாரிடம், "எங்களுக்காகப் பிரார்த்தியுங்கள்" என்று கூறினார் கள். அப்போது அண்ணலார் "இறைவா! நீ இவர்களுக்கு வழங்கிய உணவில் அருள்வளம் (பரக்கத்) புரிவாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

(நூல் : முஸ்லிம் - 4149, திர்மிதீ - 3490)

நமக்கு உபகாரம் செய்வோருக்கு நம்மால் முடிந்தளவு அவர்களுக்கு பிரதி உபகாரமும் செய்ய வேண்டும். அவர்களின் நலனுக்காக இறைவனிடம் பிரார்த்திக்கவும் வேண்டும்.

## நிம்மதியளிக்கும்

"[நபியே! நீர்] அவர்களுக்காக [நல்லருள் வேண்டி]ப் பிரார்த்தனை புரிவீராக. நிச்சயமாக உமது பிரார்த்தனை அவர்களுக்கு நிம்மதி அளிக்கும்"

- அல்குர்ஆன் (9 : 103)

ஹள்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு பெண் கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களிடம், "நாயகமே! எனக்காகவும், என் கணவருக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார். அப்போது அண்ணலார், "அல்லாஹ் உமக்கும், உம்முடைய கணவருக்கும் அருள்புரிவானாக" என்று பிரார்த்தித்தார்கள்."

(நூல் : அபூதாவூது, தஃப்சீர் இப்னு கஸீர் அத்தவ்பா வசனம் - 103)

## பெற்றோருக்கு

"என் இறைவா! நான் குழந்தையாக இருந்தபோது [மிக அன்பாக] என்னை அவர்கள் வளர்த்துப் பாதுகாத்தவாறே நீயும் அவ்விருவர் மீதும் அருள் புரிவாயாக!" என்று நீங்கள் பிரார்த்தியுங்கள்." - அல்குர்ஆன் (17:24)

"எங்கள் இறைவா! விசாரணை நடைபெறும் நாளில் எனக்கும் என் பெற்றோருக்கும் இறைநம்பிக்கை கொண்டோருக்கும் மன்னிப்பு வழங்குவாயாக! [என்று இப்ராஹீம் - [அலை] அவர்கள் கூறினார்கள்]"

- அல்குர்ஆன் (14 : 41)

பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

# இஸ்லாமிய மணமகன், மணமகள் தகவல் மையம்

**35 வயதுக்கு மேற்பட்ட மணமகன், மணமகள் தகவல்களை பதிவிடவும், தகவல்களை தெரிந்து கொள்ளவும் இந்த சேவை துவங்கப்பட்டுள்ளது**

# 35plusnikkah

35 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் சுய விவரக் குறிப்புடன் **35plusnikkah@gmail.com** என்ற மெயிலில் பதிவு செய்யவும்.

மணமகன் – மணமகள் தரப்பினர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களின் மெயில் வந்தவுடன் உங்கள் பகுதி ஜமாஅத்தை விசாரித்தபின் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

பதிவு செய்ய கட்டணம் இல்லை.

**தொடர்புக்கு :**

**35plusnikkah@gmail.com**

தவறான தகவல்களுடனும், தவறான நோக்கத்துடனும் பதிவிட வேண்டாம். உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஹள்ரத் அபூஉசைத் (ரளி) அவர்கள் கூறியதாவது : அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் நாங்கள் இருந்தபோது, பனூ சலமாக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து, "நாயகமே! என் பெற்றோர் இறந்தபின் அவ்விருவருக்கும் நான் நன்மை செய்வதற்கு வேறு ஏதேனும் கடமைகள் உண்டா?" என்று வினவினார். அண்ணலார், "ஆம்! அவ்விருவருக்காகவும் நீ பிரார்த்தனை செய்வது, அவ்விருவருக்காகவும் நீர் மன்னிப்புக் கோருவது" என்று கூறினார்கள்.

(நூல் : அபூதாவூது - 5142, இப்னுமாஜா, முஸ்னத் அஹ்மத், ரியாளுஸ் ஸாலிஹீன் - 343)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஒருவர் இறந்துபோன தன் பெற்றோருக்கு (நல்வாழ்வு கிடைப்பதற்காக) பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தால், அவர்களுக்காக பாவமன்னிப்பு கோரிக் கொண்டே இருந்தால், அல்லாஹ் அவரை நல்லடியார்களின் பட்டியலில் எழுதுகிறான்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : மிஷ்காத்)

பெற்றோர்கள் இருந்தாலும், இறந்து விட்டாலும் அவர்கள் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்காக பிரார்த்திப்பது பிள்ளைகள் மீது கடமையாகும். மேலும், இறந்து போய்விட்ட நம்முடைய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்காகவும் அவ்வப்போது பிரார்த்திக்க வேண்டும். நாம் இறந்தவர்களுக்காக பிரார்த்திப்பதின் மூலம் அவர்களின் அந்தஸ்து உயர்த்தப்படலாம். பாவங்கள் மன்னிக்கப்படலாம் என்கிறது இஸ்லாம்.

## இறைநம்பிக்கையாளர்களுக்கு

"எங்கள் இறைவா! எங்களையும் (மன்னிப்பாயாக!) இறை நம்பிக்கை கொள்வதில் எங்களை முந்திவிட்ட எங்கள் சகோதரர்களையும் மன்னிப்பாயாக!" - அல்குர்ஆன் (89 : 10)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "நீங்கள் ஜனாஸா தொழுகை தொழுதால் இறந்தவருக்காகத் தூய எண்ணத்துடன் பிரார்த்தனை செய்யுங்கள்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : அபூதாவூத் - 2784, இப்னுமாஜா - 1486 இப்னு ஹிப்பான்)

அன்னை உம்மு சலமா (ரளி) அவர்கள் கூறியதாவது : "(என் முதல் கணவர்) அபூ சலமா (ரளி) அவர்கள் இறந்த செய்தியை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் செவியுற்றதும், "இறைவா! அபூ சலமாவை மன்னிப்பாயாக! நல்வழி பெற்றவர்களிடையே அவரது தகுதியை உயர்த்துவாயாக! அவருக்குப் பிறகு எஞ்சியிருப்போருக்கு அவரைவிடச் சிறந்த துணையை வழங்குவாயாக!

அகிலத்தின் அதிபதியே! எங்களுக்கும் அவருக்கும் மன்னிப்பு அருள்வாயாக! அவரது மண்ணறையை விசாலமாக்குவாயாக! அதில் அவருக்கு வெளிச்சத்தை ஏற்படுத்துவாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.''

(நூல் : முஸ்லிம் - 1678)

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது : "அருமை நாயகம் (ஸல்) அவர்கள் என்னுடன் தங்கவேண்டிய இரவில் என்னிடம் வந்தார்கள். தமது மேலாடையை களைந்து விட்டு ஒருக்களித்து படுத்திருந்தார்கள். சிறிது நேரம் கழித்து (நான் உறங்கி விட்டதாக எண்ணிக் கொண்டு) மெதுவாக தனது மேலாடை மற்றும் காலணிகளை அணிந்து கொண்டு 'அல்பகீஉ' எனும் பொது மையவாடிக்கு சென்று, அங்கு நீண்ட நேரம் இருந்து மூன்று முறை கையை உயர்த்தினார்கள். பிறகு வீடு நோக்கித் திரும்பினார்கள். நான் அண்ணலாரிடம் இதைப் பற்றி வினவினேன். அண்ணலார், "வானவர் ஜிப்ரீல் 'உம் இறைவன் உம்மை 'பகீஉ' (எனுமிடத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள மண்ணறை)வாசிகளிடம் சென்று அவர்களுக்காக பாவ மன்னிப்புக் கோரும்படி கட்டளையிடுகிறான்' என்று கூறினார்" என்றார்கள்.

(நூல் : முஸ்லிம் 1774; நஸாயீ - 3901)


## அல்லாஹ்வின் இல்லத்திற்கு அள்ளி வழங்குங்கள்!

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

இறை இல்லத்தின் விரிவாக்கத்திற்காக 14 சென்ட் இடம் முடிப்பதற்கு தங்களால் இயன்ற பொருளுதவியை பேருதவியாக செய்து மறுமையில் சொர்க்கத்தில் ஒரு மாளிகையை பெற அன்புடன் அழைக்கிறோம். உதவித்தொகையினை பணமாகவோ, காசோலையாகவோ, D.D.யாகவோ கீழ்கண்ட பெயரில் செலுத்த அன்புடன் வேண்டுகிறோம்.

**பேங்க் விபரம் :**

பெயர் : **SELLUR NEW MOSQUE JAMATH**

பேங்க் : INDIAN BANK Branch : BIBIKULAM

A/C எண் : **7070061108**

IFSC CODE : IDIB000B066 CIF No : 30415785610

**செல்லூர் புதுப்பள்ளிவாசல் முஸ்லிம் ஜமாஅத்**

அஹிம்சாபுரம் மேலத்தெரு விசாலம், செல்லூர், மதுரை – 2.

தலைவர் : **K.சுல்தான் அலாவுதீன்** M.A.,B.L., 9842137386

செயலாளர் : **முஹம்மது அபூபக்கர்** B.Com., 9042450369

பொருளாளர் : **A.காதர் மைதீன்** 9443732567

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எனது சமுதாயத்தினர் கிருபை செய்யப்பட்டவர்கள். பாவியான நிலையில் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டாலும், அவர்களுக்காக பாவ மன்னிப்புக் கோரி கேட்கப்படும் பிரார்த்தனையின் மூலம் பாவங்கள் அழிக்கப்பட்டு பாவமில்லாதவர்களாய் தனது மண்ணறைகளை விட்டு வெளியேறுவார்கள்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : தப்ரானீ)

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் "வழிமாறிச் செல்லும் உங்கள் சகோதரர் ஒருவரை நீங்கள் கண்டால் அவரை செம்மைப் படுத்தி (நேர்வழியில்) நிலைத்திருக்கச் செய்யுங்கள். அவருக்குப் பாவமன்னிப்பு வழங்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள். அவருக்கு எதிராக ஷைத்தானுக்கு உதவுபவர்களாய் ஆகிவிடாதீர்கள்" என்று (மக்களிடம்) கூறினார்கள்."

(நூல்: தஃப்சீர் இப்னு அபீஹாத்திம், அபூநயீம், ஹுல்யத்துல் அவ்லியா, தஃப்சீர் இப்னு கஸீர் ஙாஃபிர் வசனம் - 3)

ஒரு முறை இறைவன் ஹள்ரத் மூஸா (அலை) அவர்களை நோக்கி "பாவம் செய்யாத நாவினால் என்னிடம் பாதுகாவல் கொள்வீராக!" என்று கூறினான். ஹள்ரத் மூஸா (அலை) அவர்கள், "அத்தகைய நாவு என்னிடம் இல்லையே!" என்று கூறினார்கள். இறைவன், "அவ்வாறாயின் மற்றவர்களின் நாவால் என்னை அழைத்துப் பாதுகாவல் கோருவீராக!" என்று கூறினான். ஹள்ரத் மூஸா (அலை) அவர்கள், "அது எப்படி?" என்று வியப்போடு வினவினார்கள். இறைவன், அதுதான் பிறர் உமக்காக என்னிடம் இரவு பகலாக இறைஞ்சும் விதமாக நீர் நடந்து கொள்வதாகும்" என்று கூறினான்.

பிறருக்கு பயனளிக்கும் விதமாக நமது வாழ்வு அமைந்து விட்டால், நமது நலனில் அக்கறை கொண்டு, நமக்காக உளப்பூர்வமாக பிரார்த்திக்கும் ஏராளமான நாவுகளை சம்பாதித்து விடலாம்.

வாழ்க்கையில் நாம் நல்லோர்களின் பிரார்த்தனையைப் பெற்று, நாமும் பிறர் நலன் நாடி பிரார்த்திக்கக்கூடிய நன்மக்களாக வாழ அல்லாஹுதஆலா அருள் புரிவானாக. ஆமீன்!

## பாவங்களுக்கு பரிகாரம் என்ன?

"ஆசூரா நோன்பின் சிறப்பு என்ன ?" என்று நபிகளாரிடம் கேட்கப்பட்டபோது "அது கடந்தகாலப் பாவங்களுக்கு பரிகாரமாகும்" என்று பதிலளித்தார்கள். (நூல்: முஸ்லிம்).

('ஆசூரா' என்ற அரபுச்சொல்லுக்கு 'பத்தாவது நாள்' என்று பொருள்)

# நீங்கள் கேட்டவை...

கேள்வி: முஸ்லிம்கள் ஓதிப் பார்ப்பது, தாயத்து போடுவது போன்ற செயல்களை செய்கிறார்களே! இதற்கு ஆதாரம் இருக்கிறதா?

பதில்: நம்மில் எவருக்கேனும் தலைவலி, காய்ச்சல், மன பயம், கண் திருஷ்டி போன்ற நோய்கள் ஏதேனும் ஏற்பட்டால் ஒரு ஆலிமிடமோ, ஷெய்கிடமோ, சாலிஹான மனிதரிடமோ சென்று ஓதி பார்ப்பதன் மூலம் சுகம் கிடைக்கும் என்று ஓதிப் பார்க்கிறோம். இவ்வாறு நாம் செய்வதற்குரிய ஆதாரத்தைப் பார்க்கலாம்.

'நான், ஹள்ரத் ஸல்மா (ரளி) அவர்களது கெண்டைக்கால் பகுதியில் காயத்தின் அடையாளமொன்றைக் கண்டு இது எப்படி ஏற்பட்டது?' என்று கேட்டபோது, 'இது கைபர் யுத்த களத்தில் வைத்து ஏற்பட்டது' என்று கூறினார். பின்னர் இது பற்றி பலரும் பலவிதமாகப் பேசியபோது, நான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டு வரப்பட்டு, நபியவர்கள் மூன்று முறை ஓதி ஊதினர். அதன்பின் இதுவரை அக்காயத்தினால் நான் பாதிக்கப்படவில்லை' என்று பதிலளித்தார்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் யஸீத் இப்னு அபீ உபைத் (ரளி) அவர்கள்
(நூல்: புஹாரி, கிதாபுல் மகாஸி, பாபு கஸ்வத்தி கைபர், அபூதாவூத், கிதாபுத் திப்பு, பாகம் 4 பக்கம் 219)

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வியாதியுற்றால், அவர்கள் சூரத்துல் ஃபலக் மற்றும் சூரத்துன் நாஸ் ஆகிய இரு ஸூராக்களையும் ஓதி தமக்குத் தாமே ஊதிக் கொள்வார்கள். வேதனை அதிகமாக இருந்தால் நான் ஓதி, அவர்களது கரத்தில் ஊதுவேன். அதனை அவர்கள் அருளை நாடி தன் மீது தடவிக் கொள்வார்கள்.

அறிவிப்பாளர் : அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்
(நூல்: புஹாரி ஃபழாயிலுல் குர்ஆன், பாடுல் முஅவ்விதத்தைன், முஸ்லிம், பாபு ருகிய்யத்தில் மரீழி ஃபில் முஅவ்விதாத்தி வந்நஃப்ஃஸ்)

**தண்ணீர் ஓதி அடித்தல்:**

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹள்ரத் தாபித் இப்னு கைஸ் (ரளி)யை நலம் விசாரிக்கச் சென்றிருந்தனர். அப்போது, அனைவரையும் பரிபாலிக்கும் இரட்சகனே! நோயை குணப்படுத்துவாயாக! என்று பிரார்த்தித்தனர்.

பின்னர் மதீனாவிலுள்ள பர்ஹானா என்னுமிடத்திலிருந்து சிறிது மண்ணை எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு அதில் தண்ணீரையும் கலந்து ஓதி ஊதிய பின் நோயாளியின் மீது ஊற்றினர் நபிகளார்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் அஹ்மத் இப்னு ஸாலிஹ் (ரளி) அவர்கள் (நூல்: அபூதாவூத், கிதாபுத் திப்பு, பாபுர்ருகா பாகம் 4 பக்கம் 214, இப்னு மாஜா, பாபுல் ஹுஃம்மா மின் ஃபைஹிஜஹன்னம்)

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம் அவர்கள் ஜம்ரத்துல் அகபாவிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும்போது ஒரு பெண் நோயால் பாதிக்கப்பட்டிருந்த குழந்தை ஒன்றுடன் நபியவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள். அவள் நபியவர்களை நோக்கி, "அல்லாஹ்வின் ரஸூலே! இக்குழந்தை தான் எனது குடும்பத்தின் கடைசி குழந்தை. இது நோயால் பாதிக்கப்பட்டு பேசும் சக்தியை இழந்து விட்டுள்ளது" என்று கூறவே, அது கேட்ட நபியவர்கள், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வருமாறு சொல்ல, தண்ணீர் கொண்டு வரப்பட்டது. பின்னர் நபியவர்கள் அதில் தமது முபாரக்கான இரு கைகளையும் கழுவிய பின் வாயையும் அதனுள் கொப்பளித்து அத்தண்ணீரை அப்பெண்ணிடம் கொடுத்து, அதனை அக்குழந்தைக்கு பருக தந்து பின்னர் அக்குழந்தையின் மீது ஊற்று. அல்லாஹ்வைக் கொண்டு சுகம் பெறும் என்பதாகக் கூறி அனுப்பி வைத்தனர். (நூல் : இப்னுமாஜா, பாகம் 4 பக்கம் 130)

**தாயத்து அணிதல்:**

உங்களில் ஒருவர் தூக்கத்தில் திடுக்கிட்டால், 'அவூது பி கலிமாத்தில்லாஹித் தாம்மாத்தி மின் ஃகழபிஹி வ இஃகாபிஹி வஷர்ரி இபாதிஹி வமின் ஹமஸாத்திஷ் ஷயாத்தீனி வஅன்ய்யஹ்ழுரூன் ஃப இன்னஹா லன் தாழுர்ரஹு' என்று ஓதிக் கொள்ளுமாறு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர். இனி அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், இதனை பருவமடைந்த தமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பவராகவும், பருவமடையாத குழந்தைகளுக்கு ஒரு பொருளில் எழுதி அதனை அவர்களின் கழுத்தில் தொங்க விடுபவராகவும் இருந்தனர்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அம்ரு இப்னு ஷுஐப் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ, கிதாபுத் தஅவாத் பாபு மன் அவா இலா ஃபிராஷிஹீ, பாகம் 5 பக்கம் 313, அபூதாவூத், கிதாபுத் திப்பு, பாகம் 4 பக்கம் 218)

**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

**பாத்திரத்தில் எழுதிக் கொடுத்தல்:**

கர்ப்பிணிப் பெண்களுக்கு பிள்ளைப்பேறு கஷ்டத்திற்குரியதாகி விட்டால், "பிஸ்மில்லாஹி லாஇலாஹ இல்லாஹுவல் ஹலீமுல் கரீம். ஸுப்ஹானல்லாஹி ரப்பிஸ் ஸமா வாத்திஸ் ஸப்இ வரப்பில் அர்ஷில் அளீம். கஅன்னஹும் யவ்ம யரௌனஹாலம் யல்பஸு இல்லா அஷிய் யத்தன் அவ்ழுஹாஹா, கஅன்னஹும் யவ்ம யரௌனமா யூஅதூன லம் யல்பஸு இல்லா ஸாஅத்தன் மின் நஹாரின் பலாஃக் ஃபஹல் யுஹ்லகு மில்லல் கௌமுல் ஃபாஸிகூன்" என்பதை ஒரு பாத்திரத்தில் எழுதி அதனை பருகக் கொடுத்து பின் அத்தண்ணீரைக் கொண்டு முகம் கை போன்றவைகளை கழுவிக் கொள்ளட்டும்" என்று ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறுகின்றனர். (நூல்: முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா, மகாலாத்துஸ் ஸுன்னியா, பக்கம் 182)

இனி இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரளி) அவர்கள் தண்ணீர் ஓதிக் கொடுக்கும்போது குர்ஆனின் வசனங்களையும், துஆக்களை யும் ஓதுவதற்குப் பதிலாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முபாரக்கான திருமுடியை தண்ணீரில் முக்கியெடுத்து அதனை அருந்தக் கொடுப்பவர்களாக இருந்தனர்.

அல்லாஹ் அறிந்தவன்; அல்லாஹ் பாதுகாவலன்.


ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

# பன்னீர் பூக்கள்

**- அன்வர் ஜீ,** சேலம் – 5.

"கியாமத் நாளன்று மனிதர்களின் செயல்களைக் குறித்து கேள்வி கணக்கு பார்க்கப்படும். எவரின் நன்மைகளில் ஒரு நன்மை கூடுதலாகிவிடுமோ அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விடுவார். இன்னும் எவருடைய தீமைகளில் நன்மைகளை விட ஒன்று அதிகரித்துவிடுமோ அவர் நரகில் நுழைந்துவிடுவார். மேலும் மறுமையின் தராசு எவ்வளவு பெரியது என்றால் வானம், பூமி ஆகியவற்றுக்கு இடையில் உள்ள அனைத்தையும் அந்தத் தராசின் ஒரு தட்டில் வைத்து விடலாம்."

- **ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்.**

"சிறு துன்பத்தைப் பெரிதாக கருதுபவனை, இறைவன் பெருந்துன்பத்தில் சிக்க வைக்காமல் இருப்பதில்லை."

- **ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்.**

"இலஞ்சம் வாங்குபவர், லஞ்சம் கொடுப்பவர், இலஞ்சத் திற்காக தரகு வேலை செய்பவர் ஆகிய மூவர் மீதும் நபி (ஸல்) அவர்கள் சாபமிட்டுள்ளார்கள்."

- **ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.**

"ஒவ்வொரு நற்பழக்கத்தையும் உருவாக்கிக் கொள்ள ஒரு செயல் காரணமாக இருக்கும். எல்லாவிதமான நன்மைகளை பெற்றுக் கொள்ள வழிவகுப்பது பொறுமைதான். சோதனை களின்போதும் கஷ்டத்தின்போதும் பொறுமையைக் கடைப் பிடித்தால் மாபெரும் பாக்கியம் பெறுவார்."

- **ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள்.**

"ஒருவரின் அமல்கள் கனமற்று, இலோகிறது என்றால் அது அசத்தியத்தைப் பின்பற்றியதால் ஏற்பட்ட விளைவாகும்."

- **ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள்.**

தொடர் - 5

# ஏந்தல் நபியவர்கள் எழுத்தறியாதது ஏன்?

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

"எவர்கள் [ஆயிஷா (ரளி) மீது பொய்யாக] அவதூறு கூறினார்களோ, அவர்களும் உங்களிலுள்ள ஒரு கூட்டத்தினர் தாம் [நம்பிக்கையாளர்களே!] அதனால் உங்களுக்கு ஏதும் தீங்கு ஏற்பட்டு விட்டதாக நீங்கள் எண்ண வேண்டாம். அது உங்களுக்கும் நன்மையாகவே முடிந்தது. [அவதூறு கூறியவர்கள்] ஒவ்வொருவருக்கும், அவர்கள் [அவதூறு கூறித்] தேடிக் கொண்ட பாவத்துக்குத் தக்க தண்டனை [யாக என்பது கசையடிகள்] உண்டு, இந்த அவதூறில். அவர்களில் எவன் பெரும் பங்கு கொண்டானோ, அவனுக்கு [இத்தண்டனையும்] இன்னும் கடுமையான வேதனையுமுண்டு.

இதனை நீங்கள் கேள்வியுற்ற மாத்திரத்தில் [இதனை மறுத்து]" நம்பிக்கை கொண்ட ஆண்களும், நம்பிக்கை கொண்ட பெண்களும், தங்களைப் பற்றி நல்லெண்ணம் வைத்து" இது பகிரங்கமான அவதூறே" என்று நீங்கள் கூறியிருக்க வேண்டாமா?

[அல்லது] இதற்கு வேண்டிய நான்கு சாட்சிகள் அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டாமா? இதற்குரிய சாட்சிகளை அவர்கள் கொண்டு வராததினால், நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள் தாம் என்று அல்லாஹ்விடத்தில் ஏற்பட்டுவிட்டது.

இம்மையிலும், மறுமையிலும் உங்கள் மீது அல்லாஹ்வுடைய அருளும், கிருபையும் இல்லாதிருந்திருப்பின், இதனை நீங்கள் கூறிக் கொண்டிருந்ததின் காரணமாக, மகத்தான வேதனை உங்களைப் பிடித்துக் கொண்டிருக்கும் [ஒருவரிடமிருந்து ஒருவராக இப்பொய்யான] அவதூறை நீங்கள் திட்டமாக அறியாத விஷயத்தை உங்கள் நாவுகளால் எடுத்துக் கொண்டு, நீங்கள் உங்கள் வாயால் கூறிக் கொண்டு திரிகிறீர்கள். இதனை நீங்கள் இலேசாகவும், மதித்து விட்டீர்கள். ஆனால், இதுவோ அல்லாஹ்விடத்தில் [பாவங்களில்] மிக்க மகத்தானது.

நீங்கள் இதனைக் கேள்வியுற்ற மாத்திரத்தில் அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன், இத்தகைய விஷயத்தை நாம் [நம் வாயால்]

பேசுவதும் நமக்குத் தகுதியில்லை. இது மாபெரும் அவதூறே என்று நீங்கள் கூறியிருக்க வேண்டாமா?

மெய்யாகவே நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், இத்தகைய விஷயத்தை இனி ஒரு காலத்திலும் நீங்கள் மீண்டும் செய்யக் கூடாது என அல்லாஹ் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.

இவ்வாறு அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு விவரித்துக் கூறுகிறான். அல்லாஹ் [அனைத்தையும்] நன்கறிந்தவனும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்''

- அல்குர்ஆன் (24 : 11 - 18)

இச்சம்பவத்தை இட்டுக் கட்டியவர்களில் மிஸ்தஹ் பின் உஸாமா (ரளி), ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரளி), ஹம்னா பின்த் ஜஹ்ஷ் (ரளி) ஆகியோருக்கு 80 கசையடிகள் கொடுக்கப்பட்டன. அவதூறுக்கு மூலகாரணமான அப்துல்லாஹ் பின் உபை தண்டிக்கப்படவில்லை. ஏனெனில், மறுமையில் இவனுக்கு மகத்தான தண்டனை உண்டு என்று அல்லாஹ் குர்ஆனில் எச்சரிக்கை செய்து விட்டான் என்பதாலேயாம்.

அவதூறுச் செய்தி கேட்டு, நபி (ஸல்) அவர்கள் அமைதி காத்தனர். கவலை கொண்டனர். தோழர்களிடம் ஆலோசனை கலந்தனர். அன்பு மனைவியைப் பிரிந்திருந்தனர். பிறகு, ஒரு மாத காலம் கடந்த பின், இறைச் செய்தி அருளப்பட்டு, அன்னை ஆயிஷா (ரளி) அவர்களின் பரிசுத்தத் தன்மை நிலை நாட்டப்பட்டு, அண்ணலாரின் மனக்கவலை மறைந்து, மகிழ்ச்சி பூத்தது.

## கிப்லா மாற்றம்

இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் முஸ்லிம்கள், பைத்துல் முகத்தஸை (ஜெரூசலம்) முன்னோக்கித் தொழுது வந்தனர். பதினாறு அல்லது பதினேழு மாதங்கள் இது தொடர்ந்தது.

என்ற போதிலும் மக்காவில் உள்ள இறையில்லம் கஅபாவை நோக்கிய தங்களது கிப்லா இருக்க வேண்டும் என்பதே நபி (ஸல்) அவர்கள் விருப்பமாக இருந்தது. ஆனால், தாங்களாகவே கிப்லாவை மாற்ற விரும்பவில்லை. அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்திருந்தனர். ஆகவே, அல்லாஹ் கஅபாவை முன்னோக்கும்படி அருள் செய்தி அருளினான்.

[நபியே!] உம்முடைய முகம் [அடிக்கடி] விண்ணை நோக்கித் திரும்புவதை நாம் காண்கிறோம். எனவே, நீர் விரும்புகிற கிப்லாவிற்கு [இதோ] உம்மைத் திருப்புகிறோம். ஆகவே, உமது முகத்தை [கஅபா] இருக்கும்] புனிதப் பள்ளி வாசலின் திசையில் திருப்பிக் கொள்ளுங்கள். [முஸ்லிம்களே!] நீங்களும் [இனி] எங்கிருந்தாலும் உங்கள் முகங்களை

அதன் திசையிலேயே திருப்புங்கள்.

- அல்குர்ஆன் (2 : 144)

இவ்விறைச் செய்தி அருளப் பட்டவுடன் கஅபாவை முன்னோக்கி தொழுத முதல் தொழுகை அஸர் தொழுகையாகும். நபி (ஸல்) அவர்களுடன் மக்களில் சிலரும் தொழுதனர்.

இவர்களிலொருவர் புறப்பட்டு (மற்றொரு) பள்ளிவாசலில் ருகூஃஉ (குனிதல்) நிலையில் இருந்தவர்களிடம் இச்செய்தியைத் தெரிவித்தார். அவர்களும் அப்படியே (ருகூவிலிருந்தவாறே) வட்டமடித்து, கஅபா முன்னோக்கித் திரும்பி தொழுது தொழுகையை முடித்தனர். (தஃப்சீர் இப்னு கஸீர் பாகம் - 1, அல்பகரா அத்தியாயம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினர் : "மஸ்ஜிதுல் ஹராம் புனிதப் பள்ளிவாசலில் தொழுகுவோருக்கு கஅபா 'கிப்லா' ஆகும். புனித ஹரம் எல்லையில் தொழுகுவோருக்கு மஸ்ஜிதுல் ஹராம் 'கிப்லா' ஆகும். பூமியில் மற்ற இடங்களில் இருக்கும் என் சமுதாயத்தாருக்கு ஹரம் எல்லை 'கிப்லா' ஆகும்."

அறிவிப்பவர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்

(நூல் : பைஹகீ)

## முந்திய வரலாறு

நபி (ஸல்) அவர்கள் முந்திய நபிமார்களின் வரலாறு மற்றும் முந்திய வரலாற்று நிகழ்வுகள் ஆகியன பற்றி அறிந்திருக்கவில்லை. இறைவன் வஹீ மூலம் தெரிவித்து அவைகளை அறியச் செய்தான்.

உதாரணமாக, நபி மூஸா (அலை) அவர்கள் மற்றும் ஃபிர்அவ்ன் பற்றிய வரலாறு பற்றி அல்லாஹ் கூறுகிறான்.

"[நபியே! தூர்ஸீனாய் என்னும் மலையில்] நாம் மூஸாவுக்குக் கற்பலகையில் எழுதப் பட்ட] கட்டளைகளை விதித்த போது நீங்கள் அதன் மேற்குத் திசையில் இருக்கவில்லை. அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் நீங்கள் ஒருவருமல்ல.

எனினும், [அவர்களுக்குப் பின்னர்] எத்தனையோ வகுப்பினரை நாம் உற்பத்தி செய்தோம். அவர்கள் சென்றும் நீண்ட காலம் ஆகி விட்டது. [அவ்வாறிருந்தும் மூஸாவைப் பற்றிய இவ்வளவு உண்மையான சரித்திரத்தை நீங்கள் கூறுவதெல்லாம் இறைவனால் உங்களுக்கு அறிவிக்கப் பட்டதால் தான் என்று இவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?] அன்றி [நபியே!] மத்யன்வாசிகளிடம் நீங்கள் தங்கியிருக்கவில்லை. [அவ்வாறிருந்தும் அவர்களைப் பற்றிய] நம்முடைய வசனங்களை நீங்கள் இவர்களுக்கு ஓதிக் காண்பிக்கின்றீர்கள். ஆகவே, நிச்சயமாக நாம் உங்களை நம் தூதர்களில்

ஒருவராகவே அனுப்பி வைத்தி ருக்கின்றோம். [நம்முடைய வஹி யின் மூலம் கிடைத்த விஷயங் களையே நீங்கள் அவர்களுக்கு அறிவிக்கின்றீர்கள்]"

- அல்குர்ஆன் (28 : 44, 45)

நபி ஈஸா (அலை) அவர்கள் மற்றும் அவர்களின் அன்னை ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர் கள் ஆகியோர் பற்றிய வரலாற் றில் அல்லாஹ் கூறுகிறான் :

"[நபியே!] இவை [அனைத் தும் நீங்கள் அறியாத] மறை வான விஷயங்களாகும். இவை களை நாம் உங்களுக்கு வஹி யின் மூலம் அறிவிக்கின்றோம். அன்றி, மர்யமை [வளர்க்க] யார் பொறுப்பேற்றுக் கொள்வது என்று [அறிய] அவர்கள் தங்கள் எழுதுகோல்களை [ஆற்றில்] எறிந்தபோது நீங்கள் அவர் களுடன் இருக்கவில்லை. [இதைப் பற்றி] அவர்கள் தர்கித்துக் கொண்டபோதும், நீங்கள் அவர் களுடன் இருக்கவில்லை."

- அல்குர்ஆன் (3 : 44)

நபி யூஸுஃப் (அலை) அவர் கள் பற்றிய ஒரு நிகழ்வைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான் :

"[நபியே! இது [நீங்கள் அறி யாத] மறைவான விஷயங்களில் உள்ளதாகும். அவர்கள் சூழ்ச்சி செய்து [யூஸுஃபைக் கிணற்றில் தள்ள வேண்டுமென்ற] தங்கள் திட்டத்தை வகுத்தபொழுது நீங் கள் அவர்களுடன் இருக்கவில்லை. [எனினும்] இவைகளை நாம் உங் களுக்கு வஹி மூலமே அறிவித் தோம். - அல்குர்ஆன் (12 : 102)

நபி (ஸல்) அவர்கள், இவ் வரலாறுகளை யூதர்கள் மற்றும் கிறித்தவர்களிடமிருந்து தெரிந்து கொண்டனர் என்று குறைஷி கள் கூறுவது பொய்யென்பது உறுதியாகிறது.

## நபி (ஸல்) அவர்கள் மீது விமர்சனம்

நபி (ஸல்) அவர்கள் சில செயற்கள் மற்றும் மேற்கொண்ட முடிவுகள் காரணமாக அல்லாஹ் வின் விமர்சனத்திற்கும் கண்டனத் திற்கும் உட்படுத்தப்பட்டனர்.

இவற்றை அவர்கள் வெளி யிடாமல் மறைத்திருக்கலாம். வெளியிட்டதன் மூலம் அண்ண லாரின் ஒப்பற்ற வாய்மையும், நேர்மையும், உயர் பண்பும் சுடர் விட்டுப் பிரகாசிக்கக் காண் கிறோம்.

## கண்பார்வையற்ற தோழர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (ரளி) அவர்கள்

குறைஷித் தலைவர்கள் சில ருடன் நபி (ஸல்) அவர்கள் உரை யாடி இஸ்லாத்தை எடுத்துரைத்து அழைப்புப் பணியில் ஈடுபட்டி ருந்தனர். உரையாடலில் பங் கேற்ற குறைஷித் தலைவர்கள் வருமாறு :

1) உத்பா இப்னு ராபியா.

2) ஷைபா இப்னு ராபியா.

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

3) அபூஜஹ்ல்.
4) அல்வலீத் இப்னு முகீரா.
5) உமய்யா இப்னு கலஃப்.
6) அம்ர் இப்னு ஹிஸாம்.
7) அப்பாஸ் இப்னு முத்தலிப் ஆகியோர்.

(In the Shade of Quran (திருகுர்ஆனின் நிழலில்) Allama Sayyid Qutb (Rah) பக்கம் 42)

அப்பொழுது கண்பார்வை யற்ற தோழர் நபியவர்களைத் தேடி அங்கு வந்தார். நபி (ஸல்) அவர்கள் உரையாடுவதன் நோக்கம் குறைஷித் தலைவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் இஸ்லாம் வலுப்பெறும் என்பதே. இதையறியாத நபித் தோழர் "நபியே! அல்லாஹ் உமக்கு கற்றுக் கொடுத்திருக்கும் கல்வி யிலிருந்து எனக்குக் கற்றுத் தாருங்கள்" என்று வேண்டினர்.

நபி (ஸல்) அவர்கள் அழைப்புப் பணியில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். தோழரை உடனடியாகக் கவனிக்காமல் முகத்தையும் திருப்பினார்கள்.

ஆனால், குறைஷியர்கள் எவரும் இஸ்லாத்தை ஏற்க வில்லை.

எனவே, இஸ்லாத்தை நாடி, இறைவழிகாட்டலைத் தேடி ஆர்வத்துடன் ஓடி வந்த அந்த தோழரை கவனிக்காமல் குறைஷித் தலைவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? என்று நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் கண்டித்தான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"அவர் முகம் சுளித்தார், புறக்கணித்தார். [எதற்காக எனில்] அந்த பார்வை இழந்தவர் அவரிடம் வந்ததற்காக [நபியே! உம்மிடம் வந்த] அவர் [பாவத்திலிருந்து] தூய்மை பெற்றிடலாம் என்பது குறித்து உமக்கு என்ன தெரியும்? அல்லது அவர் நல்லுணர்வு பெறலாம் [அதன் மூலம் அறிவுரை அவருக்குப் பயன் அளிக்கும் என்பது குறித்து] உமக்கு என்ன தெரியும்?"

- அல்குர்ஆன் (80 : 1 - 4)

இலக்கிய நயத்துடன் அமைந்துள்ள இத்திருவசனங்கள், நபியே! ஏன் இப்படிச் செய்தீர்? என்று நேரடியாக அழைத்துக் கூறாமல், அவர் முகம் சுளித்தார், புறக்கணித்தார் எனும் படர்க்கை வினைச்சொல்★லில் கண்டனம் அமைந்துள்ளது. அதாவது, என் நல்லடியார் ஒருவரை அவர் கண் பார்வையிழந்த ஏழை என்பதற்காக என்னுடைய நபி இப்படிப் புறக்கணித்து விட்டார். அந்த புறக்கணிப்புக்குப் புறக்கணிப்பையே நான் பதிலாகத் தருகிறேன் என்று சுட்டாமல் சுட்டிக் காட்டும் இந்தப்பாணி.

★ படர்க்கைவினைச்சொல்என்பதுபேசுபவர், கேட்பவர், பேசப்படுபவர் ஆகிய மூன்று இடங்களில் பேசப்படுபவரைக் குறிக்கும்.

குர்ஆன் இலக்கிய நயமிக்க ஓர் உயர் வேதமாகவும் திகழ் கிறது என்பதற்கான இன்னொரு சான்றாகும்.

(தஃப்சீர் இப்னு கஸீர் - பாகம் 10; 80 - அபஸ (முகம் சுளித்தார்) அத்தியாயம் விளக்கவுரை பக்கம் 49, 50)

## தடைசெய்தல்

நபி (ஸல்) அவர்கள் தங் களின் அடிமைப்பெண் மாரிய்யத் துல் கிப்திய்யா (ரளி) அவர் களுடன் இல்லற உறவு கொள் வதையும், தேன் அருந்துவதை யும் தமக்குத்தாமே தடை செய்து கொண்டனர்.

1. நபி (ஸல்) அவர்கள் (தம் புதல்வர்) இப்ராஹீமின் தாயார் மாரிய்யா கிப்திய்யா (ரளி) அவர்களுடன் தம் மனைவி ஒரு வரின் வீட்டில் வைத்து உறவு கொண்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய வீட்டில், என் னுடைய படுக்கையில் வைத்து இவ்வாறு ஏன் செய்தீர்கள்?" என்று அந்த மனைவி கேட்டார்.

உடனே நபியவர்கள், "மாரிய்யா கிப்திய்யாவுடன் இனி தாம்பத்திய உறவு கொள்ள மாட்டேன்" என்பதாக அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறினார்கள்.

அப்பொழுதுதான் "நபியே! அல்லாஹ் உமக்கு அனுமதித் திருக்கும் ஒன்றை ஏன் தடை செய்து கொள்கிறீர்?" எனும் வசனத்தை அல்லாஹ் இறக்கியருளினான்.

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறினர் :

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு ஓர் அடிமைப் பெண் இருந்தார். அவர்கள் அந்தப் பெண்ணுடன் (சில நேரங் களில்) உறவு கொள்பவர்களாய் இருந் தார்கள். அது குறித்து ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களும், ஹள்ரத் ஹப்ஸா (ரளி) அவர் களும், நபியவர்களிடம் தொடர்ந்து கேள்வி கேட்டு, நச்சரித்துக் கொண்டே இருந்தார்கள். இறுதி யில் நபியவர்கள் அந்த அடிமைப் பெண்ணை தம் மீது தடை செய்யப்பட்டவர்களாக ஆக்கிக் கொண்டார்கள். (சுனந்நஸாயீ)

2) நபி (ஸல்) அவர்கள், இனி மேல் ஒருபோதும் தேன் அருந்த மாட்டேன் என்று சத்தியம் செய்தனர்.

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கின்றனர் :

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் (தம் துணைவி யார்) ஸைனப் பின்த் ஜஹ்ஸ் (ரளி) அவர்களிடம் அவர்களது அறையில் தேன் சாப்பிட்டு விட்டு அவரிடம் (அதிக நேரம்) தங்கி விடுவார்கள். (இது பிடிக்காமல் நபியவர்களுடைய துணைவி யாரான நானும், ஹப்ஸாவும் இவ்வாறு கூடிப் பேசி முடிவு செய்து கொண்டோம். (தேன் சாப்பிட்டபின்) நம்மவரில் எவரிடம் நபி (ஸல்) அவர்கள் முதலில் வருவார்களோ அவர்,

நபி (ஸல்) அவர்களிடம் "கருவேலம் பிசின் சாப்பிட்டீர்களா? உங்களிடமிருந்து பிசினின் துர்வாடை வருகிறதே" என்று கூறிட வேண்டும்.

(வழக்கம் போல் ஸைனபின் வீட்டிலிருந்து தேன் சாப்பிட்டு விட்டு நபி (ஸல்) அவர்கள் வந்தபோது, நாங்கள் பேசி வைத்திருந்த பிரகாரம் கூறியதற்கு) அவர்கள் "இல்லை, நான் பிசின் சாப்பிடவில்லை) ஸைனப்பின் ஜஹ்ஷிடம் (அவரது அறையில்) தேன் குடித்து வந்தேன். (இனிமேல்) நான் ஒரு போதும் அதைக் குடிக்க மாட்டேன். நான் சத்தியமும் செய்து விட்டேன்" என்று கூறிவிட்டு, "இது குறித்து எவரிடமும் தெரிவித்து விடாதே" என்றும் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி 4912)

அல்லாஹ்வினால் அனுமதிக்கப்பட்ட ஒன்றை நபியவர்களே கூட எந்தக் காரணத்தை முன்னிட்டும் தடை செய்வதற்கு ஷரீஅத்தில் அனுமதி இல்லை. இதனால்தான் நபியவர்களையும் அல்லாஹ் கண்டித்தான். அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்தி, நபியவர்களுக்கு நெருக்கடி கொடுத்த அவ்விரு மனைவியருக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அல்லாஹ் கூறினான் :

**"நபியே! அல்லாஹ் உமக்கு அனுமதித்திருக்கும் ஒன்றை ஏன் தடை செய்து கொள்கிறீர்? உம்முடைய மனைவியரின் உவப்பைப் பெற ஏன் விரும்புகிறீர்? அல்லாஹ் [உம்மை மன்னிப்பானாக! அவன்] பெரும் மன்னிப்பாளனாகவும் கிருபையாளனாகவும் இருக்கின்றான்."**

- அல்குர்ஆன் (66 : 1)

**"[இதற்கான] உங்களின் சத்தியங்களிலிருந்து விடுபடுவதை, திண்ணமாக அல்லாஹ் உங்களுக்கு சட்டப்பூர்வமாக அனுமதித்து விட்டான். [முஸ்லிம்களே!] அல்லாஹ் உங்கள் [விவகாரங்களின்] பொறுப்பாளன் ஆவான். மேலும் அவன் அனைத்தையும் அறிந்தவனாகவும், நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான்"**

- அல்குர்ஆன் (66 : 2)

இவ்வசனம் அருளப்பட்டவுடன் நபி (ஸல்) அவர்கள் தாங்கள் செய்த சத்தியத்திற்கு பரிகாரத்தை நிறைவேற்றினர்.

சத்திய முறிவுக்கான பரிகாரம் வருமாறு :

பத்து ஏழைகளுக்கு நடுத்தரமான உணவு அளிக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு உடை அளிக்க வேண்டும் அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். இவற்றில் எதுவுமே இயலாத பொழுது மூன்று நாள் நோன்பு நோற்க வேண்டும்.

(தஃப்சீர் இப்னு கஸீர் - 9வது பாகம்; 66 - அத்தஹ்ரீம் (தடை செய்தல்) அத்தியாயம் விளக்கவுரை)

*(தொடரும்)*

# மூட்டு வலி : சுயமாகப் பராமரிக்கும் வழிமுறைகள்

சிந்தியா ஸ்ரீகேசவன்

மூட்டழற்சி (ஆஸ்டியோ - ஆர்த்ரைட்டிஸ்) என்பது இடுப்பு, முழங்கால், தோள்பட்டை, கை விரல்மூட்டுகளைப்பாதிக்கும்நாள் பட்ட நோய். 2020 கணக்குப்படி, உலகம் முழுவதும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களில், ஏறக்குறைய 65 கோடி பேர் மூட்டழற்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். முழங்கால் மூட்டின் ஜவ்வு, சுற்றியுள்ள அமைப்புகளில் தேய்மானம் ஏற் பட்டு மூட்டழற்சி உண்டாகும்.

## முக்கிய காரணம் :

முதுமை, அதிக உடல் எடை / உடல் பருமன், முழங்காலில் ஏற் பட்ட காயங்கள், மூட்டில் அதிக அழுத்தம், பலவீனமான கால் தசைகள், பரம்பரை பாதிப்பு.

## யாரை அதிகம் பாதிக்கும் ?

முதியவர்கள், 50 வயதிற்கு மேற்பட்ட மாதவிலக்கு நிற்கும் நிலையிலுள்ள பெண்கள்.

## அறிகுறிகள் :

மூட்டழற்சி படிப்படியாக ஆரம் பித்து வருடகணக்கில் தொடரக் கூடும். ஒவ்வொருவருக்கும் வலி, சிரமங்களின் அளவு மாறுபடும்.

- நீட்டி மடக்குவது போன்ற மூட்டு அசைவுகள் குறைய ஆரம்பிக்கும்.
- நடக்கும்போது, படி ஏறி / இறங் கும்போது வலி உண்டாகும்.
- ஓய்வெடுத்தால் வலி குறையும்.
- காலை எழுந்தவுடன், 30 நிமிடங்கள் வரை மூட்டு இறுகிப்போயிருக்கும்.
- மூட்டுக்குள் உராய்கிற சத்தம் கேட்கும்.
- மூட்டில் வீக்கம் ஏற்படக்கூடும். நீண்ட காலத்தில் மூட்டின் ஓரப்பகுதிகளில் முட்கள் போல சிறு எலும்புகள் உரு வாகி வலி அதிகரிக்கும்.
- தசைகள் வலுவிழந்து மூட்டின் அமைப்பே மாறவும் கூடும்.

## என்னென்ன பாதிப்புகள் ஏற்படலாம் ?

- படுப்பது, உட்காருவது, நிற்பது, எழுந்திருப்பது, நடப்பது, படி ஏறுவது, கழிப்பறையைப் பயன் படுத்துவது உள்ளிட்ட அனைத் தும் கடினமாக இருக்கும்.
- வலியால் போதுமான தூக்கம் வராது; மனச்சோர்வு, அயர்ச்சி, விரக்தி போன்றவைகள் ஏற்படலாம்.
- குடும்ப நிகழ்வுகள், பொழுது போக்குச் செயல்பாடுகளில் ஈடுபட முடியாமல் போகும்.

## சுய பராமரிப்பு

மூட்டழற்சியை முழுமையாகக் குணப்படுத்துவது சாத்திய மில்லை. ஆனால், அதைக் கட்டுப்படுத்துவது சாத்தியமே.

மூட்டழற்சி நீண்ட காலத் திற்குத் தொடரும் ஒரு பிரச்சினை யாக இருப்பதால், அதைச் சுய மாகப் பராமரிக்கத் தெரிந்திருக்க வேண்டும். எளிய சுயபராமரிப்பு வழிமுறைகள் மருத்துவ ஆய்வு களின் அடிப்படையில் தொகுக்கப் பட்டுள்ளன. வலியைக் கட்டுக் குள் வைத்து, மூட்டுமாற்று அறுவை சிகிச்சை தேவைப் படும் அளவுக்கு மோசமாகாமல் இருக்க இவை உதவும்.

## வலி நிவாரணம்

மருத்துவர் பரிந்துரைப்படி, ஸ்டீராய்டு அற்ற மாத்திரைகள், டைக்ளோபெனக் போன்ற களிம்புகள் அல்லது மூட்டுக்குள் செலுத்தப்படும் ஸ்டீராய்டு ஊசிகள் எடுத்துக்கொள்ளலாம்.

- பிசியோதெரபிஸ்ட் பரிந்துரைப் படி, மெழுகு ஒத்தடம் - டென்ஸ் (TENS) மின் சிகிச்சை பெறலாம்.
- வீட்டில் சுடுநீர் ஒத்தடம் கொடுக்கலாம்.
- மூட்டில் வீக்கம் இருந்தால், ஒரு துண்டுத்துணியில் 5-6 சிறுஐஸ் கட்டிகளைச் சுற்றி, 10 நிமிடங் கள் வரை விட்டுவிட்டு ஒத்தடம் கொடுக்கலாம் இவை வலி, வீக்கத்தைக் தற்காலிகமாக மட்டுமே குறைக்கும்.

## மற்ற பயிற்சிகள்

மூட்டுப் பயிற்சிகளோடு, நடைப்பயிற்ச்சி, யோகா, சைக் கிள் ஓட்டுவது போன்ற முழு உடலுக்கான மிதமான பயிற்சி களையும் செய்ய வேண்டும். இவற்றில், உங்களுக்கு வசதியாக உள்ள ஏதேனும் ஒன்றை, வாரத் தில் 3 அல்லது 4 நாட்கள், படிப்படி யாக அரை மணி நேரம் வரை செய்யலாம். வாரத்திற்கு மொத்தம் இரண்டரைமணி நேரம்.

நடைப்பயிற்சி, யோகா செய்ய முடியாதபட்சத்தில், துணி மடிப் பது, ஒட்டடை அடிப்பது போன்ற மிதமான வீட்டு வேலைகளைச் செய்தபடி இருக்கலாம்.

## பயம் வேண்டாம்

பயிற்சிகளைச் செய்வதால் மூட் டழற்சி மோசமடையும் என்கிற பயம் வேண்டாம். வலியுடன் பயிற்சி கள் செய்வது ஆரம்பத்தில் கஷ்ட மாகத் தெரிந்தாலும், சில நாள் களிலேயே எளிதாகச் செய்ய முடி வதைக் காண்பீர்கள். பயிற்சிக்குப் பிறகு வலி அதிகமானால், வலி குறையும்வரை பயிற்சிகளை / நடப்பதைக் குறைத்துக் கொள் ளுங்கள். பின் படிப்படியாகத் தொடர்ந்து செய்ய ஆரம்பியுங்கள்.

## எடையைக் குறைப்பது

அதிக உடல் எடை, முழங் கால் மூட்டிற்குள் அழுத்தத்தை ஏற்படுத்தி, மூட்டழற்சி ஏற்படு வதற்குக் காரணமாகும். அல்லது இருக்கிற வலியை அதிகப்படுத்தி, உடலியக்கத்தை குறைக்கும்.

எனவே, உடல் எடையைக் குறைப்பது மூட்டழற்சியை தடுக்கவும், கட்டுக்குள் வைக் கவும் உதவும். உணவுப் பழக்க மாற்றம், உடல் எடையைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. உங்களுக்கேற்ற சமச்சீரான உணவு மூலம் எடையைக் குறைக்க, டயட்டீஷியனிடம் ஆலோசனை பெறலாம்.

## அழுத்தத்தைக் குறைப்பது

அன்றாட வேலைகளால், மூட்டுக்குள் அழுத்தம் ஏற்பட்டு வலி அதிகமாவதைத் தடுக்க சில எளிய வழிகள்:

- நடப்பதற்குக் கைத்தடியைப் பயன்படுத்தலாம். வலது மூட்டில் வலியிருந்தால், கைத் தடியை இடது கையில் பிடித்துக் கொண்டு, வலது காலையும் கைத்தடியையும் ஒன்றாக எடுத்துவைத்து நடக்க வேண்டும்.
- மாடிப்படி ஏறும்போது, பக்கவாட்டுப் பிடியைப் பிடித்துக் கொண்டு ஏறலாம்; பாதிக்கப் படாத, குறைவாக வலியுள்ள காலை முதலில் வைத்து ஏறலாம்.
- அதிக நேரம் நிற்பது, மண்டியிடுவதைத் தவிர்ப்பது நல்லது.
- கடினமான அல்லது ஹை-ஹீல்ஸ் செருப்புகள் வேண்டாம்.
- ஓடுவது, ஜாகிங், டென்னிஸ் போன்ற தீவிர பயிற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் – 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

## இலவசக் கையேடு

மூட்டழற்சி சுய பராமரிப்பு பற்றிய கூடுதல் விவரங்கள் கொண்ட கையேடு எஸ்.ஆர்.எம். பிசியோ தெரபி கல்லூரியுடன் இணைத்து வெளியிடப்பட்டுள்ளது. இதைப் பெற mootuvali@gmail.com என்கிற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

## பயிற்சிகள்

மூட்டழற்சிக்கு முக்கிய சிகிச்சையாக முழங்கால் மூட்டுப் பயிற்சிகள், பொது உடற்திறனை அதிகரிக்கும் பயிற்சிகள் என இரண்டு வகைகள் உள்ளன. மூட்டுப் பயிற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தால், கால் தசைகள் வலுவடையும். வலி குறையும், மூட்டின் ஆரோக்கியம் மேம்படும் என மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

வீட்டிலிருந்தே செய்யக்கூடிய சில பொதுவான பயிற்சிகள்: நிதானமாகச் செய்ய வேண்டும். காலை மாலை இரண்டு வேளையும் செய்யலாம். பிரத்தியேக மூட்டுப் பயிற்சிகளுக்கு மருத்துவர் அல்லது பிசியோதெரபிஸ்டிடம் ஆலோசனை பெற வேண்டும்.

1. **காலை மடக்கி நீட்டுதல் :** படுத்த நிலையில், காலை மெதுவாக நெஞ்சுவரை மடக்கி, ஐந்துநொடிகள் அப்படியே இருங்கள். ஒவ்வொரு பக்கமும் ஐந்து தடவைகளில் ஆரம்பித்து, படிப்படியாகப் பத்து தடவைகள் வரை செய்வோம்.
2. **காலை நேராக உயர்த்துதல் :** படுத்துக்கொண்டு ஒரு காலை வசதிக்கேற்றவாறு மடக்கிக் கொள்ளுங்கள். மற்றொரு காலை நேராக நீட்டி, மெதுவாக மேலே தூக்குங்கள். அந்த நிலையில் ஐந்து நொடிகள் வைத்திருந்து, பின் மெதுவாகக் காலை கீழே இறக்குங்கள். இதேபோல் மீண்டும் செய்யுங்கள். ஒவ்வொரு பக்கமும் 3 - 5 தடவைகள் செய்யலாம்.
3. **முட்டியை அழுத்துதல் :** ஒரு துண்டை உருளைபோல் மடித்துக் கொள்ளுங்கள். படுத்த நிலையில், துண்டை முழங்கால் மூட்டின்கீழ் வைத்துக் கொண்டு, மெதுவாக அதை அழுத்துங்கள். அழுத்திய நிலையில் ஐந்து நொடிகள் வைத்திருந்து பின் மெதுவாகக் காலைத் தளர்த்துங்கள். இந்தப் பயிற்சியை, காலை நீட்டி உட்கார்ந்த நிலையிலும் செய்யலாம். ஒவ்வொரு பக்கமும் ஐந்து தடவைகளில் ஆரம்பித்து, பத்து தடவைகள் வரை செய்யலாம்.
4. **காலை நேராக நீட்டுதல் :** ஒரு நாற்காலியில் முதுகு நேராக இருக்கும்படி உட்காருங்கள். மெதுவாகக் காலை நேராக நீட்டி, பத்து நொடிகள் அப்படியே இருக்க வேண்டும். பின் மெதுவாகக் கீழே இறக்கி பத்து நொடிகள் அப்படியே இருங்கள். ஒவ்வொரு பக்கமும் ஐந்து தடவைகளில் ஆரம்பித்து, பத்து தடவைகள் வரை செய்யலாம்.

# பண்பும் - பரிவும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கிய பெருந்தகையாளர்

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹள்ரத்**

இறைவன் அளவற்ற அருளாளன்தான்; நிகரற்ற அன்புள்ளவன் தான். எந்தப் படைப்புகளுக்கும் தராத அறிவும், சிந்தனையும் தந்து, தனது பிரதிநிதியாக அறிவித்துச் சிறப்பிக்கப்பட்ட மனிதன் தன்னை நிராகரித்து தனது நெறியைத் துறந்து, தான் எனும் ஆணவத்தில் ஆட்டம் போட்டு அகந்தையுடன் திரிந்து பூமியைக் கெடுத்துக் கொண்டு அலையும்போது இறைவன் சினமுறுகின்றான்.

வெள்ளத்தாலும், புயலாலும், பூகம்பத்தாலும், கல்மாரியாலும், உருமாற்றத்தாலும் அழிக்கப்பட்ட அக்கிரமக்காரர்களை இறைமறை அடையாளப்படுத்தி எச்சரிக்கின்றது. அகழ்வாரைத் தாங்கும் நிலம் தான். எனினும் அது சிறிது சிலிர்த்துவிட்டால் எவ்வளவு பெரிய பலசாலிகளாலும் தாங்க முடியாது. நாம் பார்க்கும் படிக்கும் கேள்விப்படும் பல அழிவு அதிர்வுகளை இயற்கைப் பேரிடர் என்கிறோம். ஆனால் உண்மையில் அவை இறைவனின் பேரிடர் தான். இறைவனின் எச்சரிக்கை தான். இப்போதெல்லாம் எங்கு, எப்போது, என்ன நிகழும் என்பதை எவராலும் கணிக்க முடிவதில்லை. ஆய்வுச் சக்திகளாலும் அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியாத காரியங்களும் இருக்கின்றன. எல்லாம் அறிந்தவன் ஏக இறைவன் தான். பிறரின் தவறிலிருந்து பாடமும், படிப்பினையும் பெற்றுக் கொள்வதே அறிவுடைமை. நல்ல மாற்றத்திற்குள் மனிதர் வந்து விட வேண்டும்.

அமைதியும் போர்ப்புயலுமாக மதீனத்து மக்களின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. மதீனாவிற்குச் சிறிது தொலைவில் வசித்து வந்த "பனீகல்பு" கோத்திரத்தார் பெரும் வழிப்பறிக் கொள்ளையர்களாக இருந்தனர். திடீரென மதீனாவில் நுழைந்து கண்டவர்களைத் தாக்கி, தானியங்கள் - கால் நடைகள் - இன்னபிற பொருட்களைக் கொள்ளையடித்துத் தப்பிச் செல்வர். இந்நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருந்தது.

இதற்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்களை அச்சுறுத்தி எச்சரிக்கை செய்ய எண்ணிய அண்ணலார், வீரர்களுடன் ஆங்கு புறப்பட்டுச் சென்று அணி வகுத்தனர். அறநெறிப் படை வீரர்களைப் பார்த்திட்ட அக்கள் வர்கள் கோழைகளைப்போல நடுங் கினர். "தாமத்துல் ஜன் தல்" என இப்போர் குறிக்கப்படுகின்றது.

ஆட்சித்தலைவராகப் பொறுப்பேற்றிருந்த அண்ணல் மதீனா நகரையும், மக்களையும் பாதுகாப்பதில் முன்னேற்பாட் டுடன் கூடிய மிகுந்த கவனம் செலுத்தினார்கள். இறை நெறிச் சமுதாயத்தின் தன்மானம் காப்பதில் பெரிதும் ஈடுபாடு காட்டினார்கள். தம்மவரை எள் முனையளவும் எதிரிகள் ஏளன மாகக் கருதுவதைப் பொறுக்க மாட்டாதவர்களாக இருந்தார் கள். முன்புபோல் இனி எவரும் மதீனத்து மக்களைப் பிரித்துப் பிளவுபடுத்தி சண்டைத் தீமுட்டி குளிர்காய முடியாதவாறு இறை மறைக்கயிற்றில் உள்ளன்பு கொண்டு பிணைத்து இறுகக் கட்டிவிட்டார்கள். மதீனத்து முஸ்லிம் சமுதாயம் ஒரே சமுதாயம் தான் என்று நிலை நிறுத்தினார்கள்.

வீரமும், விவேகமும் மனித நேயமும் நிறைந்த மகத்தான வலிமைமிக்க சமுதாயம் மதீனா சமுதாயம் என்பதைச் சுற்று வட் டாரத்து அரபுக் கோத்திரத்தாரும் இன்னபிற மக்களும் தெரிந்து கொண்டனர். இவர்களுடன் மோதுவது பெருத்த சேதத்தை யும் கடும் விளைவுகளையும் ஏற்படுத்தும் என்று அஞ்சத் துவங்கினர். தங்களது வீரம் எவருக்கும் சளைத்ததல்ல என்பதை எடுத்துக்காட்டவே அவ்வப்போது எதிரிகளின் முன்னே துணிவுடன் தோன்றி னர். இறைவனுக்காக - இறைத் தூதருக்காக எதையும் அர்ப்பணிக்க - தியாகம் செய்ய - இழக்க - அந்த உத்தமர்கள் தயாராக இருந்தனர்.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதிலும் ஒருவருக்காக மற்றவர் உதவுவதிலும் பாது காப்பதிலும் முன்னின்றனர். அவர் களின் நட்பு உண்மையாக இருந் தது. பேச்சு உண்மையாக இருந் தது. புன்னகை உண்மையாக இருந்தது. ஏன்? வாழ்க்கையே உண்மையாக இருந்தது.அவர் கள் உடன் பிறவாவிட்டாலும் உண்மை உள்ளன்பால் அவர் களின் உள்ளங்கள் பிணைக்கப் பட்டிருந்தன. பாசநேசத்தால் அவர்களது இதயங்கள் இணைக்கப்பட்டிருந்தன. இதயங்களைத் திருப்பும் ஆற்ற லுள்ள இறைவனே இவ்வாறு செய்திருப்பதாக இறைமறை இயம்புகின்றது.

**"பூமியிலுள்ள பொருட்களை யெல்லாம் செலவிட்டாலும் இவ் வாறான அன்பை ஏற்படுத்த முடியாது"** (அல்குர்ஆன் 8 -63)

ஆம்! உண்மைதானே! உண்மை அன்பு விலை கொடுத்து வாங்க முடியாதது. எப்பொருள் கொடுத்தும் பெற முடியாதது. இயல்பாக இதயத்தில் சுரப்பது. இறைவன் விதைப்பது. அன்புதான் நட்பின் ஆரம்பம். அதன் ஆணிவேர்.

“இறைநம்பிக்கையாளர்கள் யாவரும் சகோதரர்களே” என்ற அருள்மறையின் கருத்தை அம் மக்களிடம் செயலில் கொண்டு வந்தார்கள். ஒரு தாயின் பிள்ளைகள் என்றால் பொறாமை கொண்டு, நீயா? நானா? எனப் போட்டி போட்டு, அடிதடிகளில் இறங்கி, வழக்கு மன்றங்களுக்குச் சென்று இறந்தாலும் உன் முகத்தில் விழிக்கமாட்டேன் என்று சபதம் செய்யும் அண்ணன் தம்பிகளாக அவர்கள் இருக்கவில்லை. உள்ளன்பும், சகிப்புத் தன்மையும், விட்டுக் கொடுக்கும் பரந்த மனமும் கொண்ட அருமை உடன்பிறப்புகளாகத் திகழ்ந்தார்கள்.

அண்ணலார், “ஒரு முஸ்லிமுக்கும் மற்றொரு முஸ்லிமுக்குமான தொடர்பு ஒரு கட்டத்திற்கு ஒப்பானதாகும். அதன் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு வலுவூட்டுகிறது” எனக் கூறி ஒரு கரத்தின் விரல்களை மறுகரத்தில் சேர்த்துப் பதித்துக் காட்டினார்கள். உலகளாவிய சமுதாயங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு முன்னோடியாக, தாம் உருவாக்கிய சமுதாயத்தைப் பண்படுத்தினார்கள். உண்மை உரமிட்டு வளர்த்தார்கள்.

“இரக்கம் காட்டுவதிலும், அன்பு கொள்வதிலும், ஒருவரையொருவர் சார்ந்து நிற்பதிலும் தமக்கிடையே ஓர் உடலைப் போல முஸ்லிம்கள் இருப்பர். ஓர் உறுப்புக்கு நோய் ஏதும் வந்துவிட்டால் உடலின் மற்ற உறுப்புக்களும் உறங்காமல் வாடி, வேதனைப்பட்டு, அதன் துன்பத்தில் பங்கு கொண்டு துணை நிற்கின்றன” என்று அருமையான எடுத்துக்காட்டைக் கூறிச் சிந்திக்க வைத்தார்கள்.

நோயுற்றவர்களை விசாரித்து ஆறுதல் கூறி வருவதை அண்ணலார் சிறந்த முறையாக்கினார்கள். (சுன்னத் – நபிவழி) இதனால் அன்பு ஆழமாக வேரூன்றி, பரிவுள்ள சமுதாயம் மலர்ந்தது.

“நோயாளிகளை நலம் விசாரியுங்கள்; பசித்தவர்களுக்கு உணவளியுங்கள்; கைதிகளை விடுதலை செய்ய ஏற்பாடு செய்யுங்கள்” என்றார்கள். எந்தெந்த வகையிலெல்லாம் மனிதர்களுக்கு நன்மை பயக்க வேண்டுமோ அனைத்தையும் முறையாகச் செய்தார்கள். “நோயாளிகளை நலம் விசாரிக்கச் செல்பவருக்காக அமரர்கள் (மலாயிகத்)” பிரார்த்திக்கின்றனர்” என்றார்கள்.

நோயாளியை நலம் விசாரிக்கச் செல்லும்போது அதிக சப்தமாகக் கூச்சல் போடாமலிருப்பதும் நோயாளியிடம் சிறிது நேரம் மட்டும் அமர்ந்திருப்பதும் சீரான நடைமுறை என்றார்கள். ஆனால் நெருக்கமான நண்பராக இருந்தால் அதிக நேரம் அமர்ந்து மனம் விட்டுப் பேசுவதில் தவறில்லை.

நலம் விசாரித்தல் என்பது ஒரு நோயாளியிடம் சென்று நலம் விசாரிப்பது மட்டுமன்று. மாறாக அவர் ஏழை எளியோராயிருந்தால் அவருக்குத் தேவையான சிகிச்சைகளுக்கும், மருந்துகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். பொருளால் அவருக்கு உதவ வேண்டும். நல்ல மருத்துவ வசதிக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

"உங்களில் ஒவ்வொருவரும் தன் சகோதரனின் கண்ணாடியாவார். எனவே தன் முஸ்லிம் சகோதரன் துன்பத்தில் சிக்கி இருப்பதைக் கண்டால் அதனை அவர் நீக்கட்டும். எனது உயிர் எந்த இறைவனின் கைவசத்தில் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது சத்தியமாக தமக்கு விருப்பமான ஒன்றைத் தமது சகோதரனுக்கும் விரும்பும் வரை எங்களில் எவரும் முழுமையான இறை நம்பிக்கை கொண்டவர் ஆகமாட்டார்" என்றார்கள்.

எத்தகு உன்னதக் கருத்துக்கள்! மனித மனத்துள் பரந்த உணர்வை, விரிந்த சிந்தனையை உருவாக்கும் அரிய நபிமொழி ஒவ்வொருவரும் தாம் நன்கு முன்னேற வேண்டும்; உயர வேண்டும்; சிறந்து விளங்க வேண்டும்; எல்லாம் பெற வேண்டும் என்று எண்ணுவது இயல்பு. ஆசைப்படுவது உரிமை. ஆனால் இவற்றை மற்றவரும் பெற வேண்டும் என்று உண்மையாளன் விரும்ப வேண்டும் என்கிறது இந்த மணிமொழி. உடன் பிறந்தவர் மட்டுமே சகோதரர் என்பதல்ல. இறை நம்பிக்கையாளர்கள் யாவரும் சகோதரர்களே. சமத்துவ - சகோதரத்துவ சமுதாயத்தை மதீனாவில் இறைத்தூதர் உருவாக்கியுள்ளார்கள். அண்ணலார் மொழிந்த அறிவமுத மொழிகள் ஆயிரக்கணக்கில் அரும்மணிகளாய் ஆதாரப்பூர்வமாய் கிடைக்கின்றன.

## பெற்றோரைப் பேணுங்கள்!

ஒருமுறை நபிகளாரிடம் ஒருவர்வந்து, "தூதர் அவர்களே! நான் ஹிஜ்ரத் செய்யலாம் என்றிருக்கிறேன்" என்றார். "தோழரே! உமக்கு பெற்றோர்கள் இருக்கிறார்களா...?" "ஆம்...! இருக்கிறார்கள்...!" "அப்படியாணல், அவர்களுக்கு நீர் பணிவிடை செய்து வருவீராக...!"

(முஸ்லிம் : 2549)

# எக்காலத்திற்கும் ஏற்ற நிறைவான வழிகாட்டல்

அண்ணல் நபிகளாரின் திருவாழ்வின் பெரும்பகுதி இறைநெறி அழைப்புப் பணியிலேயே கரைந்தது. தமக்காகவும், தம் குடும்பத்தினருக்காகவும் மிகக் குறைந்த நேரமே எடுத்துக் கொண்டார்கள். பெரும்பாலும் நள்ளிரவுக்குப் பின் இறைவணக்கத்திலேயே திகைத்துப் பேரின்பம் கண்டார்கள். அவர்களின் இரவுக் காலத் தொழுகை மிகவும் நீண்டிருக்கும். மனிதரும், மற்ற உயிரினங்களும், மரமும், புல்லும், பூவும் துயில்கொண்டு ஆழ்ந்திருக்கும் அந்தப் பின்னிரவுக் காலங்களில் அண்ணலார் உறங்காது விழித்திருந்து இறைவணக்கம் செய்தார்கள். "தஹஜ்ஜுத்" எனும் பின்னிரவுத் தொழுகையைப் பெருமானார் ஒவ்வொரு இரவும் தவறாது தொழுதார்கள்.

அண்ணலாரின் இரவுக்கால நெடிய தொழுகையைப் பார்த்து வியந்திட்ட, அவர்களின் அன்பின் வாழ்க்கைத் துணைவி அறிவின் செல்வி ஆயிஷா (ரளி), "இறைத் தூதரே! துளியும் பாவத்தை நினைத்தும் பார்த்திராத புனித மிகு தாங்கள், இப்படி நெடு நேரம் எடுத்து இறையைத் தொழுது துதித்து அழுது வேண்டி, மன்றாடி உருகத்தான் வேண்டுமா? என வினவியபோது, "ஆயிஷா! என் இறைவனுக்கு நான் நன்றியுள்ள அடியானாய் ஆகவேண்டாமா?" என அன்புடன் விடை தந்தார்கள் நபிகளார்.

ஆம். உண்மைதானே! படைத்துப் பாதுகாத்து வளர்த்து வாழவைக்கும் வல்ல இறைவனுக்கு ஒவ்வொரு நிலையிலும் மனிதன் நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதை இறைத்தூதர் எடுத்துக் காட்டினார்கள். அனைத்தும் அயர்ந்திருக்கும் அமைதிமயமான அர்த்தசாமம். அகிலங்களின் அதிபதியாம் அல்லாஹ்வை வணங்க உள்ளக்கிடக்கையை அவனிடம் வெளியிட - உறவாட - உரையாட அருமையான நேரம்.

**இரவில் தஹஜ்ஜுத் தொழுகையைக் கடைபிடியும். இது நீர் செய்ய வேண்டிய அதிகப் படியான (நபில்) தொழுகையாகும். இதனால் உம் இறைவன் உம்மை (மக்காமே மஹ்மூத்) என்னும் புகழ் மிக்க அந்தஸ்துக்கு உயர்த்தலாம்.**

- அல்குர்ஆன் (17 : 79)

"தஹஜ்ஜுத்" என்றால் உறக்கத்தைக் கலைத்து உதறி விட்டு பின்னிரவில் தொழும் தொழுகையாகும். இறைவனின் பேரன்பைப் பெற்றுத்தரும் இத் தொழுகை நமது நியாயமான எண்ணங்கள் - கோரிக்கைகள் நிறைவேறக் காரணமாக இருக்கின்றது. நாட்டங்கள் நிறை

வேறவும் சோதனை - சிரமங்கள் நீங்கவும் இறைவனது நெருக்கத்தைப் பெறவும் இந்த அரிய தொழுகை பெரிதும் வழி வகுக்கின்றது. இரவின் பின்நேரம் இறையருள் இறங்கும் நன்நேரம் பொன்நேரம்.

"அவர்களுடைய விலாப்புறங்கள் படுக்கைகளை விட்டும் உயர்ந்து விடுகின்றன. [இறை தியானத்திற்காகப் படுக்கையை விட்டு எழுந்து விடுகின்றார்கள்] அச்சத்துடனும், ஆவலுடனும் தங்கள் இறைவனைப் பிரார்த்திக்கின் றார்கள். மேலும் நாம் அவர்களுக்கு வழங்கியிருப்பதிலிருந்து அறவழியில் செலவும் செய்கிறார்கள்."

- அல்குர்ஆன் (32 - 16)

உள்ளத்திற்கு அமைதி, மனதிற்கு நிம்மதியை இறை தியானம் (திக்ரு) தருகின்றது. இது இரவு நேரத்தில் அமையும் போது இறைப் பேரொளியால் உள்ளம் நிறைகிறது. இரவின் சில பகுதிகளை ஒதுக்கி, இறைச் சிந்தனையில் லயிக்கும்போது உள்ளத்திற்குப் பக்குவம் - ஆன்மாவுக்கு பலமும், ஒளியும் கிடைக்கின்றது. இறைத் தூதரைப் பொறுத்தவரை அவர்களின் செயல்கள் வாழ்வியல், வழிகாட்டுதல் அத்தனையும் நமக்கு அழகிய முன்மாதிரியாகவே அமைந்திருக்கின்றது. இம்மை - மறுமை இரண்டையும் அடையும் நடுநிலைச் சமுதாயமாகவே அறிமுகப்படுத்தினார்கள். இவ்வுலகிற்காக மறுஉலகத்தையோ, மறுஉலகிற்காக இவ்வுலகத்தையோ துறந்து விடும் நிறைவேற்ற நிலையைத் தூதர் காட்டவில்லை.

ஒருபுறம் போர்; இன்னொரு புறம் வணக்கம். ஒரு புறம் வியாபாரம்; மறுபுறம் வழிபாடுகள். ஒருபுறம் மனைவி, மக்கள் மீது அன்பு; மறுபுறம் இறைத்துதி சிந்தனை. இவ்வாறான நிறைவான வாழ்வியல் அண்ணலின் வாழ்வாக இருந்தது. ஒவ்வொரு நாளையும் பகுத்துப் பிரித்து வகுத்து முறைப்படுத்திக் கொண்டார்கள். அன்றாட வாழ்க்கை அனைத்து அம்சங்களும் கொண்டதாக சீராகச் சென்றது. உருவாகும் சமூகம் வெறும் உலகாதாயத்தை முழுக்க முழுக்கச் சார்ந்ததாக இல்லாமல் இறைச்சிந்தனை ஆன்மிக பலமும் உள்ளதாக அமைந்திடல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டினார்கள்.

தூதுத்துவப் பணி - ஆட்சிப் பொறுப்பு இவை சம்பந்தமான கடமைகள் பெருமானாருக்கு இருந்தன. அனைத்தையும் செய்து வந்தாலும் மனைவியர் மீது மாறா அன்பும் பிள்ளைகள் மீது பாசமும் பேரப்பிள்ளைகள் மீது நேசமும் கொண்டு வந்தார்கள். தோழர்களிடம் நட்புப் பாராட்டினார்கள். நண்பர்களிடம் மனம் திறந்து

உரையாடினார்கள். அபூபக்கர் - உமர் - உத்மான் - அலீ - ஸைது (ரளி) போன்ற தோழர்களிடம் பல விஷயங்கள் குறித்து ஆலோசிப்பார்கள்.

தான் பெரிய தலைவர் - இறைவனின் தூதர் - மதீனாவின் அதிபதி என்றெண்ணி, தம்மைப் பெருமையாகவும், மற்றவரைச் சிறுமையாகவும் எள் முனையளவும் எண்ணினார்களில்லை. மக்களோடு மக்களாக - தோழர்களோடு தோழர்களாகவே இருந்தார்கள். இறைத்தூதரின் நீதி, நேர்மையைப் பார்த்து முஸ்லிமல்லாத யூத - கிறிஸ்தவ - இன்னபிறர் அண்ணலிடம் நீதி வேண்டி, தங்களது விவகாரங்களைக் கூறுவர். அப்போதெல்லாம் அண்ணலார் இன சமய பேதமின்றி நீதியாகவே தீர்ப்பு வழங்குவார்கள். அவ்வாறு வழங்கப்படும் தீர்ப்பு சில நேரங்களில் முஸ்லிமுக்கு எதிராகக் கூட இருக்கும்.

வாழ்வில் இறைப்பண்புகளைப் பேணிப் பூண வேண்டும் என்று வள்ளல் நபிகளார் வலியுறுத்தி வந்தார்கள். மாநபியின் தலைமையில் மதீனாவில் மலர்ந்திட்ட இறையாட்சி அமைதி - சுபிட்சம் - மனித நேயத்தை மக்களிடையே மணக்கச் செய்தது. எளிமையிலும் அந்த மக்கள் இனிமையாக வாழ்ந்தனர். உபசரிப்பு, விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். மனிதம் அவர்களிடம் மேலோங்கிக் காணப்பட்டது.

“இறைவனையும், இறுதி நாளையும் எவர் நம்புகின்றாரோ அவர் விருந்தினரைக் கண்ணியப்படுத்தி உபசரிக்கட்டும்” என்று இறைத்தூதர் இயம்பினார்கள். விருந்தினரை உபசரித்தல் என்பது ஒருவரின் பரோபகாரத்தையும் பரந்த உள்ளத்தையும் பரிவையும் காட்டுகின்றது. இவ்வாறான நன்மக்களே சிறந்த சமுதாயத்தின் அங்கங்களாவர்.

வெளியூர்ப் பயணியொருவர் மதீனா வருகின்றார். வந்தவர் அண்ணலிடம் தனக்குப் பசியாக இருப்பதாகக் கூறுகின்றார். அக்கணமே அண்ணல் தம் வீட்டாருக்கு ஆளனுப்பி, ஒரு விருந்தினருக்கு வழங்குவதற்கான உணவு ஏதும் உள்ளதா? எனக் கேட்கின்றார். அவரது பசியைத் தீர்க்கப் பயன்படாத உப்பும், தண்ணீரும் மட்டுமே இருப்பதாகப் பதில் கிடைக்கின்றது. அவருக்கு வேறு ஏற்பாடு செய்கின்றார்கள். ஆட்சித்தலைவரின் இல்லத்து நிலைமையைப் பார்த்தீர்களா?

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

## அண்ணலின் பயிற்சியில் ஓர் உன்னதச் சமுதாயம்

இறைத்தூதரின் வழிகாட்டல் - அவர்கள் போதித்த வேதவரிகளின் விளக்கப் பாடங்கள் - அந்தப் பாடங்களுக்கான அவர்கள் தந்த எளிய பயிற்சிகள் மதீனத்துத் தோழர்களைப் பெரிதும் ஈர்த்து மகிழச் செய்தது. இவற்றைத் தம் வாழ்வில் பெற்ற பெரும் பேறுகளாகக் கருதிப் போற்றிப் பின்பற்றினர். உண்மையில் இறைநெறி வாழ்க்கையில் அது அவர்களின் பொற்காலமாகும். அனைத்துக்குமான எளிய வழிமுறைகள் இருந்தன.

மனித இயல்புக்கேற்ற எதார்த்தமான நெறிமுறைகளையும் எளிதான வழிமுறைகளையும் இறைநெறியின் பெயரால் இறைத்தூதர் தந்தார்கள். நற்குணத்தின் சின்னமாக நடமாடினார்கள். மனிதப் பண்புகளில் மிக்க மேலான பண்பு நற்குணமாகும். மனிதனின் வாழ்வை மாணிக்கமாய் ஒளிவீசச் செய்யும் மகிமை நற்குணத்துக்கே உண்டு. நற்குணம் உள்ளோரே உண்மையில் மனிதர்கள். இறைமார்க்கமாம் இஸ்லாம் நற்குணத்துக்கே மிகுந்த முக்கியத்துவம் தந்துள்ளது. அருள்மறை அல்குர்ஆன் அண்ணலை நோக்கி, "நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தின் மீதிருக்கின்றீர்" எனச் சிறப்பிக்கிறது.

"மனிதர்களிலேயே அழகிய சிறந்த குணமுள்ளவராக அண்ணல் நபிகள் திகழ்ந்தார்கள்" என மனம் திறந்து கூறுகின்றார் அண்ணலின் பணியாளர் அனஸ் (ரளி). நற்குணம் என்பது சொல் - செயல் - நடத்தைகளில் மென்மை - எளிமை - அடக்கத்தை வெளிப்படுத்தி நிதானமாக சாந்தமுடன் நடந்து கொள்வதாகும். எடுத்தெதற்கெல்லாம் எரிந்து விழுந்து, கோபப்பட்டு, அனாவசியமாக ஆர்ப்பரித்துக் கத்தி அகந்தையுடன் நடந்து கொள்வோர் நல்ல மனிதரல்லர், மனிதம் உள்ளவரே மனிதர்.

"அழகிய நற்குணமுள்ளோரே இறைநம்பிக்கையில் (ஈமான்) நிறைவானவர்" என அண்ணலார் கூறினார்கள். இறை நம்பிக்கையாளரிடம் நற்பண்புகள் இருக்க வேண்டும். நற்குணமே இறைநம்பிக்கையின் அடையாளம் என்பது அண்ணலின் கருத்து. "இறைவா! நீ எனது தோற்றத்தை அழகாக்கி இருக்கின்றாய். அவ்வாறே எனது குணத்தையும் அழகாக்கிவை" என குணக்குன்று அண்ணலார் நிலைக் கண்ணாடி பார்க்கும்போதெல்லாம் இறைவனிடம் பிரார்த்தித்திருக்கின்றார்கள். இறைநம்பிக்கையாளர்களும் இவ்வாறு பிரார்த்திக்க வேண்டும்.

அழகு என்பது வெளித் தோற்றத்தில் மட்டுமல்லாமல்

அகத்தில் - பேச்சில் - பார்வையில் செயல்களில் பளிச்சிட்டுப் பிரதிபலிக்க வேண்டும். "அண்ணலே, நன்மை என்றால் என்ன? என்று தோழர் ஒருவர் வினவியபோது, "நன்மை என்பது அழகிய நற்குணங்கள்" என விளக்கம் தந்தார்கள். ஆக, அனைத்திலும் நற்பண்புடன் திகழ்வதுதான் நன்மையாகும். எவரிடத்தில் நல்ல பண்புகள் இல்லையோ அவர் நன்மை செய்தவராக மாட்டார்.

அண்ணலின் பேச்சில் மென்மையும் கனிவும் இருக்கும். அடக்கமாக அன்பொழுகப் பேசுவார்கள். பிறர் மனம் புண்படும் எந்த வார்த்தையும் பேசமாட்டார்கள். அவசியமானதை - அளவாக - அறிவுப்பூர்வமாக - அன்பாகப் பேசுவார்கள். அவர்களது பார்வையில் தீட்சண்யம் தவழ்ந்தது. இதழ்களில் புன்னகை மலர்ந்தது. முகத்தில் சாந்தம் விளைந்தது. அவர்களது நிலவு முகத்தில் கடுகடுப்பு - சிடுசிடுப்பு - இறுக்கம் - கோபம் போன்ற எதையும் காண முடியாது. ஆத்திரமூட்டப்படும் வேளையிலும் அமைதியாக இருப்பார்கள். புன்னகை மந்திரத்தால் மண்ணுலகை வென்ற மகத்தான மாமனிதரவர். மானுடம் போற்றும் மானிடர் அவர்.

"நற்பண்புகளை நான் மிகவும் மதிக்கிறேன். உறுதியாகக் கூறுகிறேன். எனது உயிர் எவனிடம் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நற்பண்புகள் உள்ளவர்களைத் தவிர வேறவெரும் சொர்க்கத்தில் பிரவேசிக்க முடியாது" என்று ஒருமுறை உணர்ச்சி பொங்கக் கூறினார்கள் உத்தம நபிகளார்.

"மனிதனைச் சொர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்பவைகளில் பெரும் பங்கு வகிப்பவை எவை?" எனப் பெருமானாரிடம் வினவப்பட்டபோது, "இறையச்சமும் நற்பண்புகளும்" என விடை தந்தார்கள் திருநபியவர்கள். நற்பண்பு மிக்க இறை நம்பிக்கையாளர், நிரந்தரமாக நோன்பிருப்போர் - தொழுவோர் பட்டியலில் இடம் பெற்று விடுகின்றனர். அழகிய நற்பண்புகள் மிக்கவரே மறுமையில் எனக்கு அதிக விருப்பமானவராகவும் மிக நெருக்கமானவராகவும் இருப்பர்" என இறைத்தூதர் மொழிந்தார்கள்.

தம்மிடமுள்ள பண்புகள், குணங்களை அமைதியாக அமர்ந்து மனிதர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பிறரின் குறைகள் தவறுகளிலிருந்து நாம் பாடம் படித்துக் கொள்வோம். பெரும்பாலும் நமது குறை நமக்குத் தெரியாது. நமது தவறு தவறாகப்படாது. எனவே நம்மிடமுள்ள குணங்களில் எவை ஏற்புடையவை... எவை ஒதுக்கத்தக்கவை எனச் சிறிது சிந்திக்க

வேண்டும். இறைத்தூதரின் அழகிய முன்மாதிரி எனும் கண்ணாடி முன்நின்று நம்மை நாமே செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். சரி செய்திட வேண்டும். மனிதர்கள் பெரும்பாலும் எது எதையோ சிந்திக்கின்றனர். ஆனால் தன்னைப் பற்றி - தன்னிடமுள்ள குறைபாடுகள் பற்றிச் சிந்திப்பது மிகவும் குறைவுதான். பலர் இது குறித்துச் சிந்திப்பதே இல்லை. நற்குணம் முதலில் நமது வீட்டிலிருந்து துவங்கப்பட வேண்டும். வெளியில்... பிறரிடத்தில்.... மென்மையான குணமுள்ளவரைப் போல் - அழகிய சாந்த சொரூபியாய்ப் பழகுவது, பேசுவது, அவ்வளவு பெரிய சிரமமல்ல. ஏனெனில் அந்நியர்களிடத்தில் அதிக உரிமை எடுத்துக் கொள்ள முடியாதல்லவா? ஆனால் வீட்டில் - குடும்பத்தில் - மனைவி, கணவன், மக்கள், உறவினர்கள் - வேலையாட்களிடத்தில் அமைதியான குணத்துடன் - மென்மையாகப் பேசுவது - பழகுவது - வாழ்வதுதான் பெரிதும் சிரமமானது. ஆனால் ஒருவர் நற்குணமுள்ளவர் என்பதற்கான சான்றும் அடையாளமும் இவர்களிடம் நடந்து கொள்வதைப் பொறுத்துத்தான் அமைகின்றது.

"உங்களில் எவர் தனது குடும்பத்ினருக்கு நல்லவராக இருக்கின்றாரோ அவரே உங்களில் சிறப்புடையவர்" எனச் செம்மல் நபியவர்கள் செப்பினார்கள். ஆக, நற்பெயர் முதலில் குடும்பத்தில் எடுக்க வேண்டும். வீட்டில் நற்பெயர் பெறுதலே நாட்டில் நற்பெயரைப் பெறுதலை உண்மைப்படுத்தும். அதிலும் மனைவியிடம் நல்லபெயர் எடுப்பதென்பது எளிதானதல்ல. தனது கணவனின் பலம் என்ன? பலவீனம் என்ன என்பதை அறிந்துள்ள ஜீவனல்லவா அவள்? "நான் என் மனைவியிடம் நற்பெயரைப் பெற்றிருக்கின்றேன்" என அண்ணலார் நவின்றிருக்கின்றார்கள்.

உள்ளன்போடு, உள்ளும் புறமும் உண்மையாக நடந்து கொள்வதே மனைவியிடம் நல்லெண்ணத்தையும் நற்பெயரையும் பெற்றுத் தரும். இவ்வாறு அனைத்து நிலைகளிலும் அண்ணலாரின் வழிகாட்டுதல் சிறப்பாக நடந்து வந்தது. இறைநெறியைக் கேட்டுப் பின்பற்றுவதில் நபித்தோழர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருந்து வந்தனர்.

பலவகையிலும் தோல்வியுற்று அவமானத்தைத் தாங்கிய மக்காவின் தலைவர்கள் பெரும் தாக்குதலைத் தொடுத்து மதீனாவை வீழ்த்த நேரம் பார்த்துக் கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தனர். மதீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட கைபர் வாழ் யூதர்கள் கடும் வஞ்சம் கொண்டிருந்தார்கள்...

(தொடரும்)

## 22 ஹாஃபிழ்கள் பத்தாம் வகுப்பு தேர்வில் வெற்றி!

மும்பையில் மல்வானி (மலட்) நகரில் அமைந்துள்ள ஜாமிஆ தஜ்வீதுல் குர்ஆன் மதரஸா மற்றும் நூர் மெஹர் உர்தூ பள்ளியில் 22 ஹாஃபிழ்கள் இந்த ஆண்டு நடைபெற்ற எஸ்.எஸ்.சி. (பத்தாம் வகுப்பு) தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்களில் அபு தல்ஹா அன்சாரி 83.4 சதவீத மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் ஹாபிழ் (திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்தல்) படிப்பையும் வெற்றிகரமாக முடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களில் வெற்றி குறித்து இந்த உர்தூ பள்ளி, மதரஸாவில் நிறுவனர் செய்யது அலீ கூறுகையில், "10ஆம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்றுள்ள 22 ஹாபிழ்களில் 14 பேர் 75 சதவீத மதிப்பெண்களுக்கு அதிக மாகவும் பெற்றுள்ளனர். எங்களது மாணவர்கள் சிறந்த முறையில் வெற்றி பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது" என்று கூறினார்.

பலர் தங்களிடம் கூடுதலாக உள்ள வீடுகளை விடுமுறை இல்லம் அமைக்கவும் அல்லது பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் வாடகைக்கு விட்டும் வருகின்றனர். ஆனால், அலீ பாய் என்று பிரபலமாக அழைக்கப்படும் செய்யது அலீ தனது மாளிகையை கல்வி நிறுவனமாக மாற்றியுள்ளார். இவர் ஒரு வர்த்தகர்.

இந்த பள்ளி மற்றும் மதரஸாவை 2000ஆம் ஆண்டில் தொடங்கினார். 2011-இல் முதன் முதலாக உருவாக்கப்பட்ட ஹாஃபிழ்களில் 13 பேர் பத்தாம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்றனர். கடந்த 10 ஆண்டுகளில் 97 ஹாஃபிழ்கள் பத்தாம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்.

எங்களிடம் ஹாஃபிழ்கள் பட்டம் பெற்றவர்களில் பலர் பொறியாளர்களாகவும் மருத்துவர்களாகவும் திகழ்கின்றனர் என்று அலீபாய் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

தனது சீரிய நடவடிக்கை மூலம் மதரஸா கல்வி முறையில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளார் அலீபாய்.

## ஹாங்காங் ஜாமிஆ மஸ்ஜித், வரலாற்று நினைவுச் சின்னமாக அறிவிப்பு!

ஹாங்காங்கின் மிகப் பழைமை வாய்ந்த ஜாமிஆ

மஸ்ஜித் வரலாற்று நினைவுச் சின்னமாக ஹாங்காங் அரசால் இந்த ஆண்டு மே 20-ம் தேதி அறிவிக்கப்பட்டது. மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த மஸ்ஜிதுக்கு இந்தோனேசியா உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் அடிக்கடி வருகை தருவது வழக்கம்.

நினைவுச்சின்ன அந்தஸ்து வழங்கப்பட்டது குறித்து ஹாங்காங் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஹாங்காங்கில் முஸ்லிம் சமுதாய வளர்ச்சியைக் கண்டுள்ள இந்த ஜாமிஆ மஸ்ஜித் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. உள்ளூர் முஸ்லிம்களுக்கு இது சிறந்த வழிபாட்டுத்தலமாகத் திகழ்கிறது"

முஸ்லிம்கள் குறிப்பாக இந்திய துணைக் கண்டத்திலிருந்து வருகைதரும் வியாபாரிகள், மாலுமிகள், வீரர்கள், காவலர்கள் உள்ளிட்டவர்கள் தொழுகை நடத்துவதற்காக இந்த மஸ்ஜித் 1849இல் கட்டப்பட்டது. முஸ்லிம் வருகை அதிகரித்ததையடுத்து மும்பை வணிகர் ஹாஜி முஹம்மது எஸ்சாக் எலியாஸ் நன்கொடைகளுடன் செல்வி தெருவில் இந்த மஸ்ஜித் 1915 மற்றும் 1916ஆம் ஆண்டுகளுக்கிடையில் புதுப்பிக்கப்பட்டது.

இந்த ஜாமிஆ மஸ்ஜிதின் முன்முகப்பு, பால்கனியுடன் கூடிய மினாரா மிக முக்கியமான அம்சமாகும். ஜாமிஆ மஸ்ஜித் கான்கிரீட் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்டது. கிழக்கு மேற்கு வாக்கில் இது அமைந்துள்ளது. கிழக்கு பக்கம் நுழைவு வாயில் அமைந்துள்ளது. இந்த மஸ்ஜித் கட்டிட கலை நயத்துடன் உருவாக்கப்பட்டு பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. ஹாங்காங்கிலுள்ள முஸ்லிம்களுக்கு இது முக்கிய வழிபாட்டுத் தலமாக அமைந்துள்ளது.

இத்தகைய மகத்துவங்களைக் கொண்ட ஜாமிஆ மஸ்ஜித் வரலாற்றுச் சின்னமாக அமைந்துள்ளது.

## வெறுப்பு அரசியலை தடுத்து நிறுத்த உரிய சட்ட நடவடிக்கையை எடுக்க வலியுறுத்தி திருச்சியில் இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு மாநாடு!

தமிழ்நாடு அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு சார்பில் "வெறுப்பு அரசியலை வேரறுப்போம்" என்னும் தலைப்பில் கவன ஈர்ப்பு மாநாடு திருச்சி புத்தூர் நால்ரோடு அருகே நடைபெற்றது. கட்டமைப்பின் தலைவர் மவ்லானா காஜா முயீனுத்தீன் பாகவீ ஹள்ரத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு அனைத்து இஸ்லாமிய

இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர் கள் முன்னிலை வகித்தனர்.

இந்த மாநாட்டில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக நகராட்சி மற்றும் நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, விடு தலை சிறுத்தைகள் கட்சி தலை வர் முனைவர் தொல்.திருமா வளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன், காங்கிரஸ் கட்சி யின் சமூக ஊடக ஒருங்கிணைப் பாளர் சசிகாந்த் செந்தில், ஜோதி மலை இறைப் பணித் திருக் கூட்டம் நிறுவனர் சிவத்திரு திருவடிக்குடில் சுவாமிகள் மற்றும் தமிழ் மையம் அமைப் பின் நிறுவனர் அருட்தந்தை ஜெகத் கஸ்பர் ராஜ், த.மு.மு.க. பொதுச் செயலாளர் அப்துல் சமது எம்.எல்.ஏ., எஸ்.டி.பி.ஐ. கட்சி யின் மாநிலத் துணைத் தலைவர் பி.அப்துல் ஹமீத், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் கே.எம்.கே. ஹபீபுர் ரஹ்மான், கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் மவ் லானா மன்சூர் காஷிஃபி, பஷீர் அஹமது, பாப்புலர் ஃப்ரண்ட் ஆப் இந்தியா மாநிலச் செயலர் முஹம்மது ரசீன் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களின் தலைவர்கள் பேசினார்கள்.

இந்த மாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அதன் விபரம் வருமாறு: மதத்தின் பெயரால் மக்களைக் கூறுபோடும் மதவெறி பிடித்த சங்பரிவார் கும்பலின் வெறுப்பு அரசியலை வேரறுக்க சமூகமும், ஊடகங்களும், நீதித்துறை உள்ளிட்ட ஜனநாயாக நிறுவனங் களும், அரசாங்கமும் ஒத்த உணர்வோடு ஓரணியில் நின்று பணியாற்ற வேண்டும் என இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

அகிலங்களின் அருட்கொடை யாம், அமைதி வாழ்வின் வழி காட்டியாம் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குறித்து தனியார் தொலைக் காட்சி விவாதத்தில் அவதூறாகப் பேசிய பாரதீய ஜனதாவின் நுபுர் ஷர்மாவையும், அப்பேச்சை முக நூலில் பதிவிட்ட பாரதீய ஜனதா வின் நவீன் ஜிண்டாலையும் பாரதீய ஜனதா முதலில் பாராட்டி யது. உலக நாடுகளின் பேரெதிர்ப் பால் பாரதீய ஜனதா சங்பரிவார மும் கட்சியிலிருந்து தற்காலிக மாக நீக்கி நடவடிக்கை என்ற பெயரில் நாடகம் ஆடுகின்றன. இவர்களை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத் தின் (UAPA) கீழ் கைது செய்ய வேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கையாக உள் ளது. முஸ்லிம்களையும் தலித்து களையும் ஒடுக்குவதற்காகவே

பயன்படுத்தப்பட்டு வரும் UAPA சட்டம் சங்பரிவார் மீது பாயாது என்றால் அச்சட்டத்தையே ரத்து செய்ய வேண்டும் என்று இம்மாநாடு கோருகிறது.

முஸ்லிம்களின் உயிரினும் உயர்ந்த இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை அவதூறாகப் பேசி, அமைதியைக் குலைத்து நாட்டைக் கலவரக் காடாக்கி அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேடவேண்டும் என்பது சங்பரிவார மற்றும் பாரதீய ஜனதாவின் சதித்திட்டமாகும். இதை எல்லா மக்களும் ஒன்றாக ஓரணியில் நின்று எதிர்கொள்ள வேண்டும். உணர்ச்சிகளுக்கு இடம்கொடுத்து சங்கிகள் விரிக்கும் சதிவலையில் ஒருபோதும் நாட்டை நேசிக்கும் மக்கள் விழுந்துவிடக் கூடாது என்று இம்மாநாடு எச்சரிக்கிறது. பண மதிப்பிழப்பு நடவடிக்கை பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரைவார்த்தல், கொரோனா முழு அடைப்பு குளறுபடிகள் என மிக மோசமான நிர்வாக சீர்கேட்டை மறைப்பதற்காக ஒன்றிய பாரதீய ஜனதா அரசு சிறுபான்மையினர்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச்சூழலில் நாட்டை நேசிக்கும் அனைவரும் ஜனநாயக வழியில் ஒன்றிணைந்து பாஸிச சதிகளை முறியடிக்கின்ற கடமையும் பொறுப்பும் அனைவருக்கும் உள்ளது என்பதை இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

## உலமா ஓய்வூதியதாரர்கள் மரணத்திற்குப்பின் குடும்பத்தினருக்கு 50 சதவீத ஓய்வூதிய தொகை! தமிழக அரசு அரசாணை வெளியீடு!!

உலமா ஓய்வூதியதாரர் இறந்த பிறகு அவர் கடைசியாக பெற்று வந்த ஓய்வூதியத்தில் 50 சதவீதம் இறந்த ஓய்வூதியதாரரின் நேரடி வாரிசுதாரர்களில் ஒருவருக்கு உலமா குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும் என்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பிற்படுத்தப்பட்டோர். மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த்துறை வெளியிட்டுள்ள 20-06-2022 தேதியிட்ட அரசாணை நிலை எண். 47 வருமாறு :

2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக் கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"உலமா ஓய்வூதியதாரர் இறந்த பிறகு, அவரது குடும்பம் வறுமையில் வாடாமல் இருப்பதற்கு அக்குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்"

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 60 வயது

# பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவதற்கு உதவி செய்யுங்கள்

"யாரொருவர் பள்ளிவாசல் கட்டுவதற்கு உதவி செய்கிறாரோ அவருக்கு மறுமையில் சொர்க்கத்தில் ஒரு வீட்டை அல்லாஹ் கட்டுகிறான்." "பள்ளிவாசல் கட்டுபவர்களுக்கு உலகத்தின் எல்லா தேவைகளையும் அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கிறான்"

அன்புள்ளம் கொண்ட சகோதர, சகோதரிகளுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

சென்னை முகப்பேர் ஏரி ஸ்கீம் பக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், முகப்பேர் கபருஸ்தான் பின்புறம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, நம்பர் 1 என்ற இடத்தில் அல்லாஹ்வின் இல்லமாகிய **மஸ்ஜிதுன் நூர் & மதரஸா** கட்டுவதற்காக ¼ கிரவுண்ட் இடத்தை அல்லாஹ்வின் கிருபையால் ரூ. 25 லட்சம் கொடுத்து ரிஜிஸ்டர் செய்து விட்டோம். அல்ஹம்துலில்லாஹ்!

இனி அடுத்த கட்டமாக மஹல்லாவாசிகள், ஸ்கூல் படிப்புடன் கூடிய **அல் மதரஸத்துன் நூரிய்யா** ஹிப்ழு மதரஸா மாணவர்கள், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் சகோதரர்கள் ஆகியோர் பள்ளியில் தங்கி தொழுவதற்காகவும், ஓதுவதற்காகவும் இன்ஷா அல்லாஹ் இந்த பள்ளிவாசலை உருவாக்குகிறோம். அல்லாஹ்வின் நாட்டப்படி கட்டட வேலைகள் ஆரம்பமாகி விட்டன. எனவே, இந்தப் பள்ளிவாசலின் கட்டட வேலைகள் முழுமை பெறுவதற்கு பொருளாகவோ, பணமாகவோ, செக்காகவோ அனுப்பி ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்புள்ளம் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களே! நீங்களும் உங்களின் உதவிகளை அனுப்புவதோடு, உங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் உதவிசெய்யவையுங்கள். அல்லாஹுதஆலா நமக்கு எல்லா நிஅமத்துக்களையும் அளித்து, பரக்கத் செய்தருள்புரிவானாக! நம்முடையஎல்லாத்தேவைகளையும்பூர்த்திசெய்வானாக. ஆமீன்.

**மஸ்ஜிது அக்கவுண்ட் விபரம்**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**

Bank : **Karur Vysya Bank** Branch: **Arumbakkam**

A/C.No : **1289135000013292**

Ifsc : **KVBL0001289** Swift Code: **KVBLINBBIND**

**G.Pay : 9444273674**

## அல்மதரஸதுன் நூரிய்யா எஜுகேஷனல் டிரஸ்ட்

பள்ளிவாசல் காம்ப்ளக்ஸ், 3வது மாடி, 23, முதல் மெயின் ரோடு, ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை — 600 106.

**தொடர்புக்கு :** தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ் **G. நூர் முஹம்மது ஆமிரி சிராஜி** அலைபேசி : **9444273674**

செயலாளர் : ஜனாப் **M.காதர் மஸ்தான்** B.A., அலைபேசி : **9962320242**

பூர்த்தி செய்து 20 ஆண்டு காலப் பணி நிறைவு செய்த ஏழை, எளிய மவ்லவீ, பேஷ் இமாம், மோதினார், அரபிக் ஆசிரியர்கள் மற்றும் முஜாவர்கள் ஆகியோர் பயன் பெறும் வகையில் 1981-ஆம் ஆண்டு முதல் உலமா ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், அவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப் பட்டுள்ள அரசால் நியமிக்கப் பட்ட உறுப்பினர்களைக் கொண்ட உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழுவால், இத் திட்டம் நிர்வகிக்கப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உலமா ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அதிகபட்ச பயன் பெறுவோரின் எண்ணிக்கை 2600 ஆக ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப் பட்ட அரசாணையின்படி, உலமா ஓய்வூதியம் ரூ.1,500/-லிருந்து ரூ.3,000/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

5. மேலே நான்காவதாகப் படிக்கப் பட்ட கடிதத்தில், உலமா ஓய்வூதியதாரர் தற்போது மரணம் அடைந்தால் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உலமா ஓய்வூதியம் நிறுத்தப்படும் என்றும், இறந்த உலமா ஓய்வூதியதாரரின் மனைவி அல்லது அவரைச் சார்ந்திருப்பவர்கள் அவர்களின் தொடர் வாழ்வாதாரத்தை நடத்துவதற்கு நிதி உதவியின்றி அவதிப்படுவார்கள் என்றும், இதற்கு ஓய்வூதியதாரரைச் சார்ந்திருக்கும் கணவன், மனைவி அல்லது அவரைச் சார்ந்திருப்பவர்கள் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள திருக்கோவில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற இறந்த ஊழியர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் போன்று, பள்ளிவாசல் மற்றும் தர்காக்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற இறந்த உலமா ஓய்வூதியதாரர் குடும்பத்திற்கு உலமா குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.1500/- வழங்க தமிழ்நாடு வக்பு வாரிய முதன்மைச் செயல் அலுவலர் அரசை கேட்டுக் கொண்டார்.

6. மேலும், இறந்த உலமா ஓய்வூதியதாரரின் நேரடி வாரிசுதாரர்களுக்கு (கணவன்/ மனைவி அல்லது அவரைச் சார்ந்தவர்கள்) (i) திருமணமாகாத இறந்த ஓய்வூதியதாரரின் பெற்றோர்கள் (ii) இறந்த ஓய்வூதியதாரரின் (மகன்/ மகளுக்கு 25 வயது வரை அல்லது திருமணமாகும் வரை

இதில் எது முன்னர் நிகழ்கிறதோ அதுவரை) (iii) இறந்த ஓய்வூதியதாரரின் திருமணமாகாத மனநலம் குன்றிய அல்லது நிரந்தர உடல் ஊனமுற்ற மகன் / மகள்) உலமா குடும்ப ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. தமிழ்நாடு வக்பு அலுவலரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, உலமா ஓய்வூதிய தாரர் இறந்த பிறகு அவரது குடும்பம் வறுமையில் வாடாமல் இருப்பதற்கு, பின்வரும் வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு, இறந்த உலமா ஓய்வூதியதாரர் கடைசியாக பெற்று வந்த ஓய்வூதியத்தில் 50 சதவீதம், இறந்த ஓய்வூதிய தாரரின் நேரடி வாரிசுதாரர்களில் ஒருவருக்கு உலமா குடும்ப ஓய்வூதியமாக அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேலும், இத் திட்டத்திற்கான செலவினம், 2202-05-102-AA-32705 என்ற கணக்கு தலைப்பின் கீழ் உலமா ஓய்வூதியத்திற்காக ஆண்டு தோறும் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

## வழிகாட்டி நெறிமுறை

1. உலமா குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இறந்த ஓய்வூதியதாரரின் நேரடி வாரிசுதாரர்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் பயன் பெறுவர்.
2. உலமா குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் பெற கீழ்க் குறிப்பிடப்பட்டோர் நேரடி வாரிசுதாரர்களாக கருதப்படுவர்.

* இறந்த உலமா ஓய்வூதியதாரரின் கணவன்/மனைவி.
* திருமணமாகாத இறந்த உலமா ஓய்வூதியதாரரின் பெற்றோர்கள்.
* இறந்த உலமா ஓய்வூதிய தாரரின் மகன் / மகள் 25 வயது வரை அல்லது திருமணமாகும் வரை இதில் எது முன்னர் நிகழ்கிறதோ அதுவரை.
* இறந்த உலமா ஓய்வூதிய தாரரின் திருமணமாகாத மனநலம் குன்றிய அல்லது நிரந்தர உடல் ஊனமுற்ற மாற்றுத் திறனாளி மகன்/மகள்.

3. உலமா குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இறந்த ஓய்வூதியதாரரின் நேரடி வாரிசுதாரர் அவரது வாழ்நாள் முழுவதும் இத்திட்டத்திங்ன் கீழ் பயன் பெறத் தகுதியுடையவர்.

4. உலமா குடும்ப ஓய்வூதியம் பெற நேரடி வாரிசுதாரர்கள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். தமிழ்நாடு வக்ஃப் வாரியம், பெறப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் ஆய்வு செய்து உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழுவின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழுவின் ஒப்புதலுக்குப் பின், மாவட்ட கருவூலம் மூலம் உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்குவதற்கு தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மைச் செயல் அலுவலரால் உரிய ஆணை வெளியிடப்பட வேண்டும்.
6. உலமா குடும்ப ஓய்வூதியம் மாவட்ட கருவூலம் மூலம் வழங்கப்படும்.
7. இந்த அரசாணை நிதித் துறையின் அசாகு எண் 29788/ நிதி (பிமிபி) / 2022, நாள் 16-06-2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரலாற்றில் முதல் முறையாக ஆஸ்ரேலியாவில் இரண்டு முஸ்லிம் அமைச்சர்கள் திருகுர்ஆனை கையிலேந்தி பதவிப்பிரமாணம் செய்தனர்!

வரலாற்றில் முதல் முறையாக ஆஸ்திரேலிய அமைச்சரவையில் அன்னி அலீ மற்றும் எட் ஹுசிக் ஆகிய இரண்டு முஸ்லிம்கள் இடம் பெற்றுள்ளனர்.

இந்த இரண்டு அமைச்சர்களும் புனித திருகுர்ஆனை கையில் வைத்து பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவும் சரித்திரத்தில் நடைபெறாத முதல் நிகழ்வாகும்.

அன்னி அலீக்கு குழந்தைகள் மற்றும் இளைஞர் கல்வித் துறையும், ஹுசிக்கிற்கு தொழில் மற்றும் அறிவியல் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் இரண்டு முஸ்லிம் எம்.பி.க்களுக்கு இடம் அளித்ததற்கு ஆஸ்திரேலிய முஸ்லிம் அட்வகேசி நெட்வொர்க் வரவேற்றுள்ளது.

தொகுப்பு : **பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

**குர்ஆனின் குரலின் விற்பனை முகவராக உங்களையும் ஈடுபடுத்தி முழு உம்மத்தும் ஹிதாயத் பெற வழி செய்யுங்களேன்.**

# நீ வாழ, பிறர் வீழ போட்டி போடாதே!

மவ்லவீ ஹாஃபிழ் அ.சைய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

தானும் வாழ வேண்டும், பிறரும் வாழ வேண்டும் என யாரும் நினைப்பதில்லை. தான் மட்டுமே வாழவேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர்.

இந்த நினைப்பை, இதுமாதிரி யான எதிர்மறையான எண்ணத்தை இஸ்லாம் தடை செய்கிறது.

**“நீங்கள் வாழ்வதற்காகப் பிறர் வீழ வேண்டுமெனப் போட்டியிட்டுக் கொள்ளாதீர்கள்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.
(நூல் : முஸ்லிம் 5006)

விளையாட்டுப் போட்டியில் மட்டுமே ஒருவர் பிறரை வீழ்த்தி வீரப்பதக்கமும், தங்கப்பதக்க மும் தட்டிச் செல்ல வேண்டும். வாழ்க்கைப் போட்டியில் பிறர் வீழ, தான் மட்டுமே வாழ வழியைத் தேடக் கூடாது.

அடுத்தவனை கெடுக்காமல், அவனை ஒழிக்காமல் அழகாக வாழ்வதே அறநெறி, உலக நியதி. அடுத்ததை அடித்து, வீழ்த்தி சாப் பிடுவது மிருக நெறி, காட்டு நியதி.

தான் வாழ பிறரைக் கெடுப் பது, அழிப்பது மனித நாகரிகம் கிடையாது. அது மிருகத்தனம். காட்டு மிராண்டித்தனம். மனிதன் மிருகமாக மாறி விடக் கூடாது.

இன்னா செய்யாமை எனும் ஓர் அறம் உண்டு. பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை என்பதே இதன் பொருள். நீ வாழ பிறரைக் கெடுக்காதே, வாழு, வாழவிடு என்பதே இதன் நோக்கம்.

தமக்கு எதுவெல்லாம் நடக்கக் கூடாது என நாம் நினைப்போமோ அது மற்றவருக்கும் நடக்கக் கூடாது என்ற அறமே இன்னா செய் யாமை ஆகும். இதன் அடிப்படை யில் ஒருவர் தாம் பழிவாங்கப்படு வதை விரும்பமாட்டார். இதே மனநிலையை அவர் அடுத்தவரிட மும் கடைபிடித்து, பழிக்குப் பழி வாங்கும் எதிர்மறையான சிந்தனையை கைவிட வேண்டும்.

எதிரிக்கு பதிலுக்குப் பதிலடி கொடுப்பதினால் அவனை வென்று விட முடியாது. அவனுக்கும் நன்மை செய்வதின் வழியே அவனை வென்று காட்ட வேண்டும்.

**“நன்மையும், தீமையும் சம மாக ஆகாது. நீர் தீமையை மிக அழகியதைக் கொண்டு தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, எவ ருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ, அவர் உற்ற நண்பரைப் போல் ஆகிவிடுவார்”**

- அல்குர்ஆன் (41 : 34)

அடுத்தவனின் பிழைப்பையும், நிம்மதியையும், வாழ்க்கையையும் கெடுப்பது தீய செயல் மட்டுமல்ல! பாவமான செயலுங்கூட....

போட்டி, பொறாமை என்பதெல்லாம் சொத்துபத்திலோ, பதவி சுகத்திலோ, பழிவாங்கும் தன்மையிலோ, அடுத்தவரை ஒழிக்கும் சிந்தனையிலோ, தீய செயல்களிலோ இருக்கக்கூடாது

மாறாக, போட்டி என்பது நன்மையான காரியங்களில் அமைய வேண்டும். அதுவும் ஆரோக்கியமானதாக அமைய வேண்டும். இது தான் சரியான போட்டி இத்தகைய போட்டியைத் தான் இஸ்லாம் ஊக்கப்படுத்துகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "இரண்டு விஷயங்களைத் தவிர வேறெதற்காகவும் போட்டி பொறாமைப்படக்கூடாது. 1. ஒரு மனிதருக்கு அல்லாஹ் குர்ஆனின் ஞானத்தை வழங்கினான். அதை அவர் அல்லும் பகலும் ஓதி (அதன்படி செயல்பட்டு) வருகிறார். இதைக் கண்ட மற்றொருவர் "இவருக்கு வழங்கப்பட்டதைப் போன்றே எனக்கும் வழங்கப்படுமானால் இவரைப் போன்றே நானும் செயல்படுவேனே!" என்று ஆதங்கத்துடன் கூறினார்."

2. மற்றொருவருக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்கினான். அவர் அதை உரிய வழியில் செலவிடுகிறார். இதைக்காணும் மற்றொருவர், இவருக்கு வழங்கப்பட்டதைப் போன்று எனக்கும் வழங்கப்பட்டால், இவரைப் போன்றே நானும் செயல்படுவேன்" என்கிறார்".

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.
(நூல் : புகாரி 7528)

"நல்லோர்கள் இன்பத்தில் இருப்பார்கள். உயர்ந்த இருக்கைகள் மீது (சாய்ந்து) பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்களின் முகங்களில் இன்பத்தின் செழிப்பை நீர் அறிந்து கொள்வீர். முத்திரையிடப்பட்ட மது புகட்டப்படுவார்கள். அதன் முத்திரை கஸ்தூரியாகும். போட்டியிடுவோர் இதில் தான் போட்டியிட வேண்டும்"

- அல்குர்ஆன் (83 : 22 - 26 )

"நன்மைகளின்பால் நீங்கள் முந்திக் கொள்ளுங்கள்"

-அல்குர்ஆன் (2 : 148)

"இறைவனின் அச்சத்தால் நடுங்குவோரும், தமது இறைவனின் வசனங்களை நம்புவோரும், தமது இறைவனுக்கு இணை கற்பிக்காதோரும், தமது இறைவனிடம் திரும்பிச் செல்லவிருப்பதை உள்ளத்தால் அஞ்சி, நாம் கொடுத்தவற்றை வழங்குவோரும் ஆகிய இவர்களே நன்மைகளை விரைந்து அடைகின்றனர். அவர்களே அவற்றுக்கு முந்துபவர்களாக இருப்பார்கள்"

-அல்குர்ஆன் (23 : 57 - 61)

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் கூறுவதாவது : "ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு

தர்மம் செய்வது குறித்து ஏவினார்கள். செல்வம் என்னிடம் நிறைவாக இருந்ததால் இது எனக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இதுவரைக்கும் நான் ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்களை எந்த நன்மையிலும் முந்த முடியவில்லை. இன்றைய தினம் நான் போட்டி போட்டு கூடுதலாக தர்மம் செய்து முந்திவிட வேண்டி நபியவர்களிடம் எனது சொத்தில் சரி பாதியை கொண்டுவந்து கொட்டினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'நீர் உமது குடும்பத்தாருக்கு என்ன விட்டு வந்தீர்?' என கேட்க...'நான் பாதி சொத்தைவிட்டு வந்துள்ளேன்' என்று கூறினேன்". பிறகு ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் தம்மிடமுள்ள அனைத்தையும் நபியிடம் கொண்டு வந்து கொடுத்த போது. 'நீர் உமது குடும்பத்தாருக்கு என்ன விட்டு வந்தீர்?' என நபி (ஸல்) அவர்கள் கேட்டதும் 'நான் இறைவனையும், இறைத் தூதரையும் மட்டுமே மிச்சம் வைத்து வந்துள்ளேன்' என்றார்கள். இதைப் பார்த்த ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்களைப் பார்த்து 'நான் எதிலும் எப்போதும் உம்மை முந்திவிட முடியாது' என்றார்கள். (நூல் : திர்மிதீ)

போட்டி என்றால் இது தான் போட்டி. சரியான போட்டி. இவ்வாறு போட்டி போடுவதைத் தான் இஸ்லாம் எதிர்பார்க்கிறது.


A.சலீம்

السَّلَامُ عَلَيْكُمْ

P.அப்துல் ரஹ்மான் அறக்கட்டளை


RAHMAAN BUILDERS

Property Developers & Real Estate




KASSIM CONSTRUCTION - TRAVELS & SERVICE

வீடு, இடம் வாங்க - விற்க இங்கு அணுகவும்



45D, ராமசாமி பிள்ளை தெரு, மருதமலை மெயின் ரோடு,
வடவள்ளி, கோவை – 41.

ரஹ்மான் பில்டர்ஸ் பிராப்பர்டி டெவலப்பர்ஸ்

99767 78597 | 93632 20624 | 99943 23977

# தர மறவாதே!

அல்ஹாஜ் மீசல் **பி.எம்.அபூபக்கர்**

இல்லற இன்ப இனிமையி னாலே
இறைஞ்சிட மறந்துவிட் டாலும்
நல்லற வாழ்வில் நாட்டமில் லாமல்
நாளினைப் போக்கிவிட் டாலும்
சொல்லரும் சேவை தொடர்ந்து செய்யாமல்
சுகமதில் திளைத்துவிட் டாலும்
வள்ளரும் இறையே மேன்மைகள் பொங்கும்
மேலருள் தரமற வாதே!

உண்டுபு டைக்க உண்டு மயங்கி
உறக்கமே கொண்டுவிட் டாலும்
கண்டுநி கர்த்த கல்வியின் பெட்பைக்
கருதிடா திருந்துவிட் டாலும்
பெண்டுகள் பெருமை பேணிம றந்து
பெரும் பிழை செய்துவிட் டாலும்
அண்டமெல் லாமும் ஆள்கின்ற வல்லோய்
அன்பருள் தரமற வாதே!

குச்சினில் இருப்போர் குறைகளை யாமல்
கொடுமைகள் புரிந்துவிட் டாலும்
கச்சணி மாதர் கவர்ச்சியில் மூழ்கி
கடமையில் தவறிவிட் டாலும்
இச்சையி னாலே இயல்புக ளில்லா
ஈனனாய் ஆகிவிட் டாலும்
இச்சிறி யோனின் இழிபிழை பொறுத்து
இன்னருள் தரமற வாதே!

# அஸ்ராருல் குர்ஆன்

அரபி மூலம் : இமாம் **ஜலாலுத்தீன்** அஸ்ஸுயூத்திய்யி
தமிழில் : மவ்லானா மவ்லவீ முஃப்தீ
**முஹம்மது கிஃபாயத்துல்லாஹ்**
தாவூதி ஃபாஜில் ஜமாலி பாகவி ஹள்ரத் எம்.ஏ.,
ஈரோடு மாவட்ட அரசு காஜி

கேள்வி: ஏழு கிராஅத்துக்களின் அடிப்படையில் அல்குர்ஆன் அருளப்பெற்றதாக கூறப்படுகிறதே அதன் பொருள் என்ன?

பதில்: இலக்கண, இலக்கிய, உச்சரிப்பு ரீதியாக பல்வேறு முறைகளில் கையாளப்படும் அமைப்பைக் கொண்டதே அரபு மொழி. அரபு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள அரபு நாடுகளைச் சார்ந்த அனைவரும் ஒரே வழக்கிலும் நடையிலும் பேசுவது இல்லை. மாறாக அரபு மொழி பேசும் அனைத்து சாராரும் அவரவரது வழக்குக்கு ஏற்ப இலக்கணக் குறியீடுகளில் அல்லது சொற்களை உச்சரிக்கும் தொனியில் சில மாற்றங்களோடு ஆனால், கருத்துகளில் மாற்றங்கள் இல்லாமல் அல்குர்ஆனைப் பயின்றுகொள்ளும் வகையில்தான் அல்குர்ஆன் அருளப்பட்டுள்ளது.

அல்குர்ஆனின் அற்புதம் (முஃஜிஸா)களில் இதுவும் ஒன்றாகும். உந்துலுஸைச் சார்ந்த பிரபல மேதையும் ஹதீஸின் இமாம் - விற்பன்னருமான காஸிம்பின் அஸ்பகு அவர்கள் (மறைவு ஹிஜ்ரி 304, கார்டோவா) தங்களது ஹதீஸ் தொகுப்பில் (முஸன்னஃப்) ஹள்ரத் அல்முக்ரிய்யு அவர்கள் மூலம் ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்களால் ரிவாயத் செய்யப்பட்ட ஹதீஸ் ஒன்றில், நபி பெருமானார் அவர்கள் கூறியுள்ளார்கள்: "திண்ணமாக, அல்குர்ஆன் ஏழு ஹர்ஃபுகளின்படி அருளப்பெற்றது. இம் முறைகளில் ஓதுவதில் (லஹஜா) தவறில்லை. ஆனால், அதாபைக் கூறுமிடத்தில் ரஹ்மத்தைக் கொண்டும், ரஹ்மத்தைக் கூறுமிடத்தில் அதாபைக் கொண்டும் முடித்துவிடாதீர்கள்."

இந்த ஹதீஸில் நபிபெருமானார் குறிப்பிடும் ஏழு ஹர்ஃபு என்ற சொல்லுக்கு பலவாறான பொருட்கள் இமாம்களால் கூறப்

பட்டுள்ளன. ஏறத்தாழ 35 அபிப்பிராயங்கள் உள்ளதாக பேரறிஞர் அல்ஹாஃபிழ் அபூஹாத்தம் பின் ஹப்பான் அல் பிஸ்திய்யீ (ரஹ்) கூறுகிறார்கள். ஆனால் இவையெல்லாம் ஏழு வகைக்குள் அடங்கிவிடும். அவற்றுள் சில.

1. ஹளரத் அபூ ஜஅஃபர் முஹம்மது பின் ஸஃதான் அன்னஹ்விய்யு (ரஹ்). இவர் இமாம் ஹம்ஸாவின் கிராஅத்தின்படி ஓதியவர். பின்னர் அதில் தமக்கென தனியொரு பாணியைக் கையாண்டவர். (மறைவு ஹிஜ்ரி 231 - நூல் : இன்பாஹுர் ரிபாத் 7:140) அவர்களின் கருத்துப்படி அரபுகளின் வழக்கில் ஒரு தனி எழுத்தையும் அல்லது சில எழுத்துகளால் உருவான சொல்லையும் அல்லது சில சொற்களால் உருவான வாக்கியத்தையும் அல்லது அதில் அடங்கியுள்ள இடம் மற்றும் பொருள்களையும் ஹர்ஃபுகள் எனப்படுகின்றது என்கின்றார்!
2. உச்சரிப்பில் சில சொற்களை அல்லது சில வாக்கியங்களை ஏழு வகையில் ஓதுதல். (ஸப்உ கிராஅத்)

ஹள்ரத் கலீல் பின் அஹ்மத் (கிராஅத் இமாம்களில் ஒருவர்) ஹதீஸில் உள்ள "ஹர்ஃப்" என்பதற்கு இவ்வாறு விளக்கம் தருகிறார். "இமாம் இப்னு ஜரீர் அத்தபரிய்யு அவர்களும் வேறு சிலரும் "அல்குர்ஆன் ஏழு ஹர்ஃபின்படி அருளப்பட்டிருந்தாலும் அந்த ஏழும் அடங்கிய ஒரு ஹர்ஃபின்படி ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்களால் "அல் முஸ்ஹஃபுல் இமாம்" என்ற முதல் குர்ஆன் தொகுக்கப்பட்டு இன்றளவும் உலகில் ஓதப்பட்டு வருகின்றது. இந்த ஒரு ஹர்ஃபை ஓதும் முறையில் திருமறை ஓதும் கலை வல்லுனர்கள் ஏழு லயங்களைக் கடைபிடிக்கின்றனர்" என்கிறார்!!

3. ஏழு வகைகள்: அல்குர்ஆன் முழுவதும் ஏழு பிரிவுகளில் அடங்கிவிடும். அவை 1. ஏவல் 2. விலக்கல் 3.வாக்குறுதி 4.எச்சரிக்கை 5. வரலாறு 6. ஆகுமான - ஆகாத 7. நுணுக்கமான (முப்ஹமாத்) ஒப்பான (முத்தஷாபிஹாத்) என்பனவாகும்.

இதற்கு ஆதாரமாகக் கூறப்பட்டுள்ள ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்களின் ரிவாயத் வலுவானதன்று. அப்படியே இருந்தாலும் அந்த ஹதீஸிற்கு, மேற்கூறியவை விளக்கமன்று என்ற கருத்தை பெரும்பாலான அறிஞர்களும், மாமேதை அஹ்மத் அபீ உமர் (ரஹ்), அல்லாமா தஹாவீ (ரஹ்), பேரறிஞர் மாவுர்திய்யி (ரஹ்) போன்றோரும் கூறியுள்ளது மிகவும் கவனிக்கத்தக்கதாகும். (இப்னு அதிய்யாவின் முகத்திமத்துத் தஃப்ஸீர், இப்னு அதிய்யாவின் ஹுரூஃப்)

4. தத்தமது குல வழக்கப்படி சொற்களை ஏழு முறைகளில் உச்சரித்தல். 1. குரைஷி

2. ஹுதைல் 3. தமீம் 4. அஜ்து 5. ராபிஆ 6. ஹவாஜின் 7. ஸஅதுப்னு பிக்ரு என்னும் பிரபலமான ஏழு அரபுக் குலத்தவரின் மரபுப்படி உச்சரிக்கப்படும் முறைகளை ஏழு ஹர்ஃபுகள் எனப்படுகிறது.

ஏழு வகையாக உச்சரித்தாலும் இதில் பொருட்சிதைவு ஏற்படாது. இக்கருத்தை மாமேதை அபீதுல் காஸிம், அஹ்மது பின் யஹ்யா, அத்தஅலபு இப்னு துரைது, அபூஹாத்தம் அஸ்ஸிஜஸ்தானீ, காழி அபூபக்கர் போன்றோர் கூறுகின்றனர்.

(இன்பாஹுர்ருவாத் 3:92)

பேரறிஞர் அபூமன்ஸூர் முஹம்மது பின் அஹ்மது பின் அல்அஜ்ஹர் அவர்கள் அத்தஹ்தீபு என்ற அல்குர்ஆன் அகராதி நூலில் (மறைவு ஹிஜ்ரி 370) இக்கருத்தே வலுவானது என்று கூறுகிறார். மேலும், ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் அல்குர்ஆன் தொகுப்புப் பணியினை மேற்பார்வையிடும்போது "நீங்களும் ஜைதும் கருத்து வேறுபட அவசியமில்லை. அதை நீங்கள் குறைஷி குலத்தவர் சொல்வழக்கில் அருளப்பட்டவாறு எழுதுங்கள். அதில் பெரும்பாலானவை அவர்களது மரபுவழி உரையாடலின் படிதான் அருளப்பெற்றன என்று கூறியதை ஆதாரமாகக் காட்டுகின்றார்.

5. சிறிதும் பொருள் மாறாத ஒரே பொருள் கொண்ட ஏழு வகையான மாற்றுச் சொற்கள்தான் இந்த ஏழு ஹர்ஃபுகள் என்று அல்லாமா இப்னு அப்தல் பர்ரு, ஜும்ஹூரு அஹ்லில் ஃபிக்ஹி வல் ஹதீஸ் இமாம் ஸுஃப்யான் இப்னு உயய்னா, இப்னு வஹ்பு, முஹம்மதுப்னு ஜரீர் அத்தபரீ ஆகிய முதுபெரும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

6. பொருட் சிதைவு ஏற்படாத வகையில் இலக்கணக் குறியீடுகளை ஏழு வகையாக மாற்றிச் சொல்லுதல், உதாரணமாக, அல்அன்ஃபியா அத்தியாயத்தில் உள்ள 66ஆம் திருவசனம் அல் இஸ்ராவில் 23ஆம் திருவசனம். இவ்வசனங்களில் இடம்பெறும் "உஃப்" என்ற சொல்லை இலக்கணப்படி குறியீடுகளை மாற்றி (உஃப், உஃப்ஃபி, உஃப்ஃபு, உஃப்ஃபன், உஃப்ஃபின், உஃப்ஃபுன், உஃப்ப்) என்று ஏழு வகையில் ஓதினாலும் சிறுதும் பொருள் மாறாது. இதையே "ஏழு ஹர்ஃபுகள்" என்று சிலர் கூறுகின்றனர்.

7. இந்த ஏழு ஹர்ஃபுகளின்படியும் அல்குர்ஆனை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருள,

அவர்களோடிருந்த (இமாம்களான) பெரும் ஸஹாபிகள் மனனம் செய்ய ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்களோடு தொகுப்புப் பணியில் இருந்ததோடு அவற்றை உறுதி செய்து தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். இந்த அமைப்பு முறையில் தான் இன்றுவரை அதன் பிரதிகளாக உலகம் முழுவதும் உள்ள அல்குர்ஆன் அச்சிடப்பட்டு வழங்கிவருகின்றது!

இவ்வாறான பல்வேறு கருத்துகளை ஏழு கிராஅத் என்பதற்கு விளக்கமாகக் கூறப்பட்டிருந்தாலும் இறுதியாக கவனிக்கப்பட வேண்டிய அம்சம் ஒன்றே: அதாவது, தனது அடியான் எளிதாகப் பயின்று ஓதிப் பயன்பெற வேண்டுமென்ற அல்லாஹ்வின் நாட்டப்படியே ஏழு ஹர்ஃபில் அல்குர்ஆன் அருளப் பெற்றுள்ளது.

ஒருமுறை ஹள்ரத் ஜிப்ரீலை சந்தித்த நபி பெருமானார் (ஸல்) அவர்கள் "ஓ ஜிப்ரீலே! நான் படிப்பறிவற்ற மக்கட் சமுதாயத்துக்கு நபியாக அனுப்பப்பட்டுள்ளேன். அவர்களுள் இயலாதோர், முதியோர், சிறுவர் சிறுமியர், அறவே படிக்காதவர் போன்றோர் உள்ளனரே, அவர்களுக்கு அல்குர்ஆனைப் பயிற்றுவிப்பது எப்படி?" என வினவினார்கள். "ஓ முஹம்மதே! திண்ணமாக, அல்குர்ஆன் ஏழு ஹர்ஃபுகளில் அருளப் பட்டுள்ளது. எனவே, எல்லோரும் எளிதாக அதனைக் கற்றுக் கொள்வார்கள்" என்று ஹள்ரத் ஜிப்ரீல் மறுமொழி கூறினார்கள்.

ஹரள்த் உதுமான் (ரளி) அவர்களது பொறுப்பில் ஈடுபட்டிருந்த அல் குர்ஆன் தொகுப்பாளர்கள் ஒவ்வொருவரும் ஏழு ஹர்ஃபு களின் விளக்கத்தை நன்கறிந்தவர்களாக இருந்தனர். இவர்கள் அனைவரும் ஏழு ஹர்ஃபுகளையும் விவாதித்ததன் பின்னரே ஹள்ரத் ஜைதுப்னு ஃதாபித் (ரளி) அவர்களின் இறுதி முடிவின்படி ஒரு வகையை முடிவு செய்து அல்முஸ்ஹஃப் எனும் முதல் குர்ஆன் பிரதியை வெளியிட்டார்கள். அன்று வாழ்ந்த அத்துணை நபித் தோழர்களும் மனப்பூர்வமாக அம்முதல் முஸ்ஹஃபை ஏற்றுக் கொண்டார்கள்.

அல்முஸ்ஹஃபுல் இமாமுக்கு மாற்றமாகத் தொழுகையில் ஓதப்பட்டதை மாமேதை இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கடுமையாகச் சாடி, அத்தொழுகை நிறைவேறவில்லை என்று அளித்த தீர்ப்பை என்றும் எல்லோரும் மனதிற் கொள்ள வேண்டும்.

# மதரஸா மஆலிமுல் ஹுதா

**10, பாவாஷா சந்து, காஜிமார் தெரு,**
**மதுரை - 625 001.**

இன்ஷா அல்லாஹ் மதுரையிலேயே ஒரு "**தாருல் உலூம்**" உருவாக்கப்பட வேண்டும் என்ற நன்நோக்கத்தில்... அல்லாஹ்வின் பேரருளால், 14 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்த மத்ரஸாவில் தஜ்வீதுடன் "**ஹிஃப்ழு பிரிவு**" நடைபெற்று வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

தஜ்வீத், பாடத்தில் உறுதி, தர்பிய்யத் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஹிஃப்ழு பிரிவில் சேர விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

இன்ஷா அல்லாஹ் வரும் கல்வி ஆண்டு முதல் **ஐந்து ஆண்டு "மவ்லவீ ஆலிம்"** பாடப்பிரிவு இங்கு தொடங்கப்பட இருக்கிறது.

**இன்ஷா அல்லாஹ் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்ற**
**ஐந்து ஆண்டு பாடத்திட்டத்துக்கான**
**பதிவு தொடர்ந்து நடைபெறும்.**

**தகுதி :**

- **திறமையான, படித்த, ஆர்வமுள்ள இளைஞர்கள்.**
- **திறமையான, குர்ஆனை நன்றாக மனனம் செய்த, ஆர்வமுள்ள ஹாஃபிழ்கள்.**

எண்ணத்தில் தூய்மை, கல்வியில் ஆழம், வாழ்க்கையில் சுன்னத், மார்க்கப் பணியில் ஆர்வம், இறைப் பொருத்தம் ஆகியவையே நோக்கங்களாகும்.

கடித தொடர்புக்கு :

**அல் மதரஸதுர் ரப்பானிய்யா**

59/115, P.B.ரோடு, புரசைவாக்கம், சென்னை - 600007.

மேலும் விபரங்களுக்கு:

செல் : 8939394414, 8124929527

கேள்வி : அல்குர்ஆன் வசனங்கள் சிலவற்றில் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ள கருத்துகள் வேறு சில வசனங்கள் மூலமாக தெளிவுப் படுத்தப்படுகின்றனவா ? அப்படியே விட்டுவிடுவதும் உண்டா ? இவ்வாறு கருத்துகளை மறைபொருளாகக் கூறப்படுவதன் காரணம் என்ன ?

பதில்: மிகச் சுவையான கேள்வி இது. "இல்முல் முப்ஹமாத்" என்பபடும் இவ்வகை கலைஞானம் குறித்து அல்லாமா அபுல் காஸிம் அஸ்ஸுஹைலிய்யு அவர்கள் "அத்தஃரீஃபு வல் இஸ்லாம்" என்ற பெரும் நூலொன்றையும், இவரது மாணவரான மாமேதை அல்லாமா இப்னு அஸாக்கிர் (ரஹ்) அவர்கள் "அத்தக்மீல் வல்இத்மாம்" என்ற நூலையும் வரைந்துள்ளனர். இந்நூற்கள் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு "ஷைகுல் இஸ்லாம்" அல்காழி பத்ருத்தீன் பின் ஜமாஅத் அவர்கள் "அத்திப்யான்" என்ற பெயரில் நூலொன்றை எழுதியுள்ளார்கள்.

1. அல்குர்ஆனின் சிலதிருவசனங்களில் கூறப்படும் முப்ஹமாத்துக்கு ஆங்காங்கே உள்ள வேறு திருவசனங்களே விளக்கமாக உள்ளன. உதாரணமாக, அல்ஃபாத்திஹா அத்தியாயத்தில் "மாலிகி யவ்மித்தீன்" (தீனுடைய நாளின் அதிபதி) என்று முப்ஹமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த தீனுடைய நாள் எது என்பதை "அல் இன்ஃபிதார்" அத்தியாயத்தின் 17ஆம் திருவசனம் "தீனுடைய நாள் என்றால் என்னவென்று உமக்கு எவரேனும் அறிவித்தனரா?" என்று வினா தொடுத்து விளக்கம் தருகின்றது : அல்ஃபாத்திஹாவின் ஏழாம் வசனத்திலுள்ள "அன்அம்த்த" (நீ அருள் புரிந்தால்) என்பதற்கு அன்னிஸாவின் 69ஆம் வசனம் விடை பகர்கின்றது. அல்பகராவில் வரும் 30ஆம் திருவசனத்தில் "பூமியில் பிரதிநிதியாக." என்ற அறிவிப்பு, அப்பிரதிநிதி ஹள்ரத் நபி ஆதம்தான் என்பதை அவ்வசன அமைப்பே காட்டுகின்றது.

அத்தவ்பாவில் வரும் 119ஆம் திருவசனத்தில் உள்ள "ஸாதிகீன்கள்" (உண்மையாளர்கள்) யார் என்பதைப் பற்றிய கேள்வி எழுந்தபோது அல்ஹஷ்ரு அத்தியாயத்தின் 8ஆம் வசனத்தில் உள்ள "முஹாஜிர்களான தாங்கள்தாம்" என்று ஹள்ரத் அபூபக்ரு ஸித்தீக் (ரளி) அவர்கள் விளக்கம் கூறினார்கள்.

அல்முஃமினூன் அத்தியாயத்திலுள்ள 50ஆம் திருவசனம் மர்யமின் மகனையும், அவரது தாயாரையும் ஓர் அற்புதமாக்கினோம் என்று மர்யம், ஈஸா இருவரையும் ஒருமையில் கூறுகின்றது. தந்தையின்றி மர்யமின் கருவறையில் உருவாகி நபி

ஈஸா பிறந்தது போன்று ஓர் ஆணின் தொட்டுறவு இன்றி மர்யம் அவர்கள் நபி ஈஸாவைப் பெற்றெடுத்த முறையில் மர்யமும், ஈஸாவும் ஒரே வகை அற்புதத்துக்கு உரியவர்கள் என்ற கருத்தில் இங்கு ஒருமை சொல்லில் கூறப்படுள்ளனர்.

2. இரண்டாம் வகை: சில தருணங்களில் மறைமுகமாகக் கூறப்படுபவை பிரபலமானவையாக இருப்பின் பகிரங்கமாகி விடும். உதாரணமாக, அல்பகரா அத்தியாயத்தில் "(ஆதமே!) நீரும் உமது துணைவியாரும் சுவர்க்கத்தில் இருப்பீராக!" என்ற வசனத்தில், துணைவி என்று ஹள்ரத் ஹவ்வாவைத்தான் கூறப்பட்டது என்பது நிரூபணமான ஒன்று. காரணம், அத்தருணம் ஹள்ரத் ஹவ்வா மட்டுமே ஆதமுடன் துணையாக இருந்தார்.

இவ்வாறே , அல்பகரா அத்தியாயத்தின் 258ஆம் திருவசனத்தில் "இப்ராஹீமோடு வாதிட்டவனை நீர் அறிவீரா?" என்று நம்ரூது மன்னனைக் குறிப்பிடப்பட்டிருப்பது தெளிவு. மேலும், யூஸுஃப் அத்தியாயத்தின் 21ஆம் திருவசனத்தில் அமைச்சர் அஸீஸையும், அல்மாயிதா 27ஆம் வசனம் நபி ஆதமின் இரண்டு மகன்களான ஹாபிலையும் காபிலையும் தான் குறிக்கின்றன என்பதும் தெளிவு.

3. மூன்றாம் வகை; மறைமுகமாககக் கூறி அது யாராக இருக்கும் என்ற அவாவைத் தோற்றுவிக்கும் நோக்கு, ஏதாவது ஒரு கூட்டத்தாரைப் பற்றிய செய்தி கிடைத்தால் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் "இன்னார்" என்று பெயர் கூறாமல், "அவர்கள் ஏன் இப்படிச் சொன்னார்கள்?" என்று தோழர்களைப் பார்த்துக் கேட்பார்கள். அல்குர்ஆனில் பெரும்பாலும் இந்த முறை கையாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

அல்பகராவின் 100, 108, 206 ஆம் திருவசனங்கள், அல்மாயிதாவின் 44ஆம் வசனம் , ஆலுஇம்ரானின் 72ஆம் திருவசனம் ஆகியன இந்த வரிசையில் உள்ளவையே!

4. நான்காம் வகை: இன்னது என்று குறிப்பிட்டுக் கூறுவதால் பெரும் பயனிருக்காது என்ற நோக்கில் மறைமுகமாகக் கூறுதல் "ஒரு கிராமத்துக்குச் சென்ற அவரைப் போன்று " என்ற பொருள் தரும் அல்பகராவின் 259ஆம் திருவசனத்தில், அது எந்த கிராமம் என்று பெயர் குறிப்பிடவில்லை (அது பைத்துல் முகத்தஸ் இருக்கும் ஜெரூசலம்)

அல்அஃராஃபில் 163, யூனுஸில் 98, அல்கஹ்ஃபில் 77 ஆகிய வசனங்கள் இவ்வாறு உள்ளன.

5. ஐந்தாம் வகை: இன்னாரென்று சுட்டிக் காட்டாமல் அனைவருக்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ள வசனங்கள். "அல்லாஹ்வையும் அவனுடைய ரஸூலையும் நோக்கி, தன் இல்லத்திலிருந்து நாடு துறந்து சென்றவர்" என்ற அந்நிஸாவின் 100ஆம் திருவசனத்தைக் குறித்துக் கூறும்போது ஹள்ரத் இக்ரிமா (ரளி) அவர்கள் "மறைகூறும் அம்மாமனிதர் யார் என்று அறிய எனக்குப் பதினான்கு ஆண்டுகள் ஆயின. அவர்தான் ஹள்ரத் ளம்ரத்துப்னுல் ஈஸ் (ரளி) என்ற நபித்தோழர் ஆவார்" என்கிறார். ஹிஜ்ரத்தைக் குறித்த திருவசனம் இறங்கிய பின் முதியவரான ஹள்ரத் ளம்ரத்து மதீனம் புறப்பட்டுப் போகும் வழியில் தன்ஈம் என்னுமிடத்தில் வஃபாத்தானார்கள். இத்திருவசனம் ஹள்ரத் ளம்ராவைக் குறித்துக் கூறப்பட்டதாகக் கருதினாலும் ஹிஜ்ரத் செய்த அனைவருக்கும் பொருந்துகிறது.

இவ்வாறே, ஒருநான், இரவிலும் பகலிலும், பிறர் அறிந்தும் அறியாமலும் தம்மிடமிருந்த நான்கு விலைமதிப்பற்ற பொருட்களை தர்மம் செய்த ஹள்ரத் அலீ (ரளி) அவர்களைப் பற்றி அல்பகராவின் 274ஆம் திருவசனம் கூறினாலும் தர்ம சிந்தனையுள்ள எல்லோருக்கும் அச்சிறப்பு பொருந்துவதாக அமைந்துள்ளது.

6. ஆறாம் வகை: ஒருவரின் பெயரைக் கூறாமல் அவரது நிறைவான நல்ல அம்சங்களைக் கூறி உண்மையை உணர்த்துதல், ஹள்ரத் அபூபக்ரு ஸித்தீக் (ரளி) அவர்களைக் குறிப்பிடும் அல்மாயிதாவின் 4ஆம் திருவசனம் முதற் பகுதியில் நபிபெருமானாரையும், நடுவில் ஹள்ரத் அபூபக்ரையும் இறுதியாக ஒவ்வொரு முஃமினான உண்மையாளரையும் புகழ்ந்துரைக்கின்றது. இதற்கு அஸ்ஸுமரின் 33ஆம் திருவசனத்தை மேலும், ஒரு உதாரணமாக இங்கு குறிப்பிடலாம்.

7. ஏழாம் வகை: ஒருவரின் பெயர் கூறாது, இழிவான பண்புகளைக் கூறி உண்மைகளை உணர்த்துதல். அந்நிஸாவின் 56ஆம் திருவசனம், அல்கஃப்ரின் 3ஆம் வசனம், அல்ஹுஜுராத்தில் உள்ள 6ஆம் வசனம், அல்லஹபின் 11ஆம் வசனம் ஆகியவற்றை இதற்கு மேற்கோளாகக் குறிப்பிடலாம். *(தொடரும்)*

(தொடரும்)

## வரம்பு மீற வேண்டாம்!

"உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள்; ஆனால் வரம்பு மீறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை." – அல்குர்ஆன் (2 : 190)

# கியாமத் நாள்!

மவ்லவீ **வி.அப்துல் ரஷீத்** ஃபாஸில் ஜாமியா நிஸாமியா
எம்.ஏ., பி.டிஹெச்.,

ஈமான் (இறை நம்பிக்கை) என்றால் என்ன? என்று ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நீங்கள் நம்புவதாகும்" என்று பதில் அளித்தார்கள்.

ஆகவே மறுமை நாள் எனப்படும் இறுதி நாளை நம்புவது ஈமானின் ஒரு பகுதியாக இருக்கிறது.

**"எவர்கள் மறுமையை நம்புகின்றார்களோ அவர்கள் இவ் வேதத்தையும் [அவசியம்] நம்புவார்கள்"** அல்குர்ஆன் (6:92)

எவர்கள் திருமறையை நம்புகிறார்களோ அவர்கள் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

ஆகவே மறுமை நாளை நம்புவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் சிலர் கியாமத் எனப்படும் மறுமை நாளை பற்றி விளக்கம் கேட்டார்கள்.

அவர்களின் சந்தேகங்களை தீர்த்து வைக்கும் வகையில் நபி (ஸல்) அவர்கள் விவரமாக பதில் அளித்தார்கள்.

அந்த விளக்கங்களை இங்கு காண்போம்.

"இறைத்தூதர் அவர்களே! கியாமத் நாளில் எங்கள் இறைவனை நாங்கள் காண முடியுமா?" என்று சிலர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'மேகம் மறைக்காத முழு நிலவை காண்பதில் நீங்கள் ஐயம் கொள்வீர்களா?' என்று கேட்டார்கள். நபித்தோழர்கள் இறைத்தூதர் அவர்களே! இல்லை' என்றார்கள்.

மீண்டும் நபி (ஸல்) அவர்கள், 'மேகம் மறைக்காத சூரியனைக் காண்பதில் நீங்கள் ஐயம் கொள்வீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கும் நபித் தோழர்கள் 'இல்லை' என்றனர்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'இதே போல்தான் நீங்கள் உங்களின் இறைவனைக் காண்பீர்கள்' என்று கூறினார்கள்.

தொடர்ந்து, 'கியாமத் நாளில் மக்களெல்லாம் ஒன்று திரட்டப்

பட்டதும் யார் எதனை வணங்கி னார்களோ அதைப் பின்பற்றிச் செல்லட்டும்' என்று இறைவன் கூறுவான்.

நரகத்தின் மேற்பரப்பில் பாலம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

நபிமார்கள் தத்தம் சமுதாயத்தினருடன் அதைக் கடப்பார்கள். அவ்வாறு கடந்து செல்பவர்களில் நானே முதல் நபராக இருப்பேன்.

அன்றைய தினத்தில் இறைத் தூதர்களைத் தவிர எவரும் பேச மாட்டார்கள். 'இறைவா காப்பாற்று! இறைவா காப்பாற்று!' என்பதே அன்றைய தினம் இறைத் தூதர்களின் பேச்சாக இருக்கும்.

நரகவாசிகளில் அல்லாஹ் நாடுபவர்களுக்கு அருள் செய்ய எண்ணும்போது, அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருந்தவர்களை நரகிலிருந்து வெளியேற்று மாறு வானவர்களுக்கு உத்தர விடுவான். வானவர்கள் அவர்களை வெளியேற்றுவார்கள்.

ஸஜ்தா செய்த அடையாளத்தை வைத்து இவர்களை வானவர்கள் அடையாளம் காண்பார்கள்.

ஸஜ்தா செய்ததனால் (ஏற்பட்ட) வடுக்களை நரகம் தீண்டுவதை நரகத்திற்கு அல்லாஹ் ஹராமாக ஆக்கி விட்டான். அவர்கள் நரகிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். ஸஜ்தாவின் வடுவைத் தவிர மனிதனின் முழு உடம்பையும் நரகம் சாப்பிட்டு விடும்.

நரகிலிருந்து கரிந்தவர்களாக வெளியேறுவார்கள். அவர்களின் மீது உயிர்த் தண்ணீர் (மாவுல் ஹயாத்) தெளிக்கப்படும். ஆற்றோரத்தில் தானியம் வளர்வது போல் அவர்கள் செழிப்பாவார்கள். பின்னர் அடியார்களுக்கிடையே அல்லாஹ் தீர்ப்பை முடித்து வைப்பான்.

முடிவில் ஒரு மனிதன் சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையே தங்குவான். நரகவாசிகளில் கடைசியாக இவன் தான் சுவர்க்கம் செல்பவன்.

அவனுடைய முகம் நரகை நோக்கிய நிலையில் இருப்பான். அப்போது அந்த மனிதன் 'இறைவா! என் முகத்தை நரகத்தை விட்டும் திருப்புவாயாக! அதனுடைய காற்று என்னை வெளுக்கச் செய்துவிட்டது. அதனுடைய சூடு என்னைக் கரித்துவிட்டது' என்பான்.

அதற்கு இறைவன் 'இவ்வாறு செய்தால் வேறு எதனையும் நீ கேட்காதிருப்பாயா?' என்று கேட்பான். அதற்கு அம்மனிதன் 'உன் கண்ணியத்தின் மேல் ஆணையக வேறு ஒன்றையும் கேட்க மாட்டேன்' என்பான்.

அல்லாஹ் அவனிடம் இது பற்றி உறுதி மொழியும் ஒப்பந்தமும் செய்து அவன் நாடியதைக் கொடுப்பான். அவனுடைய முகத்தை நரகத்தை விட்டும் திருப்பி விடுவான்.

சுவர்க்கத்தின்பால் அவனுடைய முகத்தைத் திருப்பியதும்

அம்மனிதன் சொர்க்கத்தின் செழிப்பைக் காண்பான்.

நீண்டநேரம் மவுனமாக இருப்பான். பிறகு 'இறைவா! என்னைச் சுவர்க்கத்தின் வாசலுக்கு அருகில் கொண்டு செல்வாயாக!' என்று கேட்பான்.

அதற்கு இறைவன் 'முன்பு கேட்டதைத் தவிர வேறு எதனையும் கேட்க மாட்டேன் என்று என்னிடம் நீ உறுதி மொழி அளிக்கவில்லையா?' என்று கேட்பான்.

அதற்கு அம்மனிதன் 'இறைவா! உன்னுடைய படைப்பினங்களில் நான் மிகவும் துர்பாக்கியசாலியாக ஆகாமலிருக்க வேண்டும்' என்பான். அதற்கு இறைவன் 'நீ கேட்டதைக் கொடுத்துவிட்டால் வேறு எதனையும் கேட்காமலிருப்பாயா?' என்று கேட்பான். அம்மனிதன் 'கேட்க மாட்டேன். உன்னுடைய கண்ணியத்தின் மேல் ஆணையாக வேறு எதனையும் கேட்க மாட்டேன்' என்பான்.

இதுபற்றி அவனிடம் உறுதிமொழியும், ஒப்பந்தமும் எடுத்துக் கொண்டு அவன் நாடியதைக் கொடுப்பான். அவனைச் சுவர்க்கத்தின் வாசலுக்கருகில் கொண்டு செல்வான்.

வாசலுக்கு அம்மனிதன் சென்றதும் அதன் கவர்ச்சியையும், அதிலுள்ள செழிப்பையும், மகிழ்ச்சியையும் காண்பான்.


# அல் மதரஸதுர் ரப்பானிய்யா

59/115, P.B.ரோடு, புரசைவாக்கம், சென்னை-600007.

**கீழ்க்கண்ட பணிகளுக்கு அனுபவமிக்கவர்கள் தேவை!**

* ★ தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை நன்கு கற்றுக் கொடுக்கக்கூடிய ஓய்வு பெற்ற ஆசிரியர் மற்றும் பேராசிரியர்.
* ★ ஆடிட்டிங் தெரிந்த கணக்கர்.
* ★ சமையல்காரர் மற்றும் துணை சமையல்காரர்கள்.

தகுதிக்கேற்ற ஊதியமும், உணவும், இருப்பிடமும் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 7305739414 8939394414

நீண்டநேரம் மவுனமாக இருப்பான். அதன்பின்னர் 'இறைவா! என்னைச் சொர்க்கத்தின் உள்ளே கொண்டு செல்வாயாக!' என்பான்.

'ஆதமுடைய மகனே! ஏன் வாக்கு மாறுகிறாய்? முன்பு கொடுத்ததைத் தவிர வேறு எதனையும் கேட்க மாட்டேன் என்று என்னிடம் நீ உறுதி மொழி எடுக்கவில்லையா?' என்று இறைவன் கேட்பான்.

அதற்கு அம்மனிதன் 'இறைவா! உன்னுடைய படைப்பினங்களில் மிகவும் துர்பாக்கியசாலியாக என்னை ஆக்கி விடாதே!' என்பான்.

இம்மனிதனுடைய நிலை கண்டு இறைவன் சிரிப்பான். பின்பு சுவர்க்கத்தில் நுழைவதற்கு அவனுக்கு இறைவன் அனுமதி அளிப்பான்.

அதன்பின்னர் இறைவன் அம்மனிதனை நோக்கி 'நீ விரும்பக் கூடியதையெல்லாம் விரும்பு' என்பான்.

அம்மனிதன் விரும்பக் கூடியதை எல்லாம் கூறுவான்.

அவன் விருப்பத்தை(க் கூறி) முடித்தபின் இறைவன் அம்மனிதனுக்கு (அவன் கேட்க மறந்ததையெல்லாம்) நினைவு படுத்தி 'இதை விரும்பு, அதை விரும்பு' என்று (இறைவனே) சொல்லிக் கொடுப்பான்.

முடிவில் அவனுடைய ஆசைகளைச் சொல்லி முடித்த பின் 'நீ கேட்டதும் அதுபோல் இன்னொரு மடங்கும் உனக்கு உண்டு' என இறைவன் கூறுவான்' என்றார்கள்.

இச்செய்திகளை அறிவித்த ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்களிடம் ஹள்ரத் அபூ ஸயீத் (ரளி) உனக்கு நீ கேட்டதும் அது போன்ற பத்து மடங்கு கிடைக்கும்' என்று இறைவன் கூறுவதாக இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று ஆட்சேபித்தார்கள்.

அதற்கு ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) 'ஒரு மடங்கு' என்று இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று தான் நினைக்கிறேன் என்றார்கள். அதற்கு ஹள்ரத் அபூ ஸயீத் (ரளி) 'பத்து மடங்கு' என்று நபி (ஸல்) அவர்கள் கூற செவியுற்றுள்ளேன் என்றார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.
(நூல்: ஸஹீஹ் புஹாரி : 806)

## இவ்வுலகில் எப்படி வாழ வேண்டும்?

ஹள்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : "நபி(ஸல்) அவர்கள் (தன் பக்கம் கவனத்தைத் திருப்பி) எனது தோளைப் பிடித்தவாறு 'அந்நியனைப் போல அல்லது வழிப்போக்கனைப் போல நீர் உலகில் வாழ்வீராக' என்று கூறினார்கள்." (புகாரி)

# திப்பு சுல்தான் அவதூறுகளும் பதில்களும்

"வரலாற்றுப் பேரறிஞர்"
**செ.திவான் M.A.,M.Phil.,**

ஸ்ரீரங்கப்பட்டிணத்திலும், சித்தல்துர்க் கோட்டைச் சிறையிலும் கைதிகளாய் இருந்த பலர், அவரவர் மதத்திலேயே நீடிக்க அனுமதிக்கப்பட்டனர். இது 1789ஆம் ஆண்டு திப்பு சுல்தான் கோவாவின் வைஸ்ராய் மற்றும் ஆர்ச்பிஷப்பிற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்திலிருந்து தெளிவாகிறது. திப்புவின் கடிதத்தில் 'சிறைப்படுத்தப்பட்ட பின்பு தங்களது மதக்கடமைகளை சரிவரச் செய்யாமல் புறக்கணித்தவர்களை நேர்வழிப்படுத்திட கிறிஸ்தவ மத குருமார்கள் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அழிந்த தேவாலயங்கள் மறுபடியும் கட்டப்பட உத்திரவாதமும் தந்தார். ஏராளமான மத குருமார்கள் விடுவிக்கப்பட்டனர். பலர் கோவா செல்ல அனுமதிக்கப்பட்டனர். (S.N.Saldanha, The captivity of Canara Christians under Tippu in 1784. Mangalore 1933, Page 29, 30)

திப்பு சுல்தான் ஆட்சியின் போது பாதிக்கப்பட்டவர்கள் கனரா கிறிஸ்தவர்கள் மட்டும் தான். அவர்கள் கோவாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள். போர்த்துக்கீசியர்களின் கீழ் இயங்கியவர்கள்; இவர்கள் மீது மட்டும் திப்புசுல்தானுக்கு நல்ல நம்பிக்கை இல்லை. அவர்கள் பெதனூர், மங்களூர் போர்களின் போது 1000 மூட்டை அரிசி கொடுத்ததும், பிரிட்டிஷ் படைக்கு 3,33,000 ரூபாய் வழங்கியதையும் முன்னரே பார்த்துள்ளோம்.

கனரா கிறிஸ்தவர்கள் திரும்பத் திரும்ப மைசூர் அரசுக்கு எதிராகவே நடந்தார்கள். ஆங்கிலேயர்கள் 1768-ல் ஹைதர் அலீ காலத்தில் மங்களூரைக் கைப்பற்ற உதவியதும் இவர்கள் தான்.

(இந்திய வரலாற்றுக் கழகம் Indian History Congress 1944, Moraes, Muslim Rulers of Mysore and their Christian subjects எனும் கட்டுரை பக்கம் 443 - 445இல் ஹைதர் அலீக்கும் மலபார் கிறிஸ்தவர்களுக்கும் இருந்த நிலையை விரிவாகக் காணலாம்) எனவேதான் திப்புவிற்கு கனரா கிறிஸ்தவர்கள் மீது அரசியல் ரீதியான பகையே தவிர மத ரீதியான பகை அல்ல.

கனரா அல்லது மலபார் கிறிஸ்தவர்கள் திப்புவின் ஆட்சியின் போது தாங்கொணா வகையில் குட்டிக் கலகங்களைச் செய்து கொண்டே இருந்தனர். இது அரசுக்கு துன்பத்தையும் பாதுகாப்பிற்கு சவாலாகவும் இருந்ததால்தான் திப்பு அவர்களை கோவாவிற்கும் இதர பகுதிகளுக்கும் நாடு கடத்தினார்.

ஆனால் சிரியன் கிறிஸ்தவர்கள் திப்புசுல்தானால் மிக்க அன்புடன் நடத்தப்பட்டனர். அர்மேனிய வணிகர்களையும் திப்பு அன்பாக மதித்தார். அவர்களை மைசூரில் குடியேற கேட்டுக் கொண்டார்.

## வில்லியம் கிர்பாட்டிரிக் திப்பு சுல்தானின் கடிதங்கள்

திப்பு சுல்தானின் கடிதங்களை வில்லியம் கிர்பாட்டிரிக் தந்துள்ளார். திப்புசுல்தான் துரோகத்தால் விழ்த்தப்பட்ட போது கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றிய கிர்பாட்டிரிக் திப்புசுல்தானது பல்லாயிரக் கணக்கான கடிதங்களை கைப்பற்றி சென்று அவைகளை பெர்சிய மொழியிலிருந்து முழுவதுமாக மொழி பெயர்க்காமல் அவருக்கு விருப்பப்பட்ட கடிதங்கள் 438 மட்டும் எடுத்துக் கொண்டு, அதிலும் அவருக்குத் தேவையான பகுதிகள் மாத்திரம் மொழி பெயர்த்து, அதிலும் தேவையற்ற விமர்சனங்களையும், அடிக் குறிப்புகளையும் அந்த நூலில் தந்துள்ளார்.

தீரன் திப்புசுல்தானின் புகழுக்கு கேடு பண்ணுகிற, தீங்குவிளைவிக்கின்ற, பொல்லாங்கு செய்கின்ற மூல மரபுகளுக்கு மாறுபட்ட, போலியான பொய்த் தோற்றமுடைய அந்த நூல் சில பயனுள்ள தகவல்களையும் தருகிறது.

திப்புவின் கடிதங்களில் 1785 பிப்ரவரியில் துவங்கி 1793 நவம்பர் வரையுள்ள கடிதங்களின் பகுதிகளை மட்டுமே கிர்பாட்டிரிக் தந்துள்ளார். திட்டமிட்டே கி.பி.1794 முதல் 1799 வரையிலான கடிதங்களை மறைத்துள்ளார். வரலாற்று ஆய்வு நோக்குள்ளோர் இது குறித்து தேடலை இலண்டனில் துவங்கி, திப்புசுல்தானது கடிதங்கள் முழுவதையும் வெளியிட்டால் வரலாற்றில் திப்புசுல்தானின் மீது புத்தொளி பாயும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை விளக்காமல் முன்னுக்குப்பின் தொடர்பின்றி விஷமத்தனமாக தேர்ந்தெடுத்த கடிதங்களின் சில பகுதிகளில் கிர்பாட்டிரிக் தன்னையறியாமல் சில உண்மைகளையும் பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்துள்ள 425வது கடிதம் இதோ.... (ஆங்கில நூல் பக்கம் 467 Selected letters of Tippoo Sulthan)

1787 ஜனவரி 1இல் யாகூப் என்பவருக்கும் இதர அர்மேனிய வியாபாரிகளுக்கும் திப்பு சுல்தான் சார்பில் எழுதப்பட்ட கடிதம்...

To Yakoob and other Armenian merchants, dated 16th Yoosufy 11th January

1787 Entitled a Kowi-nameth or Engagement.

The duties upon (such) good (as you may import into our dominions) are with exception, (hereby) remitted. Bring, therefore, with entire confidence to our ports and into our Kingdom, either by sea or land (as you may think proper), your silk stuff and (other) merchandise and thereby buy and sell. Wheresoever you may (choose to) bring your goods, there a place shall be assigned for your residence, and if you should, at any time, be in want of workmen or labourers, the same shall be furnished to you, on hire, by our Taalukddars.

அர்மேனிய வணிகர்களுக்கு ஆதரவாக திப்பு இருந்தார் என்பதற்கு இக்கடிதமே சாட்சி பகர்கிறது. திப்புவின் இராணுவத்தில் கணிசமான எண்ணிக்கையில் கிறிஸ்தவர்கள் பணியாற்றி வந்தனர். அவரவர் மதத்தின் வழமைகளுடன் இறைவணக்கம் செய்து கொள்ள சுதந்திரம் அளிக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட கனரா (மலபார்) கிறிஸ்தவர்களை கூட மங்களூர் வெற்றிக்கு காரணமாக இருந்து ஆங்கிலேயர்களுக்கு உதவியதால் ஏற்பட்ட சேதத்துக்கு இணையாக மூன்று கோடிரூபாயை மைசூர் அரசுக்கு அபராதமாகச் செலுத்தி விட்டு, அந்த கிறிஸ்தவர்கள் மைசூர் ராஜ்ஜியத்திற்குள்ளே இருப்பதற்கு அனுமதி தந்தவர் திப்புசுல்தான்.

கோவாவிலிருந்து வந்த புனிதப் பயணிகள் மைசூர் அரசின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ளும் செயலுக்கும் திப்புசுல்தான் அனுமதியளித்தார். (முற்சொன்ன போர்த்துகீசிய நூல். P.S.Pissurlencar, Antigual has, fase ii, No.75 Tippu to the Vicency of Goa March 24, 1784.

மார்ச் 24ல் 1784ல் தீரன் திப்புசுல்தான் கோவாவின் வைஸ்ராய்க்கு எழுதிய கடிதம் இதற்கு சான்று பகர்கிறது.

இப்போது சொல்லுங்கள் தீரன் திப்புசுல்தான் கட்டாயமாக கிறிஸ்தவர்களை மதம் மாற்றினாரா? கனரா (மலபார்) கிறிஸ்தவர்கள் தனது ராஜ்ஜியத்தில் பெரும் தீங்கும் துரோகமும் விளைவித்த போது அரசியல் காரணங்களுக்காகவே சில கிறிஸ்தவர்களை திப்பு தண்டித்தது உண்மை. கனரா கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்பட்டது அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதற்காக அல்ல. அவர்கள் அரசாங்கத்திற்கு தீங்கிழைத்ததால்தான் தண்டிக்கப்பட்டார்கள் என்பது தெள்ளத் தெளிவான உண்மை.

திப்பு கடப்பை மாவட்டத்தில் புலி வெண்ட்லா என்ற ஊரில் இருந்த கிறிஸ்தவ தேவாலயத்தை புதுப்பிக்க உதவிகள் செய்தார் என்பது உண்மை (கஜாவுதீன்

சர்க்கார் திப்புவின் அரசியல் சென்னை 1983 பக்கம் 214, 215)

2009-ல் திருநெல்வேலி South Indian History Congress 29வது வருடாந்திர நடவடிக்கைகள் நூல் Dr.G.சேதுராமனை ஆசிரியராகக் கொண்டு 657 பக்கங்களில் வெளியிடப்பட்டது. அதில் 247, 250 பக்கங்களில் A.பரிமளாதேவி வரலாற்று விரிவுரையாளர் அரசு முதல் கிரேடு கல்லூரி, டி.நரசிபுரா, மைசூர் மாவட்டம், கர்நாடக மாநிலம் எழுதிய கட்டுரை Growth of Christianity in Mysore from 1800 - 1850 with special reference to Abbeduboi's church at Srirangpatina and St. Bartholomen's church at Mysore.

அக்கட்டுரையில் திப்பு சுல்தானின் ஆட்சியின்போது எல்லாவிதமான கிறிஸ்தவப் பிரிவுகளும் இருந்தன. ரோமன் கத்தோலிக்கர்கள், சேசு சபையினர், ஆங்கில லூத்தரன் சபையின் செவன்த்டே அமைப்பினர் என பல பிரிவினரும் இருந்தனர் (பக்கம் 248)

மைசூர் அரசில் 35,000 கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுகாரர்களுக்கு மத சுதந்திரம் இருந்தது. தேவாலயம் இருந்தது. திப்பு சுல்தானின் இராணுவத்தில் ஐரோப்பியர்கள் இருந்தனர். திப்பு பிரெஞ்சு படைப்பிரிவினருக்காக தேவாலயமும் கட்டித் தந்தார்.

கனரா கிறிஸ்தவர்கள் ஆங்கிலேயரோடு கூட்டு சேர்ந்து கொண்டனர். அதோடு அவர்கள் பணக்கார விவசாயிகள், பெரிய வணிகர்களாகவும் இருந்தனர். அவர்கள் தேங்காய், மிளகு, முந்திரி போன்ற பொருள்களை விற்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் திப்பு சுல்தானின் ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. (பக்கம் 248)

கனரா கிறிஸ்தவர்களைத் தவிர வேறு கிறிஸ்தவர்களை தனது ராஜ்ஜியத்திற்கு உட்பட்ட கிறிஸ்தவ குடிமக்களை திப்பு சுல்தான் துன்புறுத்தவே இல்லை. மதமாற்றமும் செய்யச் சொன்னதில்லை. மாறாக, திப்புசுல்தானின் ஆட்சியில் மதசுதந்திரம் இருந்தது. திப்புசுல்தானின் தந்தையார் ஹைதர் அலீ காலத்திலும் எல்லா மதத்தினரையும் நன்றாக மதித்துப் போற்றும் பண்பு நலன் இருந்தது.

பிரேசியாவில் சோனன்பர்கீ நகரில் ஜார்ஜ் மார்கிரெட் குருணர் தம்பதியினரின் மகனாக 8.10.1726இல் பிறந்தவர், தென்னிந்தியாவின் அப்போஸ்தலர் என வர்ணிக்கப்பட்ட கிறிஸ்டியன் பிரடெரிக் சுவார்ட்ஸ். இவர் 13.2.1798 வரை வாழ்ந்தவர். தமிழகத்தின் பல பகுதிகளில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்தவர். கி.பி.1779 ஆகஸ்ட் 24இல் மைசூர் சென்றார். அங்கு ஹைதர் அலீயைக் கண்ட காட்சியினை விவரமாகவே சொல்கிறார்.

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal
ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

## குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

---

# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாம் மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**

Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**

Tel : **+91-7373030-412, (414), (421)**

WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

ஹைதர் அலீ மத விஷயங்களில் அக்கறை இல்லாதவராக இருந்தார். (Schwartz of Tanjore, page 108)

ஹைதரின் வாசஸ்தலத்தில் காரியக்காரர் அனைவரும் பிராமணர்களே. (பக்கம் 111)

கோட்டைக்கு வெளியே நூற்றுக்கணக்கான ஐரோப்பிய சோல்ஜர்கள் (படைவீரர்கள்) இருந்தனர். அவர்களில் சிலர் பிரெஞ்சுக்காரர், மற்றையவரோ ஜெர்மானியர், மலபார் கிறிஸ்தவரிலும் சிலரைப் பார்த்தேன். அவர்களைக் கண்டதும் ஆனந்தமடைந்தேன். அவர்களுக்கு ஏசுவின் மகிமையைச் சொன்னேன். உயரிய உபதேசமும் புரிந்தேன். அதனால் உள்ளம் குளிர்ந்தேன். (எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர், வரலாற்றுக் கதைகள், கலைமகள் காரியாலயம், சென்னை, 1965 ஹைதரின் வரிசை கட்டுரை பக்கம் 97) கேப்டன் பேடன் ஜெர்மனிய துருப்புக்களுக்கு தலைவர், நான் தங்கியிருந்த முகாமிற்கே வந்து என்னை சந்தித்தார்.

ஹைதரின் மாளிகையில் இருந்தபோது பலரும் என்னிடம் வந்து கிறிஸ்தவ மதத்தைப் பற்றி கேட்டனர். அவர், அவரவருக்கு ஏற்றவாறு பேசி விஷயத்தைச் சொன்னேன். (பக்கம் 111)

அப்போது ஹைதரின் மகன் ஒருவர் என்னை வந்து சந்தித்தார். (இது திப்பு அல்ல). தர்பாரில் என்னை பார்த்து அன்புடன் மரியாதை தெரிவித்து, அவருடைய அறைக்கு வந்து போகும்படி என்னை வேண்டிக் கொண்டார். (பக்கம் 111)

ஹைதர் அலீயிடம் சென்றதும் அவரிடம் கிறிஸ்தவம் மதத்தைப் பற்றிப் பேசினேன். யார் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் ஹைதர் கவனிப்பதில்லை. இதுவே அவருடைய இயற்கை.

ஹைதரின் சமூகம் நான் சென்றதும் தனக்கு அருகே உட்காரும்படி சொன்னார். தரையிலே விலையுயர்ந்த இரத்தின கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. கால் செருப்புகளைக் கழற்ற வேண்டுமென்று எனக்கு சொல்லப்படவில்லை. நான் சொன்னதையெல்லாம் ஹைதர் கவனமாக கேட்டார் (பக்கம் : 112)

ஹைதர் அலீ மனம் விட்டு கிறிஸ்தவப் பாதிரியான என்னிடம் பேசினார்.

ஐரோப்பியர் சொன்ன சொல் தவறி நடந்த போதிலும் தான் தவறி நடக்கப்போவதில்லை என்று ஹைதர் அலீ சுவார்ட்ஸிடம் சொன்னார்.

ஹைதர் அலீயின் உயர்ந்த குணத்திற்கு நெல்லை கிறிஸ்தவத்தின் தந்தை என்று போற்றப்படும் கிறிஸ்டியன் பிரடெரிக் சுவார்ட்ஸ் எழுதிய பயணக்குறிப்புகள் சாட்சி தந்து கொண்டிருக்கின்றன.

இப்போது சொல்லுங்கள், ஹைதரும், தீரன் திப்புசுல்தானும் கிறிஸ்தவத்தின் விரோதிகளா? உண்மையை உலகம் உணரட்டும்! (தொடரும்)

# நபிகளே இஸ்லாம்...

அத்தாவுல்லாஹ், நாகர்கோவில்.

மொழி தெரிந்தவர்க்கும்
தெரியாவர்க்குமான
முழு புத்தகம்
பெருமான் நபிகள்....

எந்த தேசத்துக்காரன் என்றாலும்
எந்த மொழி
என்ன நிறத்தவன் என்றாலும்
விரும்பிப் படிக்கிறான்...

விருப்பம் உண்டெனில்
ஏற்றுக் கொண்டு...
விருப்பம் இல்லையெனில்
ஒதுங்கிக் கொண்டும்...

இஸ்லாம் போலவே
நபிகளும் என்பதல்ல...
நபிகளே இஸ்லாம்...

யார் மீதும்
கட்டாயமில்லை...
விரும்பினால் ஏற்கலாம்...
இல்லையெனில் விலகலாம்...

இறைவன் சொன்னதை
எத்தி வைக்கலாம்...
ஒத்தி வைக்கக் கூடாது
என்பதுதான் நபிகளுக்கு விதி...

ஏற்பதும் ஏற்காததும்
அவரவர் விதி...
அவர் தம் தலைமதி...

இறைமறை வேதமும்
அப்படித்தானே....
என்பதல்ல...

நபிகளே வேதம்...
வேதத்தின்
பொருளாகத்தானே
இருந்தார்கள்...
அருளாகத்தானே
வாழ்ந்தார்கள்...
வாழ்வாகத்தானே
அமைந்தார்கள்....

இஸ்லாம் -
குர்ஆன் -
நபிகள் - என்பவை
ஒன்றிலாத
மற்றொன்றில்லை என்பவை...
ஒன்றை விட்டு ஒன்று
பிரிக்க முடியாதவை....

நபிகள்
ஓராயிரம் மொழிகளின்
அற்புதக் கலவை...
எழுதவும் படிக்கவும்
தெரியாது என்பதில்லை...

அவர்களே எழுத்து....
அவர்களே அறிவு...
அவர்களே கல்வி....
அவர்களே அனைத்தும்....

நபிகளைப் படித்தால்
எழுத்தை அறியலாம்...
எண்களை அறியலாம்...
உன்னை அறியலாம்...
அவனை அறியலாம்...
நபிகளை அறியலாம்...
வேதம் அறியலாம்....
நன்மை தீமை அறியலாம்....
வாழ்க்கை அறியலாம்....
வாழலாம்....

வாழத்தெரிந்தவனுக்கு
இம்மை மறுமை தெரியும்....
சுவனமும் நரகமும் தெரியும்....
அவன் தேர்வு எதுவென்று புரியும்...

எந்த மொழியிலும் இல்லாத
இலக்கியப் புலமை நபிகள்....
கவிஞர் இல்லைதான்....
ஆனால் கவிதை....
வாழ்க்கை என்ன என்பதை
விதைத்த விதை...
அதில் பூத்த கவிதை....

எல்லா இலக்கணங்களும்
பொருந்திய கவிதையை...
இறை இலக்கியம்
என்றான கவிதையை...
உலகின்
ஒப்பாரும் மிக்காரும்
எழுதாத கவிதையை....
நிகரில்லாத கவிதையை
அவர்கள்தாம் எழுதினார்கள்....

படைத்தவனை
அறிய விரும்புகின்றவனே...
படைப்பினங்கள் பாடும்
கவிதைகளை அறி...
படைத்தவன் பெருமை உணர்வாய்...

நபிகள் மொழிந்த
முதல் வார்த்தை
படிக்கத் தெரியாதே
என்பதுதான்....
அதைக்கொண்டே
படிப்பித்துக் கொடுத்தானே
பேரிறைவன்....
அதுதான் சூட்சுமம்....

எழுதத் தெரியாதுதான்....
ஆனால் அவர்கள்தாம்
எண்ணும் எழுத்தும்....

பள்ளிக்கூடம்
போனதில்லைதான்....
எல்லா பல்கலைக்கழகங்களும்
அவர்கள் பின்னால்....
படிக்கத் தெரியாதுதான்
ஆனால் அவர்கள்தாம்
படிப்பும் பாடமும்...

அரபு மொழிப் பேசினார்கள்...
இன்று அரபே
அறியாத மொழிகளும்
அவர்களைப் பேசுகின்றன...

ஞானிகள் அறியும்
தத்துவ வித்தை....
பூமியில் விளைந்த
சத்திய உண்மை....

நபிகளைப்படி....
உன்னை அறியலாம்....
உண்மை அறியலாம்....
தன்னை அறிந்தால்
இறைவனை அறியலாம்....

# இந்த ஞானம், தங்களிடம் இல்லை!

இவ்வுலகில், இறை காதலர்களென்றும், வலிமார்களின் சேவையாளர்களென்றும், பல வகையான கொள்கைகளைக் கொண்டவர்கள் வாழ்ந்தார்கள், வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள்.

அவர்களில், இறைகாதலில் வாழ்ந்து மறைந்தவர், புகழ்பெற்ற தெய்வீக, கவிச்சக்கரவர்த்தி மவ்லானா, ஜலாலுத்தீன் ரூமி அவர்கள். இவர் ஃபார்ஸியில், இயற்றிய மஸ்னவி (MAZNAVI) என்ற இறை காதல் காவியம், உலகப்புகழ் பெற்றது. மேல் நாட்டவர்கள் இன்றும் புகழ்ந்து அதை பாராட்டுகிறார்கள்.

அடியானுடன் இறைவனின் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியில் உருவானதுதான் மஸ்னவி. இது ஆறு பாகங்கள் கொண்டது. மொத்தம் 2666 ஞானக்கவிதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. சில நேரங்களில், நூலை எழுதியவரின் சிறப்பால், அந்த நூல் புகழ் அடையும். சில சமயங்களில் எழுதப்பட்ட நூலின் சிறப்பால், எழுதியவர் புகழுக்குள்ளாவார். மஸ்னவியை இயற்றியவரும் பல சிறப்புக்களை பெற்றவர். இயற்றப்பட்ட நூலும் மிகச்சிறப்பானது.

மவ்லானா ரூமி அவர்கள், புகழ்பெற்ற சூஃபியாகவும் விளங்கினார்கள். உலக வாழ்க்கையில் இருப்பார்கள். ஆனால், இவர்களின் உள்ளங்களில், உலகம் நுழையாது. இதுதான் சூஃபியாக்களின் இலக்கணம்!

மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி அவர்கள், குராஸான் பகுதியிலிருந்து பிரிந்து, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லையோரம் அமைந்துள்ள, பல்கான் என்ற ஊரில் ஹிஜ்ரி 604ல் (கி.பி.1208) பிறந்தார்கள். பின் நாட்களில், துருக்கியின் தலைநகராக இருந்த "கூனியா என்ற நகருக்குக் குடியேறினார்கள். கூனி யாதான் அன்று "ரூம்" என்று மேற்கு ஏஷிய மக்களால் புகழப்பட்டு வந்தது.

கூனியாவைச் சேர்ந்த, புகழ் பெற்றஇறை நேசர் "ஷம்ஸ் தப்ரேஸி" (ரஹ்) என்ற சூஃபி பெரியாரிடம், மௌலானா "ரூமி" அவர்கள் ஆன்மீகக் கல்வியை பயின்றார்கள். மௌலானா ரூமி அவர்கள், ஹள்ரத் அபூபக்கர் சித்தீக் (ரளி) அவர்களின் பரம்பரையில் பிறந்தவர்கள்.

மௌலானா ரூமி அவர்களின் உள்ளத்தில் இறை ஞானம் குடி கொள்வதற்கு முன், சாதாரண சராசரி மனிதராக இருந்தார்கள்.

ஒருநாள் "ரூமி" அவர்கள் தண்ணீர் நிறைந்த ஹவுலின் அருகில், அமர்ந்த படியே சில நூல்களின் பக்கங்களை ஆழ்ந்து ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அச்சமயம் அவ்வழியே ஒரு தவசீலர் வந்தார். அவர் "ரூமி" அவர்களை கண்டதும் அருகில் வந்து, நீர் என்ன செய்து கொண்டுள்ளீர்? என்று வினவினார். தலை நிமிர்ந்து அப்பெரியாரின் மீது தன் பார்வையை செலுத்திய "ரூமி" அவர்கள் "இதை அறிந்து கொள்ளும் ஞானம் தங்களிடமில்லை" என்று ஏளனமாக பதிலளித்தார்கள். அப்பெரிய வரை அவர்கள் மதிக்கவே இல்லை.

"ரூமி" அவர்களின் பதிலை கேட்ட அப்பெரியார், அங்கிருந்த நூல்கள் அனைத்தையும் எடுத்து, குளத்தில் வீசி எறிந்து விட்டார். பெரியாரின் செயலைக் கண்டு திகைத்து விட்ட "ரூமி" அவர்கள் இத்தனை காலம் பாதுகாத்து வந்த அரிய நூல்கள் இப்படி பாழாகிவிட்டனவே? என்று மனம் நொந்து பெரியவரை நோக்கி ஏன் இப்படி செய்து விட்டீர்கள்? என்று கேட்டார்கள். நூல்களின் இழப்பால் "ரூமி" அவர்களின் மனம் புண்பட்டுள்ளதை அறிந்த இறைநேசர், குளத்தில் தண்ணீருக்குள் தன் கையை விட்டு, தான் எறிந்த நூல்களை ஒவ்வொன்றாக வெளியே எடுத்து வைத்தார். எல்லா நூல்களும் சிறிதும் நனையாமல், குளத்தில் போடுவதற்கு முன் இருந்ததைப் போல் அப்படியே இருந்தன!

இயற்கைக்கு மாற்றமான இந்த அதிசயத்தைக் கண்டு "ரூமி" அவர்கள் திகைப்புடன், "இது எப்படி சாத்தியமாயிற்று?" என்று பெரியாரை நோக்கிக் கேட்டார்கள். அந்த தவசீலர் "இதை புரிந்து கொள்ளும் ஞானம் தங்களிடம் இல்லை"! என்றார்.

இறை நேசரின் இந்த சொற்கள் "ரூமி" அவர்களின் உள்ளத்தில் பாய்ந்து சென்று, அவருடைய இதயத்தின் கதவுகளை திறந்து வைத்து விட்டன! மிகவும் வெட்கப்பட்டார்.

"மவ்லானா ரூமி" அவர்கள் தன்னால் அவருக்கு ஏற்பட்ட அவமரியாதைக்காக மன்னித்து விடும்படி, கண் கலங்கி வேண்டி நின்றார்கள். அப்போதே "ரூமி" அவர்களின் ஆன்மீகப் பயணம் தொடங்கி விட்டது. அன்றிலிருந்து "ரூமி" அவர்கள், அந்த இறை ஞானியின் மாணவராக ஆகி விட்டார்கள். இதன் பிறகு தான் அவர்கள், பிரகாசிக்கத் தொடங்கி, இறை காதலில் மூழ்கிக் காவியம் படைத்தார்கள்.

# புதுகை மாநகரின் ஓர் பள்ளிவாசலுக்காக....

புதுக்கோட்டை டவுன் காமராஜபுரம் பகுதியில் சுமார் 40 ஆண்டு காலமாக இயங்கி வந்த **"மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்"** ஜும்ஆ பள்ளிவாசல் இடப்பற்றாக்குறையின் காரணமாக பழைய கட்டடத்தை இடித்து விட்டு, 3600 சதுர அடியில் புதிய பள்ளிவாசல் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

அல்லாஹ்வின் மாபெரும் அருளாலும், சமுதாய நல்லுள்ளங்களின் அளப்பரிய உதவிகளாலும் கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன.

அதிவேகமாக முதல் தளத்தையும், இரண்டாம் தளத்திற்கான பணிகளையும் முடிக்க வேண்டும் என்ற நோக்கில் வேலைகள் நடந்து வந்தாலும், கட்டடப்பணிகளை முழுமைபடுத்துவதற்கு சமுதாய மக்களின் துஆவும், நல்லுள்ளம் கொண்ட தனவந்தர் களிடமிருந்து உதவிகளையும் எதிர்பார்க்கிறோம். அல்லாஹ் தங்களின் உதவிகளுக்கு நிறைந்த கூலிகளை வழங்கி அருள்புரிவானாக.

இப்படிக்கு : **நிர்வாகிகள், "மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்" ஜும்ஆ பள்ளிவாசல்,**
காமராஜபுரம் ஒன்பதாவது தெரு, புதுக்கோட்டை - 622 001.

## வங்கி விபரம் :

Account Name : **JUMMA MAZJID KAMARAJAPURAM**
Current Account No : **510101005523881**
Bank : **UNION BANK OF INDIA**
IFSC Code : **UBIN0911241** Micr Code: **622026008**
Branch : **PUDUKKOTTAI.** Tamilnadu. India.

## தொடர்புக்கு :

தலைவர் : ஹாஜி **அப்துல்லாஹ்** - 9715265709
செயலாளர் : ஹாஜி **ஏ.ஆர். முஹம்மது மீரா** - 9443346313
பொருளாளர் : ஜனாப் **பி.எஸ்.எம். முஹம்மது அப்துல்லாஹ்** - 9486265728

அந்த இறைநேசர் தான், கூனி யாவின் ஹள்ரத் ஷம்ஸ் தப்ரேஸி (ரஹ்) என்ற தவ சீலராவார்!

புகழின் உச்சகட்டத்தை எட்டியுள்ள, ஃபார்ஸீ மொழி நூலான "மஸ்னவி" இந்தியாவைத் தவிர, ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், அறிவு ஜீவி களால் பாராட்டி போற்றப்பட்டு வருகிறது. இந்த ஞானகாவியத் தின் ஒவ்வொரு கவிதையும் பல டாலர்களின் மதிப்பாக கருதப் படுகிறது. மொத்தத்தில் வைர, வைடூரியங்களின் புதையலாக போற்றப்படுகிறது!

மவ்லானா "ரூமி" மஸ்னவியை தவிர ஒரு நூலை தன்னுடைய ஆசானின், நினைவில் இயற்றி யுள்ளார். அதில் "அல்லாஹ்வின் அடியான்" என்ற தலைப்பில் ஒரு பாடல் அமைந்துள்ளது. ஞானத்தின் உச்சியை தொட்ட கவிதைகளின் தொகுப்பாக அது கருதப்படுகிறது.

மஸ்னவியில் "ரூமி" அவர்கள், பல இறைநேசர்களின் சுவை யான சம்பவங்களையும், சிறு கதைகளையும், சொல்லியுள் ளார்கள். அவை அனைத்தும், மனிதனை இறை ஞானத்தின் பக்கம் இழுத்துச் செல்கின்றன. அவற்றில் இரண்டு சம்பவங்களை மட்டும் தெரிந்து கொள்வோம்.

## இறையோனை அறிந்தவர்

பஷர்ஹாஃபி என்ற செல்வந்தர் பாக்தாத் நகரில் வாழ்ந்துவந் தார். நேர்மையும், ஒழுக்கமும் நிறைந்த அந்த கணவான், உண்மை யான இறை வழியை பின்பற்றத் துடித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் பாக்தாதின் வீதி யில் நடந்து சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு காகிதத்துண்டு கிடந் தது. அதை எடுத்துப் பார்த்தார். அதில் "பிஸ்மில்லா ஹிர்ரஹ் மானிர் ரஹீம்" என்று எழுதப்பட்டி ருந்தது. உடனே, அந்த கணவான், அதன் மேல்பட்டிருந்த தூசியை ஊதி சுத்தம் செய்து, கண்களில் ஒத்திக் கொண்டார். அதை தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று அந்த காகிதத்தின் மீது நறுமணம் தடவி, உயர்ந்த இடத்தில் வைத்து கண்ணியப்படுத்தினார். "என் னுடைய இந்த செயலை என் இறைவன் ஏற்றுக் கொள்வானா?" என்று அவருடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது. உடனே, அவருடைய மனதிலிருந்து ஓர் அசரீரி கேட்டது. "என் பெயரின் மீது அன்பு கொண்டு, மிகுந்த மரியாதை செய்த உன் செயலை பாராட்டி ஏற்றுக் கொண்டேன்" என்ற செய்தி கேட்டது.

இதன் பிறகு பஷர் ஹாஃபி அவர்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் தொடங்க ஆரம் பித்தன! விலை மதிப்புள்ள ஆடைகள் அணிவதை தவிர்த்து விட்டு, சாதாரண ஆடைகளை அணியத் தொடங்கினார்கள். ஒரு நாள் அவர் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்

போது ஒரு வீட்டிற்குள்ளிருந்து "திருமறை" ஓதும் காரியின் குரல் கேட்டது. "பூமியை நாம் (விசாலமாக) விரித்தோம். மிக்க மேலான விதத்தில் விரிப்பவர் (நாமே)". அல்குர்ஆன் 51:48 என்ற வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார். நடந்து சென்று கொண்டிருந்த பஷர் ஹாஃபி அவர்கள், சட்டென்று நின்று விட்டார்கள். "காரி" அவர்கள் ஓதிக் கொண்டிருந்த திருமறையின் வசனத்தை உன்னிப்பாகக் கேட்டார். இறைவனால் விரிக்கப்பட்ட இந்த பூமியின் மேல் காலணியுடன் நடப்பதா? என்று எண்ணினார். உடனே தன் காலில் அணிந்திருந்த விலை உயர்ந்த காலணிகளை கழற்றி எறிந்தார். வெறுங் காலுடன் நடக்கத் தொடங்கினார்!

உடனே, இறைவன் அசரீரி மூலமாக, "உன்னுடைய இந்த உயர்ந்த செயலால், இன்றிலிருந்து நீ "ஹாஃபி" (காலணி அணியாதவர்) என்று அழைக்கப் படுவாய். என் பூமியை பெருமைப்படுத்தியதற்காக நீ வெறுங்காலுடன் நடப்பதால், இந்த பூமியை சுத்தமாக ஆக்கி வைப்பேன்" என்று சொல்லி விட்டு, தினந்தோறும் விடியற் காலையில், "பாக்தாத்" நகரின் பூமியில் கிடக்கும் குப்பைகளை அகற்றி, சுத்தமாக வைக்கும்படி காற்றை இயக்கும் அவ்வானவர்களுக்கு கட்டளையிட்டான். பாக்தாதின் எல்லைக்குட்பட்ட வீதிகளில் கால்நடைகள் மல ஜலம் கழிப்பதை நிறுத்தி விட்டன!

அன்றிலிருந்து தான் இந்த இறை நேசர் "பஷர் ஹாஃபி" என்ற பெயருடன் புகழப்பட்டார். இவருடைய மஜ்லிஸில், இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) அவர்கள் அடிக்கடி வருகை தந்து கலந்து கொள்வார்கள். இதைக் கண்ட சிலர் இமாம் அவர்களிடம் சென்று "தாங்களே ஷரீஅத்தின் தலை சிறந்த இமாமாக இருக்கும் போது, வெறுங்காலுடன் நடந்து செல்லும் பஷர் ஹாஃபி போன்ற சாதாரண மானவரின் மஜ்லிஸில் கலந்து கொள்வது சிறப்பானது தானா?" என்று குறைபட்டுக் கொண்டனர்.

இக்குற்றச்சாட்டை கேட்ட, இமாம் அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்) அவர்கள் "உங்கள் அனைவருக்கும் நான் ஷரீஅத்தைப் பற்றி விளக்கம் அளிக்கிறேன், உண்மை தான். ஆனால் ஷரீஅத்தை அளித்த இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள பஷர் ஹாஃபி (ரஹ்) அவர்களிடம் செல்கிறேன். ஏனென்றால் என்னை விட அவர்கள் தான் இறைவனைப் பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்" என்று உணர்ச்சி பொங்க பதில் அளித்தார்கள்.

## இதயம் பற்றிய சிறுகதை

மிகவும் ஏழையான ஒரு மனிதனிடம், ஒரு கழுதை இருந்தது. தன் எஜமானனைப்

போலவே, அது தன் வயிற்றுப் பசிக்கு தீனி இன்றி தவித்தது. அதனால் அருகிலுள்ள காட்டிற்குச் சென்று பல இடங்களில் அலைந்து திரிந்து, மேய்ந்து வந்தது. அதே காட்டில் ஒரு சிங்கமும் வசித்து வந்தது.

ஒரு நாள் சிங்கமும் ஒரு யானையும் சண்டையிட்டுக் கொண்டன. யானை சிங்கத்தை பலமாகத் தாக்கி விட்டது. அதனால் சிங்கம் படுகாயம் அடைந்து நடமாட முடியாமல் ஒரே இடத்தில் படுத்து விட்டது. இரைதேடி வேட்டைக்குச் செல்ல முடியாமல் அது தவித்தது. தான் இருக்கும் இடத்தின் அருகில் வரும் சிறு விலங்குகளை மட்டும் கொன்று தன் பசியை போக்கிக் கொண்டது. இந்த நிலையில், புத்திக் கூர்மையுள்ள குள்ளநரி ஒன்று அங்கு வந்து சேர்ந்தது. சிங்கம் அதை தனது நண்பனாக ஆக்கிக் கொண்டது. குள்ளநரியை வைத்து, தனது பசிக்கு ஏதாவது வழியில் இரை தேடிக் கொள்ளலாம் என்று கணக்கு போட்டுக் கொண்டது.

குள்ளநரியிடம், "உன்னுடைய புத்தியை பயன்படுத்தி ஒரு காட்டு எருமையையோ அல்லது ஒரு கழுதையையோ இங்கு அழைத்து வந்து விடு. அது என் அருகில் வந்ததும், நான் எப்படியாவது அதை கொன்று விடுகிறேன். உனக்கும் அதிலிருந்து நிறைய மாமிசத்தை கொடுக்கிறேன்" என்று ஆசை காட்டியது. இதை ஏற்றுக் கொண்ட குள்ளநரி, ஏழை மனிதரின் கழுதையிடம் வந்து, "என் அருமை நண்பரே, உணவு கிடைக்காமல் நீ கஷ்டப்படுவதை, என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை" என்று மெல்ல பேச்சை துவக்கியது. இதனைக் கேட்ட கழுதை, "அனைத்து செயல்களும் இறைவனின் எண்ணப்படி நடக்கின்றன. வயிறு நிறைய உண்பதும், பட்டினியால் வாடுவதும் இறைவனின் நாட்டம். எல்லா உயிரினங்களுக்கும் உணவு அளிக்கும் பொறுப்பு இறைவனுடையது. நீ ஏன் அலட்டிக் கொள்கிறாய்?" என்று பதில் அளித்தது. கழுதையின் போதனையை கேட்டு எரிச்சலடைந்த குள்ளநரி, "இறைவனின் நாட்டத்தை நீ தவறாகப் புரிந்து கொண்டுள்ளாய்! உணவை தேடிச் சென்று அடைவது உன் கையில் தான் உள்ளது. இந்த வீண் பேச்சையெல்லாம் விட்டு விட்டு அருகாமையில் ஒரு செழிப்பான பகுதி உள்ளது. அங்கு ஏராளமான தாவரங்கள், புற்பூண்டுகள் செழிப்பாக வளர்ந்துள்ளன. உன்னைப் போன்ற கால் நடைகளுக்கு அது ஒரு சொர்க்கமாகும்" என்று தந்திரமாக ஆசை வார்த்தைகளை கூறியது. கழுதையும் குள்ளநரியின் பேச்சில் மயங்கி,

வளமான வனத்துப் பகுதியை நோக்கி நடை போட்டது.

கழுதை தனக்கு அருகில் வந்து விட்டதை அறிந்த சிங்கம் அவசரமாக எழுந்து, ஆவேசத்துடன் கழுதையின் மேல் பாய்ந்தது. ஆனால் பலக்குறைவால், கழுதையின் மேல் பாய முடியாமல் கீழே விழுந்து விட்டது. ஆபத்தான நிலைமையை உணர்ந்து கொண்ட கழுதை, அங்கிருந்து தப்பித்து கானகத்திற்குள் ஓடி மறைந்து விட்டது.

குள்ளநரி சிங்கத்திடம் "காட்டுராஜாவே! தாங்கள் சிறிது பொறுமையாகவும், புத்திசாதுரியமாகவும் நடந்து கொண்டிருந்தால், கழுதை தங்களின் பகல் உணவாகக் கிடைத்திருக்கும்" என்று இடித்துக் கூறியது.

இதனைக் கேட்ட சிங்கம், அருகில் வந்த இரையை வேட்டையாட தன்னால் இயலாமல் போனதற்காக, வெட்கத்துடன் குள்ளநரியிடம் மன்னிப்பு கோரியது. மேலும் "நீ தலை சிறந்த அறிவாளியல்லவா? தயவு செய்து புதிய யுக்தியுடன் கழுதையிடம் பேசி மறுபடியும் என் அருகில் அழைத்து வரவும்" என்று மன்றாடியது.

சமாதானம் அடைந்த குள்ளநரி "காட்டுராஜாவே! நான் கழுதையை தங்களின் அருகில் கொண்டு வர மறுபடியும் முயற்சி செய்கிறேன். தயவு செய்து, தாங்கள் எந்த அவசரமும் காட்டக் கூடாது" என்று கண்டிப்புடன் கூறி விட்டது.

இதன் பிறகு, குள்ளநரி அந்த கழுதையிடம் சென்று, தன்னுடைய முழு திறமையையும், தந்திரத்தையும் பயன் படுத்தி கழுதையை செழிப்பு மிக்க வனப்பகுதிக்குச் செல்வ தற்கு சம்மதிக்க வைத்தது. கழுதை மறுபடியும் குள்ள நரியின் வார்த்தைகளில் மயங்கி விட்டது.

இந்த முறை, கழுதை சிங்கத்தின் அருகில் வந்தவுடன் சிங்கம் முன்ஜாக்கிரதையுடன், அவசரப்படாமல், கழுதையின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, பலமாக ஓங்கி அடித்தது. அதே இடத்தில் கழுதை சுருண்டு விழுந்து பிணமானது. நீண்ட நேரத்திற்குப் பின் பெரிய வேட்டையாடிய சிங்கம், களைத்து விட்டது. அதனால் அதற்கு கடும் தாகம் எடுத்தது. அருகில் இருந்த குளத்திற்கு தண்ணீர் குடிக்கச் சென்று விட்டது. இந்த அருமையான வாய்ப்பை பயன்படுத்தி, குள்ளநரி கழுதையின் அருகில் சென்று, அதன் சுவை மிக்க இதயத்தையும், ஈரலையும் கவ்வி, உண்டு மகிழ்ந்தது.

திரும்பி வந்த சிங்கம், கழுதையை ஆவலுடன் பதம் பார்க்கத் தொடங்கியது. அப்

போது, கழுதையின் உடலில் இதயமும், ஈரலும் இல்லாததைக் கண்டு ஆச்சரியமடைந்தது. உடனே, அது குள்ளநரியிடம், "நரியாரே, இந்த அதிசயத்தை பார்த்தாயா? கழுதையின் உடலில் இதயமும், ஈரலும் இல்லவே, இல்லை"! என்று சொல்லியது. குட்டு வெளிப்பட்டு விட்டதை அறிந்த குள்ள நரி "காட்டுராஜாவே! இந்த கழுதைக்கு இதயமும், ஈரலும் இருந்திருக்கவே முடியாது! ஏனென்றால், அப்படி ஏதாவது ஒன்று இருந்திருந்தால், தன்னையே பலி கொடுக்க, உங்கள் அருகில் இரண்டாவது முறையாக, அது வந்திருக்காது" என்று ஒரு நூதன விளக்கமளித்து, உண்மையை மறைத்து விட்டது!

மனிதர்களின் உள்ளங்களை பண்படுத்தும் இதைப் போன்ற சம்பவங்களையும், கதைகளையும் "மவ்லானா ரூமி" அவர்கள் மஸ்னவியில் ஏராளமாகக் கூறியுள்ளார்கள். பல படிப்பினைகள் அதில் உள்ளன.

தன்னுடைய 68-வது வயதில் மவ்லானா ரூமி அவர்கள் "கூனியாவில் மரணமடைந்தார்கள். கூனியாவில், அடக்கம் செய்யப்பட்டுள்ள "மவ்லானா ரூமி" அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு தினந்தோறும் உலக மக்கள், ஏராளமானோர் வந்து செல்கின்றனர்.


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் :

அல்லாமா

அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)

மவ்லானா முஃப்தீ அல்ஹாஜ் "அஸ்அதுல் மில்லத்"

அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா ஹாஃபிழ் காரி முஃப்தீ அல்ஹாஜ்

மு.முஹம்மது இஸ்மாயீல்

காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ

அலுவலக முகவரி :

குர்ஆனின் குரல்

த.பெ.எண் : 99

4/25, எழில் நகர், மேலமடை,

மதுரை-625020.

அலுவலக அலைபேசி எண் :

94420 56547

E.mail : quraaninkural@gmail.com

web : www.quraaninkural.com

ஓராண்டு சந்தா ரூ.300/-

தனி இதழ் ரூ.25/-

Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,

M.MOHAMED ISMAIL

S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

M/s. INDIAN OVERSEAS BANK,

Madurai Meenakshi College Branch,

M.MOHAMED ISMAIL

S.B. A/c No. 175701000003467

IFSC Code : IOBA0001757

Google Pay Name : QURANIN KURAL

Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# காலத்தின் மீது சத்தியமாக...!

"காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். ஆயினும் எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான அமல்கள் செய்து சத்தியத்தை கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களோ அவர்களை தவிர (மற்றவர்கள் நஷ்டத்தில் உள்ளார்கள்)"

-அல்குர்ஆன் (103 : 1)

சராசரி மனிதனின் வெற்றி, தோல்வியாகட்டும், ஒரு முஃமினுடைய இம்மை, மறுமையினுடைய ஈடேற்றமாகட்டும். அவன் காலத்தை எந்த முறையில் பயன்படுத்துகிறான் என்பது கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது.

நல்லோர்களும், இறைநேசர்களும், உலகியல் துறையில் சிறந்த முன்னோடிகளான சாதனையாளர்களும் தங்களின் நிமிடப் பொழுதுகளை கூட பயனுள்ள வகையில் அமைத்துக் கொண்டதே அவர்களின் உயர்வுக்குக் காரணமாகும்.

## இறைவனின் சத்தியம்:-

மனிதகுலத்தின் அனைத்து செயல்களின் மூலதனம் மனிதனோடு பின்னிப்பிணைந்துள்ள காலமேயாகும். மனிதனுடைய நிமிடங்களே நாளை மறுமையில் அவனுக்கு சாட்சிகளாக அமையும்! தவிர்க்க முடியாத ஒருநிலை உள்ள காரணத்தாலேயே இறைவன் காலத்தின் மீது சத்தியமிட்டு அதை உணர்த்துகிறான். "காலம் குறித்தும், மனிதர்கள் செய்ய வேண்டிய செயல்கள் குறித்தும் உள்ளடங்கிய இவ்வசனத்தை சிந்திப்பதே மனித சமுதாயத்தின் ஈடேற்றத்திற்கு போதுமானதாகும்" என்ற இமாம் ஷாஃபியீ (ரஹ்) அவர்களின் கூற்றை வெற்றிபெற விரும்புபவர்கள் நிச்சயம் செவிமடுப்பார்கள்.

காலம் பொன்போன்றது என்பன போன்ற சொல்லாடல்கள் பலமுறை நமக்கு மத்தியில் வலம் வந்திருந்தாலும் நேரம் காப்பது எனும் அழகிய வழி முறை பற்றி ஒவ்வொரு தனி மனிதனும் விளங்க முற்படுவதே வெற்றிக்கு வித்திடுவதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## நல்லோர்களின் வழி எது?

120 நபித்தோழர்களை கண்டு அவர்களுடன் நெருங்கிய தொடர்பும் கொண்ட ஹள்ரத் ஹஸன்பஸ்ரி (ரஹ்) அவர்கள் நபித்தோழர்களின் நேரம் செலவிடும் குணம் குறித்து கூறும்போது "அவர்கள் தீனார், திர்ஹத்தை செலவிடுவதைவிட தங்களின் நேரத்தில் மிகவும் கவனமாக இருப்பார்கள்" என குறிப்பிடுகிறார்.

(கிதாபு ஜிஹ்து -பக்கம்-4)

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றபின் பெருமானார் (ஸல்) அவர்களை விட்டும் நீங்காது எப்பொழுதும் உடனிருந்து நபிமொழிகளை மனனம் செய்யும் வழமை கொண்டிருந்தார்கள்.

தங்களுடைய முழுநேரத்தையும் நபி(ஸல்) அவர்களின் முபாரக்கான தொடர்பில் இருந்து குறுகிய காலத்தில் 5374 நபி மொழிகளை அறிவித்து இஸ்லாமிய உலகிற்கு விலை மதிப்பற்ற பெரும் பொக்கிஷத்தை வழங்கிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

சுமார் 1400 வருடங்களுக்கு முன் வாழ்ந்த அந்த மேன் மக்களின் நொடிப்பொழுதுகள் கியாமநாள் வரை பலன்தரும் படியான செயல்களில் அன்றைக்கே ஈடுபடுத்தப் பட்டுள்ளதை அவர்களின் அடிச்சுவடுகள் சாட்சியம் கூறுகின்றன.

ஹள்ரத் அப்துல்லாஹிப்னு அம்ர் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள்:-

"நான் நபி (ஸல்) அவர்கள் கூறும் அனைத்தையும் எழுதும் வழமை கொண்டிருந்தேன்"

(அபூதாவூத் - 513, பாகம் -2)

அன்றைய காலத்தை நல்ல செயல்களில் ஈடுபடுத்தியதால் அழியாமல் இன்றும் நம்முடன் வாழவே செய்கிறார்கள்.

## இரண்டு உபகாரங்கள்:-

எல்லோருக்கும், தான் சுகமான நிம்மதியான வாழ்வு வாழ வேண்டும்என்ற ஆசை இருக்கவே செய்யும். ஆனால் அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதில் அக்கறை செலுத்துவோர் மிகமிகக் குறைவே. முயற்சியின்றி எதையும் பெறமுடியாது என்று அறிந்தும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டு கைசேதப் படுபவர்கள் கணிசமாக இருக்கவே செய்கின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:-

"இரண்டு நிஃமத்துகள். பெரும்பான்மையான மனிதர்கள் அவ்விரண்டு விஷயங் களில் ஏமாற்றத்தில் இருக்கின்றனர். (ஒன்று) ஆரோக்கியம் (மற்றொன்று) ஓய்வு" (புகாரீ 6049)

மனிதன் தனக்கு வழங்கப்பட்ட உடல் நலத்தையும் தன் அவகாசங்களையும் தனக்கோ, தன் சுற்றத்துக்கோ பயன்தரும் விஷயத்தில் ஈடுபடுத்தும் போது ஈருலக வெற்றிக்குரியவர்களாகி விடலாமே! இதை புரிந்தவர்கள் எத்தனை பேர் என்பதை நாம் சிந்தித்து படிப்பினை பெற வேண்டும்.

### நன்மைகளில் ஈடுபடுவோம்:-

சிறிது நேரம் ஓய்வு கிடைக்கிறதென்றால் அதை அழியாத நன்மைகளாக மாற்றுவதே சிறந்த செயலாகும். அவரவருக்கு தெரிந்த சிறிய அமல்கள் செய்யக் கிடைத்த அரியவாய்ப்பாகக் கருதி அந்த நிமிடங்களை பயன்படுத்த வேண்டும்.

8-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த மேதை ஹள்ரத் ஹாபிழ் இப்னு ஹஜ்ர் (ரஹ்) அவர்கள் பல்வேறுபட்ட மார்க்க கல்விக் கிரந்தங்களை எழுதியவர்கள்.

150க்கும் மேற்பட்ட விளக்க நூல்களை எழுதிய இவர்களின் கல்வி ஞானத்திற்கு புகாரியின் விளக்கவுரையான பத்ஹுல்பாரி என்ற நூல் ஓர் எடுத்துக் காட்டாகும்.

அன்னார் இவ்வாறு விளக்க நூல் எழுதும் போது அவர்களின்

இன்பமான இனிய இல்லறத்திற்கு
பக்க விளைவுகள் கிடையாது
ஜிங்கா கோல்டு™
ஆண்களின் சக்திக்கு
மூலிகை மந்திரம்
4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே
அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்
Customer Care - 9962664444
www.jingagold.com info@jingagold.com

மரஎழுத்தாணியை அவ்வப்போது சீவும் சிறு இடைவெளியைக் கூட வீணாக்காமல் "சுப்ஹானல்லாஹ்" "அல்ஹம்துலில்லாஹ்" மற்றும் "இலாஇலாஹ இல்லல்லாஹு" என்ற திக்ரு செய்து அந்த சில நிமிடங்களையும் நன்மையாய் மாற்றும் வழமை கொண்டிருந் தார்கள் என்ற வரலாறு நம்மை தலைகுனிய வைத்துவிடுகின்றது.

## மனிதசெயல்கள் மூன்று வகை:-

நல்லோர்களின் வரலாறுகள் நன்மை செய்யும்படி நமக்கு உணர்த்திக்கொண்டே தானி ருக்கின்றன. அவரவர் செயல் களுக்கு அவரவரே பொறுப்பேற்க வேண்டிய நிலை உள்ளது என்பதை மறந்து விடக் கூடாது.

மனிதர்களின் செயல்கள் மூன்று வகை என்கிறார்கள் இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள்:-

1) நன்மை தரவல்லது.
2) தீமைக்குரியது.
3) நன்மை, தீமை என்றில்லாத செயல்களாகும்.

இதில் முதல்வகையில் தன்னை ஈடுபடுத்த வேண்டும் என்று கூறும் அதே சமயம் அடுத்த இருவிஷயங்களையும் முற்றிலும் தவிர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நற்கருமம் செய்யும் எண்ணத்தை உடனடியாக நிறைவேற்றுவதும், பாவமான விஷயங்களைவிட்டும் தன்னை தற்காத்துக் கொள்வதும் ஈமானிய அடையாளமாகும்.

பிரயாணத்தில் ஓரிடத்தில் ஒரு கப்ரை கண்டவுடன் ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் இரண்டு ரக்அத் நபில் தொழு தார்கள். காரணம் வினவப்பட்ட போது "கப்ருக்கு சென்றுவிட் டால் நன்மை செய்ய இயலாது என்பது நினைவுக்கு வந்தது. உடனே இரண்டு ரக்அத் தொழும் எண்ணம் எழவே தொழுது கொண்டேன்" என்று கூறினார்கள். இதுபோன்ற நூற்றுக்கணக்கான இறைநேசர்களின் தலைசிறந்த வாழ்வியல் படிப்பினைகள் நமக்கு முன் சென்றுள்ளன. அந்த கண்ணியவான்களின் வழிமுறைகள் அல்லாஹ்வும்

நபி (ஸல்) அவர்கள் வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ் பின் வருமாறு கூறியதாக அறிவித்தார்கள். "அநீதியிழைப்பதை எனக்கும், என் அடியார்களுக்கும் நான் தடை செய்து விட்டேன். ஆகவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதியிழைக்காதீர்கள்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள்

(நூல் : முஸ்லிம் 6740)

ரஸூலும் காட்டித்தந்தவை என்பதும், இதுவே வெற்றியை விரும்பும் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையுமாகும்.

## மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான் :-

இவ்வுலக வாழ்க்கையில் நல்ல செயல்கள் செய்யும் வாய்ப்பு எப்பொழுது கிடைத்தாலும் அதை உடனே செயல்படுத்த வேண்டும். சிறிதும் தாமதித்தல் கூடாது. பிறகு செய்து கொள்ள லாம் என்றால் சந்தர்ப்பம் கை நழுவி கைசேதப்படுபவர்களாகு வதை எவராலும் தடுக்கமுடியாது.

தன்வீட்டின் சிதிலமடைந்த பகுதியை ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு அம்ரு(ரளி) அவர்களும், அவரின் தாயாரும் சேர்ந்து சரிசெய்து கொண்டிருந்ததைக் கண்ட நபியவர்கள் “மரணத் திற்கு பின் உள்ள அவசியம் இதைவிட மிகவிரைவானதாக இருப்பதாக நான் கருதுகிறேன்” என்றார்கள்.

(அபூதாவூது : 710, பாகம் : 2)

வீட்டை சரிசெய்தல் போன்ற ஆகுமாக்கப்பட்ட விஷயங்களை காட்டிலும் மறுமையின் வீட்டை சீர்படுத்தும் சிந்தனை அழுத்த மாக விதைக்கப்பட்ட சமுதாயத் தின் வாரிசுகளாகிய நாம் நமது காலத்தை எப்படி பயன்படுத்து கிறோம்?

ஒரு சில மணித்துளிகளை தவறவிட்டதால் முன்னேற்றத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தவர்கள் சரிவின் பள்ளத்தில் விழுந்து எழ முடியா மல் போன எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. பனிக் கட்டிகள் கரைவதற்குள் பயன் படுத்திவிட வேண்டும் என்பது போல நேரம் கடப்பதற்குள் அதை சரியான வழியில் செலவழித்தல் அவசியமாகும்.

எந்த நல்ல செயலையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப்போடுவது அறிவாளிகளுக்கு அழகல்ல.

இமாம் ஹஸன் பஸ்ரி (ரஹ்) அவர்கள் மனிதர்களைப் பார்த்து “காரியங்களை தள்ளிப் போடுவதை விட்டும் எச்சரிக் கிறேன்” என்று கூறுவார்கள். காலத்தின் அருமை உணர்ந்த நன்மக்களாய் வாழ்வோமாக.

“இறைநம்பிக்கையாளன் குத்திப் பேசுபவனாகவும், சதா சாபமிடுபவனாகவும் இருக்கமாட்டான்; மானங்கெட்ட செயல் புரிபவனாகவும், (சண்டையில்) தீய வார்த்தைகள் பேசுபவனாகவும் இருக்கமாட்டான்” என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் (நூல்: ஹாகிம்)

பிரார்த்தனை...

# துஆ மஜ்லிஸ்

## நலமுடன் வாழ

என் மனைவியின் கடுமையான நோய் நீங்கி, பரிபூரண சுகம் பெற்று ஆரோக்கியத்துடன் வாழ வல்ல ரஹ்மானிடம் துஆ செய்யுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். - **முஹம்மது யூசுப்,** மதுரை.

கம்பத்து அப்துல் பாரி - பள்ளபட்டி; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; டாக்டர் ஜி.மும்தாஜ் - மதுரை; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாஷா - வீரகனூர்; டாக்டர் எஸ். முஹம்மது கான் - மதுரை; முகைதீன் பானு - மதுரை; ராஜா ஹுஸைன் ஆசிரியர் - திருச்சி; சந்தா எண் F 595 - திருச்சி; எம்.ஜரினா பேகம் - பாளையகாடு; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, அப்துஸ் ஸலாம் - மதுரை; எஸ்.ஹசன் பானு - தஞ்சாவூர்; என்.மும்தாஜ் - தஞ்சாவூர்; எம்.ஷானவாஸ் - திருச்சி; எஸ். நூருன்னிஷா - தஞ்சாவூர்; பி.காதர்பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; மு.நஸ்ரின் ஸபூரா - திருப்பூர்; மு. ஜெமிலா - புதுஆயக்குடி; முஹம்மது ரஹ்மத்துல்லாஹ் - புது ஆயக்குடி; மு.தீன் முஹம்மது - புது ஆயக்குடி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; அ. தஸ்லீமா - பெங்களூரு; அ.சம்சாத் - பெங்களூரு; சப்ரின் - கர்நாடகா; ஹாஜரா - பெங்களூரு; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; ராகிமா - தாராபுரம்; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ் - சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா - செட்டியார்பட்டி; பி.சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; அன்சாரி - உடுமலை; செல்லபா, எஸ்.கோரிமா, எஸ்.சிக்கந்தர் பாஷா - விராதனூர்; எஸ். நஸ்ரூதீன், பாத்திமா - ஈசநத்தம்; ஜரீனா பானு - ஈசந்தம்; ஜஸிமா ஜாஸ்மின் - திண்டுக்கல்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; சின்னு (எ) அப்துல் ரஷீது - கேரளா; P.முஹம்மது ஹஸன் - பெரியகுளம்; எம். உமர் - ஈரோடு; எம்.ஜரீனா பேகம் - மதுரை; சபினா ஆஸ்மி, முஹம்மது காமில் - இராமநாதபுரம்; முஜம்மில் - டெல்லி; தங்கமணி - ஈரோடு; ஹபீபுன்னிஸா - ஈரோடு; ஷகீனா - திருப்பூர்; முஹம்மது ஷபுல் இப்ராஹீம் - டெல்லி;

எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; பி.காதர் பாட்சா - பொள்ளாச்சி; முஹம்மது யாசீன் - நெய்க்காரப்பட்டி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுஸைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; முஹ;மமது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அர்ஹம் முஹம்மது - சவூதி; இர்ஃபான் ரியாஜ், ருமானா பர்வீன் - கரூர்; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; எஸ்.வி.அப்துர் ரஹ்மான் - மதுரை; பி.அப்துல் சத்தார் - திருப்பூர்; ஷேக் யாகூப், பஸாரி பானு, ஷேக் அஜீஸ், ஷேக் அமீன் - மதுரை; சந்தா எண் L105 - மணப்பாறை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும் துஆ மஜ்லிஸின் துஆ பரக்கத்தாலும் என்னுடைய மகனாருக்கு சொந்த ஊருக்கே வேலை டிரான்ஸ்ஃபர் கிடைத்து விட்டது. அல்ஹம்துலில்லாஹ்! துஆ செய்த அனைத்து மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். **ஐ.முஹம்மது இஸ்மாயீல்** - திருச்சி.

பேருளாளன் அல்லாஹ்வின் பெருங்கிருபையாலும், துஆ மஜ்லிஸ் குழுவினர், உலமா பெருமக்கள், வாசகநேயர்கள் ஆகியோரின் துஆ பரக்கத்தாலும் நான் வீடு கட்டி முடித்து விட்டோம். மிக்க மகிழ்ச்சி! துஆ செய்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். **பீனா** - கேரளா.

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

கேரள மாநிலம் பாலக்காடு மாங்காவு எடயார் தெரு ஜனாப் முஹம்மது அப்துல் காதர் இராவுத்தர் அவர்களின் மகனார் கேரளா கூட்டுறவுத்துறை (Retd. Deputy Registrar) ஜனாப் எம்.காஜா உசேன் அவர்கள் 31.05.22 அன்றும்,

பாலக்காடு கோர்ட் ரோடு "சந்தோஷ் ஃபேப்ரிக்ஸ் மெகா ரெடிமேட் ஜவுளிகடை" உரிமையாளர் அல்ஹாஜ் அப்துல் லத்தீப் அவர்கள் 05.06.22 அன்றும்,

பாலக்காடு "ராஜ் மோட்டார்ஸ்" உரிமையாளரும், ஜனாப் நஜ்முத்தீன் ஃபெரோஸ் அவர்களின் தகப்பனாருமான அல்ஹாஜ் உமர் சாஹிப் அவர்கள் 06.06.22 அன்றும்,

கேரள மாநிலம் கொழிஞ்சாம்பாறை நடுநிலைப்பள்ளி ஓய்வு - தலைமையாசிரியரும், கிராம படிப்பகத்தின் செயலாளருமான ஜனாப் எம்.அப்துல் சத்தார் அவர்கள் 07.06.22 அன்றும்,

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் மர்ஹூம் மு.மு.முஹம்மது இப்ராஹீம் (ரஹ்) அவர்களின் அன்பு மகனாரும், அக்ரஹாரம் சேட்பா (ஏ) எஸ்.முஹம்மது இப்ராஹீம், திருப்பூர் முஜீபுர் ரஹ்மான், முஸ்தாக் அஹமது இவர்களின் அருமை தகப்பனாருமான ஜனாப் எம்.சதக்கத்துல்லாஹ் அவர்கள் 09.06.22 அன்றும்,

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் பெரிய பள்ளிவாசல் நாட்டாண்மையாக இருந்துவந்த அல்ஹாஜ் C.K.U. அப்துல் கரீம் அவர்கள் 10.06.22 அன்றும்,

நீடூர் - நெய்வாசல் ஜாமிஆ மிஸ்பாஹுல் ஹுதா அரபிக் கல்லூரி யின் முன்னாள் முதல்வர் மர்ஹூம் மவ்லானா மவ்லவீ எம்.எம்.ரஹ்மத்துல்லாஹ் மிஸ்பாஹி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் மூத்த மகனாரும், மவ்லவீ ஹாஃபிழ் முஹம்மது ஜெமீல் பாழில் மழாஹிரி ஹள்ரத் அவர்களின் அருமை தகப்பனாருமான ஜனாப் ஆர்.முஹம்மது யாஸீன் அவர்கள் 10.06.22 அன்றும்,

ஈரோடு அக்ரஹாரம் மர்ஹூம் ஆர்.ஏ.முஹம்மது அனீபா சாயபு (ரஹ்) அவர்களின் அருமை மனைவியும், ஜனாப் இல்யாஸ், ஜனாப் பாபு ஹாரீஸ் இவர்களின் அருமை தாயாருமான ஜனாபா ஹாஜிரா பீவி அவர்கள் 11.06.22 அன்றும்,

சேலம் 2வது அக்ரஹாரம் "சூப்பர் மெடிக்கல்ஸ்" ஜனாப் முஹம்மது முபாரக் அவர்களின் அன்பு மகளாரும், ஜனாப் முஜம்மில் முக்தார்

அவர்களின் அருமை மனைவியுமான ஜனாபா ஆப்ரா ஹாஸ்லீன் அவர்கள் 12.06.22 அன்றும்,

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் மர்ஹூம் சே.கா.முஹம்மது இப்ராஹீம் (ரஹ்) அவர்களின் அன்பு தம்பியும், "டான் ஃபுட்வேர்" அல்ஹாஜ் ரிஜ்வான் அஹமது அவர்களின் அருமை மாமனாரும், ஆசிரியர் அல்ஹாஜ் ஏ.சுல்தான் இப்ராஹீம் அவர்களின் அருமை தகப்பனாருமான ஜனாப் ஏ.அஷ்ரஃப் அலீ அவர்கள் 19.06.22 அன்றும்,

மயிலாடுதுறை மாவட்டம் நீடூர் நெய்வாசல் மர்ஹூம் கே.அப்துல் ஹக்கீம் (ரஹ்) அவர்களின் மனைவியும், ஜனாப் அ.முஹம்மது நிஜாமுத்தீன் அவர்களின் தாயாருமான ஜனாபா ஏ.ஷம்ஸுல் ஹுதா அவர்கள் 02.07.22 அன்றும்,

இடையகோட்டைவாசி சென்னை மீஞ்சூரில் வாழும் மர்ஹூம் அப்துல் கனி (ரஹ்) அவர்களின் அன்பு மகளாரும், இடையகோட்டை "குர்ஆனின் குரல்" முகவர் முஹம்மது ஜக்கரியா அவர்களின் தமக்கையாரும், அல்ஹாஜ் எஸ்.குலாம் மைதீன் அவர்களின் அருமை துணைவியாருமான ஜனாபா சபூரா பீவி அவர்கள் 03.07.2022 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி கடத்தூர் மர்ஹூம் அப்துல் முத்தலீப் (ரஹ்) அவர்களின் இரண்டாவது மகனார் கடத்தூர் ஜனாப் முஹம்மது ஷெரீப் அவர்கள் 05.07.22 அன்றும்,

தஞ்சை மாவட்டம் திருமங்கலக்குடி மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் ஹமீது (ரஹ்) அவர்களின் சகோதரரும், ஜனாப் சையது அஹமது கபீர் அவர்களின் அருமை தகப்பனாரும், புருணை மற்றும் லெபுவான் தொழிலதிபருமான பிஸ்மில்லாஹ் (எ) அல்ஹாஜ் முஹம்மது ஹனீஃப் அவர்கள் 10.07.22 அன்றும்,

இஸ்லாமிய பாடலாசிரியர் - கவிஞர் வீரை அப்துல் ரஹ்மான் அவர்கள் 12.07.22 அன்றும்,

பள்ளபட்டி சேகண்டி மர்ஹூம் ஷேக் முஹம்மது (ரஹ்) அவர்களின் இரண்டாவது மகனார் ஜனாப் முஹம்மது இப்ராஹீம் அவர்கள் 13.07.22 அன்றும்,

**வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்**

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

# வாசகர் வட்டம்

தலையங்கம் மிகவும் நேர்த்தியாகவும், ஆழ்ந்த உள்ளக்குமுறலை வெளிப்படுத்தியதாகவும் இருந்தது. இதுவே ஒவ்வொரு ஈமான் கொண்ட மக்களின் மனம் சபிக்கப்பட்ட கருத்தும் உச்சபட்ச எதிர்ப்பும் என்றால் மிகையாகாது. அமானிதமாக படைக்கப்பட்ட மனித இனம் அதனைப் பேணாமல் மனம் போன போக்கில் அப்பாவி மக்களின் உள்ளத்தை புண்படுத்தியதற்கு ஒரு நாள் அல்ல ஒரு நாள் விடிவு உண்டு. பொறுத்திருப்போம்.



ஹஜ்ஜும், பாங்கும் தலைப்பில் ஜம்பை ஜப்பார் ஹள்ரத் எழுதிய கட்டுரை ஹஜ்ஜின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது அருமை! படித்த வாசகர்களுக்கு தாங்களே அந்த புனித பயணத்தை மேற்கொண்டு நிறைவு செய்த மன நிலை நிச்சயம் ஏற்பட்டிருக்கும். அல்லாஹ் இனி வருங்காலங்களில் தங்கு தடையின்றி அந்த வாழ்நாளில் ஒருமுறை பயணத்தை பூர்த்தி செய்திட அருள்புரிவானாக. காயிதேமில்லத் பற்றி முன்னாள் காவல்துறை தலைவர் பொது மேடையில் கூறியதை படித்ததும் கண்கள் கட்டுக்கடங்காமல் உணர்ச்சி ஏற்பட்டது. காரணம் : அந்த பெருந்தகை அன்றாடம் கடைபிடித்து வாழ்ந்த காலம் பொற்காலம் என்பதால்!

பா. ஜாஹிர்ஹுஸைன்.
சேந்தமங்கலம்.

அட்டையில் புதிய அழகையும் அடர்த்தியையும் தரும் அரஃபா மலையும் - மைதானமும் வாசகர்களின் நெஞ்சங்களில் நிறைந்து விட்டன. கண்களை குளுமைப்படுத்தி விட்டன. "அகிலத்தின் அதிசயங்கள் இரண்டு : ஹஜ்ஜும், பாங்கும்" என்று தங்கத் தட்டில் மவ்லானா ஜம்பை ஜப்பார் எழுதிய கட்டுரை ஹஜ்ஜின் சிறப்புகளை ஒருபடி உயர்த்தி விட்டது. ஹஜ்ஜின் பெருமைகளை மனம் மகிழ, செவி குளிர வைத்தார். மவ்லவீ எஃப். ஜமால் பாக்கவியின் "நல்ல குழந்தையின் துஆ" கண்டேன். குழந்தைகளுக்கு சுறுசுறுப்பான நல்ல பழக்கங்களை அளிப்பது சொத்து அளிப்பதை விட சிறந்தது. மேலும், குழந்தைகளின் அருமை அம்மாக்களுக்குப் பெருமை!

உத்தமபாளையம் ப. பீர் இலாஹி தரும் 'வரலாற்றில் ஓர் ஏடு!' சிந்தனைக்கு அருமருந்து! தளர்வான நேரத்தில் ஊக்குவிப்பாக இருக்கிறது.

கவிஞர் அல்ஹாஜ் மீசல் பீ.எம். அபூபக்கரின் "உவமை இல்லாத உயர்ந்த ஹஜ்" கவிதை கற்கண்டாய் இனிக்கிறது.
மலர்கள் மலர்வதைப்போல முழுநிலவு விண்ணில் வெளி

வருவதைப் போல மாதந்தோறும் வாசகர்களை மகிழ்ச்சி கடலில் மிதக்க வைக்கும் குரலை

வாழ்த்துகிறேன்!

அ. ஷேக் முஹம்மது
வெட்டசிக்தார்

ஹஜ் பெருநாள் சிறப்பிதழ் வெகுசிறப்பு! ஹஜ் காலங்களில் செய்ய வேண்டிய அமல்களின் சிறப்பு பற்றியும், அல்-மக்கா அல்-மதீனா அற்புதமான செய்திகள், தலையங்கம் அநியாயக்காரர்களுக்கு சரியான நெத்தியடி! சமுதாயம இத்தலையங்கத்தை திரும்ப திரும்ப படிக்க வேண்டிய விஷயம்! முயற்சி நம் கையில்..! முடிவு இறைவனிடத்தில்!

ஜெ. ஜ, மஃரூபி
மண்ணடி, சென்னை–1

ஹஜ் பெருநாள் சிறப்பிதழ் இம் மாத அட்டைப்படத்தில் அரஃபா மலையும் - மைதானமும் உள்ள படம் மிகவும் தத்ரூபமாகவும், ரொம்ப அழகாகவும் பார்த்தவுடன் மெய்சிலிர்க்க வைத்தது.

அல்உழ்ஹிய்யா எனப்படும் குர்பானியின் சட்டங்கள் கேள்வி - பதில் மூலமாக மிகவும் தெள்ளத் தெளிவாக எல்லோருக்கும் பயனுள்ளதாக இருந்தது.

மவ்லவீ எஃப்.ஜமால் பாக்கவீ எழுதிய "நல்ல குழந்தையின் துஆ என்ற கட்டுரை மிக மிக அருமை! செய்திக்கலவையில் வெளியான மதநல்லிணக்கத்தைப் போற்றும் வகையில் ஜம்முவில் இராணுவத்தினர் நடத்திய தொழுகை மற்றும் இஃப்தார்


நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள் :-

"ஒரு பெண் அவளின் கணவர் பொருந்திக் கொண்ட நிலையில் மரணித்து விட்டால் அவள் சொர்க்கம் சென்று விடுவாள்." அறிவிப்பாளர் : ஹள்ரத் உம்மு ஸலமா (ரளி) அவர்கள்.

(நூல் : திர்மிதி)

# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை–1.

04373-254354; 253339; 99444 54354

நிகழ்ச்சி பற்றிய செய்தியை படிக்கும்போது நான் ஒரு முன்னாள் இராணுவ வீரர் என்பதை நினைத்து பெருமிதம் கொள்கிறேன்.

மருத்துவப் பகுதியில், "உணவே மருந்து" என்று வெளியான அனைத்து விவரங்களும் இல்லத்தரசிகளுக்கு மிக்க பயனுள்ளதாக அமைந்துள்ளது.

மேற்கண்டவைகள் போல் எவ்வளவோ நல்ல செய்திகள் அடங்கி இம்மாதம் வெளியான குர்ஆனின் குரல் மிகவும் பத்திரமாக பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகும்.

(R. யூசுப் - எக்ஸ் ஆர்மி)
பழநி.

காயிதேமில்லத்தின் வாழ்வில் நடந்தவை - மனசாட்சிக்கு சாட்சி சொல்லும் வகையில் முன்னாள் ஐஜியின் வாக்குமூலம் பதிவு செய்துள்ள அதே வகையில், காயிதே மில்லத் அவர்கள் தனது மகன் மியாகானுக்கு (ராஜாஜி C.M. என்ற வகையில்) ஒருவேலைக்கு அப்பாயின்ட் மென்ட் ஆர்டர் கொடுத்ததை மறுத்தளித்து, அந்த ஆர்டர் காயிதே மில்லத்தின் மகன் என்பதற்காக கொடுத்துள்ளபடியால் அந்த ஆர்டரை முதல்வரிடம் திருப்பி கொடுத்து விடும்படி "Return - it - to CM" என்று தன் மகனுக்கு அறிவுரை கூறியதையும் ஒரு நம்பகமான செய்திக் குறிப்பிலிருந்து அறிய முடிந்ததையும் இத்தருணத்தில் நினைவுகூரத்தக்கதாயுள்ளது.

DE. K. ABDUR RAHIM.
பண்ருட்டி.

மக்களுக்குத் தீங்கு செய்யாமல் இரு; ஏனெனில் அதுவும் நீ உனக்கு செய்து கொள்ளும் ஒரு தர்மம் ஆகும்" என்று நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகள் படித்தேன். எதுவும் செய்யாமல் மன அமைதியுடன் சும்மா இருந்தாலே அதுவே ஒருவருக்குப் போதும்! பிறருக்கு தீங்கு செய்வதால் அவருக்கு துன்பம் இழைப்பதோடு, செய்தவர் மனமும் அதனால் துன்புறவே செய்யும். "தீங்கு செய்தவருக்கும் நன்மையே செய்; அநீதியிழைத்தவரையும் மன்னித்து விடு" என்ற அற்புதமான நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகளை நாம் மனதில் உணர்ந்து ஏற்று நடக்கும்போது வாழ்க்கை மலர்ப்பாதையாகும்; பொன்விளையும் பூமியாக மாறும்.

(ப. பீர் முஹம்மது)
உத்தமபாளையம்

அன்வர் ஜீயின் "உணவே மருந்து" மருத்துவ குறிப்புகள் அற்புத படைப்புகள்! பயனுள்ளதாக இருந்தது.

M.H. அப்துல் ஹமீது
சென்னை - 59

# கடைசிப்பக்கம்

எம்.ஜே.அன்வரி

நபி (ஸல்) அவர்களை அவதூறாக பேசிய சங்கியை ஆதரித்து பேசியதால் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஒரு இந்து தையற்காரர் கொலை செய்யப்பட்டாராம். அதைத் தொடர்ந்து அவரை கொலை செய்ததாக சில முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

வழமைபோல், கொலை செய்த முஸ்லிம்கள், பாகிஸ்தான் ஆதரவு பெற்ற அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள், இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சங்கிகளால் சொல்லப்பட்டன.

இந்நிலையில், கொலை செய்யப்பட்ட இந்து தையற்காரர் குடும்பத்திற்கு ராஜஸ்தான் மாநில அரசு 51 இலட்ச ரூபாயை நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

கொலை செய்யப்பட்ட இந்து சகோதரர் குடும்பத்திற்கு அரசு நிவாரண தொகையை வழங்கியதில் நமக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

ஆனால், சங்கிகளால் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் எத்தனை குடும்பங்களுக்கு அரசுகள் நிவாரண உதவிகள் வழங்கியுள்ளது? எவ்வளவு வழங்கியுள்ளது?

“மாட்டுக்கறியை சமைத்தான்! மாட்டுக்கறியை சாப்பிட்டான்! மாட்டுக்கறியை விற்றான்” என்று கடந்த ஆண்டுகளில் மட்டும் 247 முஸ்லிம்கள் சங்கிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்துவும் மனிதன்தான்! முஸ்லிமும் மனிதன் தான்! என்பதை மோடிகள் எப்போதான் உணருவார்களோ?

இந்திய இராணுவத்தில் “அக்னி பாதை” என்ற பெயரில் ஒரு புதிய பாதையை ஒன்றிய அரசு ஏற்படுத்தியுள்ளது.

“அக்னி பாதை” என்பது ஆர்.எஸ்.எஸ்.ஸின் திட்டமாகும்.

இந்துக்களை இராணுவமயமாக்க வேண்டும் என்பதுதான் சங்கிகளின் தலைமை பீடமாம் ஆர்.எஸ்.எஸ்.ஸின் திட்டம்!

இந்துக்களை இராணுவமயமாக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஹெட்கேவார் கடுமையான முயற்சிகளை செய்து வந்தார். பள்ளிகள், கல்லூரிகள், கோவில் திருவிழாக்களில் இந்துக்கள் இராணுவத்தில் சேர வேண்டும் என்று பேசி வந்தார். அவரின் திட்டப்படிதான் ஒன்றிய அரசு "அக்னி பாதை" என்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்துள்ளது.

17 வயது முதல் 21 வயதுடையவர்களை "அக்னி பாதை" திட்டத்தின்படி சேர்த்துக் கொள்வார்களாம். "அக்னி பாதை" திட்டத்தின்படி இராணுவத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நான்கு ஆண்டு காலம் வரை இராணுவ பணியில் இருப்பார்களாம். அவர்களில் சிலர் மட்டும் இராணுவத்தில் தொடர்ந்து நீடிப்பார்களாம். மற்றவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்களாம்.

இராணுவத்திலிருந்து விடுவிக்கப்படுபவர்கள் உடனடியாக ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேர்க்கப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிராக துப்பாக்கியை தூக்க வைப்பார்கள். அக்னி பாதையில் இராணுவ பயிற்சி பெறும் இளைஞர்களை ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஏவுப்படையாக ஆக்கி விடுவார்கள்.

அக்னி பாதை திட்டத்திற்கு நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளது. குறிப்பாக வட மாநிலங்களில் பயங்கர கலவரம் ஏற்பட்டது. பல இரயில் பெட்டிகள் எரிக்கப்பட்டன. இருநூறுக்கும் மேற்பட்ட இரயில்கள் நிறுத்தப்பட்டன. பல கோடி பொது சொத்துக்கள் தீயிலிடப்பட்டன.

ஆனால், சங்கிகள் மட்டும் இந்த அக்னி பாதை திட்டத்தை வரவேற்று "அக்னி பாதை" திட்டத்தில் இளைஞர்களை சேரச் சொல்லி வற்புறுத்தி வருகிறார்கள். இதிலிருந்து "அக்னி பாதை" திட்டத்தின் உள்நோக்கத்தை புரிந்து கொள்ளலாம்.

நாட்டைப் பாதுகாக்க வேண்டிய இராணுவத்திற்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆள் எடுக்கும் கொடுமையான நிலை; அதற்கு பெயர் : அக்னி பாதை! ஏன் இராணுவத்தோடு நிறுத்தி விட்டீர்கள்? எல்லோருக்கும் நான்கு ஆண்டுகளை காலக்கெடுவாக வைத்துக் கொள்ளலாமே! ஆசிரியர்களுக்கு நான்கு ஆண்டுகள்! அரசு ஊழியர்களுக்கு நான்கு ஆண்டுகள்! ஏன் அரசாங்கத்தை ஆண்டு கொண்டிருக்கும் உங்களுக்கு கூட நான்கு ஆண்டுகள் போதுமே! எங்களுக்குபின் வேறு ஆட்களை நியமித்துக் கொள்ளுங்கள் என்று நீங்களும் வீட்டிற்கு போய்விட வேண்டியதுதானே!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அவதூறு பரப்பிய சங்கிகளின் மத விரோத - மத துவேச - மத வெறுப்பு பரப்புரையைக் கண்டித்து உத்தரபிரதேசத்தில் முஸ்லிம்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அதில் சங்கிகளால் கலவரம் ஏற்பட்டது. ஆனால், பன்னூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் மட்டுமே கைது செய்யப்பட்டனர். அதோடு, கலவரத்துக்கு காரணமானவர் என ஒரு முஸ்லிம் மீது குற்றம்சுமத்தி அவருடைய வீடு மற்றும் நிறுவனங்களை உத்தரபிரதேச பாரதீய ஜனதா அரசு புல்டோசர் வைத்து இடித்துத் தள்ளியிருக்கிறது.

உத்தரபிரதேச அரசின் இந்த சட்ட மீறலைக் கண்டித்து 28 முன்னாள் நீதிபதிகள் உச்சநீதிமன்றத்தில் மனு அளித்திருக்கிறார்கள்.

இதே போன்று முன்பு சி.ஏ.ஏ. - குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து இந்தியா முழுவதிலும் எதிர்ப்பு கண்டனங்கள் நடந்தன. டெல்லியில் பெரும் கலவரமே வெடித்தது. 53 உயிர்கள் பலியாயின. உத்தரபிரதேசத்திலும், பிற இடங்களிலும் சி.ஏ.ஏ. எதிர்ப்பு கிளர்ச்சிகள் நடந்தன. அதிலும் பரவலாக 23 பேர் உயிரிழந்தனர்.

கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உத்தர பிரதேச அரசு மேலும் தொல்லை கொடுக்கும் வகையில், கலவரத்தின் போது சேதம் அடைந்த பொதுச் சொத்துக்களை அதில் பங்கேற்றவர் களிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்று கூறி, பல முஸ்லிம் குடும்பங்களின் சொத்துக்களை பறிமுதல் செய்தனர். அபராதமாகப் பெரும் தொகைகளை விதித்து வசூலித்தனர். இந்த கொடுமையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் பட்டது.

உச்சநீதிமன்றம், உத்தரபிரதேச அரசுக்கு கண்டனம் தெரிவித்து, முஸ்லிம் குடும்பங்களிலிருந்து அபராதமாக வசூலித்த தொகைகளையும், முஸ்லிம்களின் பறிமுதலான சொத்துக்களையும் திரும்பவும் அதே முஸ்லிம்களிடத்தில் ஒப்படைக்கும்படி கூறியது. உத்தரபிரதேசத்தில் நடக்கும் பாரதீய ஜனதா அரசு எந்தவொரு சட்டத்தையும் மதிக்காமல் முட்டாள்தனமாக நடந்து வருவதை எல்லோரும் சுட்டிக் காட்டினர். இருந்தும் இப்பொழுதும் அதே சர்வாதிகாரப்போக்கில் உத்தரபிரதேசத்தில் புல்டோசர் மூலம் முஸ்லிம்களின் கடைகள், வீடுகள், நிறுவனங்கள் இடிக்கப்பட்டுள்ளன.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளை காலால் மிதித்து விட்டு தான் நினைத்தபடி நடந்துவரும் உத்தரபிரதேச அரசுக்கு யார் முடிவு கட்டுவது?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 300ஏ கூறுகிறது :- “சட்ட அதிகாரம் இல்லாமல் குடிமக்களின் சொத்துக்களை பறிக்கக் கூடாது.”

மனித உரிமைப் பாதுகாப்பு, அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கிறது. ஆனால், ஆளும் பாரதீய ஜனதா அரசு நிர்வாகத்தில் இல்லை. இது மனித உரிமை மீறல் இல்லையா? அரசியலமைப்பு சட்ட மீறல் இல்லையா? இதன் விளைவு : நாட்டை சர்வாதிகாரத்தில்தான் கொண்டுபோய் சேர்க்கும்!

இன்று நம் நாட்டை ஆளும் மோடி கும்பல்கள் அதால பாதாளத்திற்குள் நாட்டைக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். இந்திய ரூபாயின் சர்வதேச மதிப்பு மிக வேகமாக இறங்கிக் கொண்டிருக்கிறது. வளர்ச்சி என்பதெல்லாம் வெறும் வாயளவில் பேச்சாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. உண்மையில் நடப்பதென்னவோ வீழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. கிராமங்களில் வேலை பார்ப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்திருக்கிறது. இயற்கை வளங்கள் அழிந்து கொண்டிருக் கின்றன. நாட்டின் வளங்கள் எல்லாம் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்ஜினியரிங் படிப்பு முடித்து விட்டு வேலை இல்லாமல் ஆட்டோ ஓட்டுகிறார்கள். எம்.ஏ. படிப்பு முடித்துவிட்டு வேலை இல்லாமல் நடுரோட்டில் பக்கோடா விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை.

இந்நிலையில், வேலை இல்லாத இளைஞர்கள் மத்திய பாரதீய ஜனதா அரசுக்கு எதிராக போராடாமல் இருக்க நாட்டில் மத பிரச்சனையை ஏற்படுத்தி வருகிறது.

மோடி பிரதமரான பிறகு, கடந்த எட்டு ஆண்டுகளில் மட்டும் நமது நாட்டைச் சேர்ந்த எட்டு இலட்சம் பேர்கள் இந்திய குடியுரிமையை துறந்து, வெளிநாடுகளில் குடியேறி இருக்கிறார்கள். இந்தியாவில் எதிர்காலம் இல்லை என்று எண்ணி வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள்.

இந்நிலையில், சங்கிகள் சொல்கிறார்கள் :-

இந்தியா சில ஆண்டுகளில் வல்லரசாகி விடுமாம்!

தலையில் அடித்துக் கொள்ள வேண்டியதுதான்!

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)

**என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...**




**சீருக்கும்... சிறப்புக்கும்...**

# சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ
வலிமை தரவோ வேறு யாருமில்லை"

AL HUSSAM


www.alhussam.in

# AL HUSSAM

## Travel & Tours India (P) Ltd

*Experience makes the difference*

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்...
- அல்குர் ஆன் - 2 : 196



யா அல்லாஹ் ! எங்களுக்கு நிறைவான செல்வத்தையும் நோயற்ற வாழ்வையும்
தந்து ஹஜ்ஜை நிறைவேற்றக்கூடிய பாக்கியத்தை தந்தருள்வாயாக !... ஆமீன்

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center:** No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.


Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail:alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**


எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001


Touches Your Heart®
Remains Forever ...
PMP TEX INDIA
ESTD 1968
Ulama®
LUNGIES * VESTS * BRIEFS
OUR PRODUCTS
Follow us on
ULAMA FASHION
Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India